KALKI 7.2.99 ரூ. 4.50

கல்கி



ஸ்ரீ டிராவல்ஸ்

12/A ரெட்ஹில்ஸ் ரோடு, கொளத்தூர், சென்னை - 99.
Ph: 5378620/5584866 Fax: 5584866
E-மெயில் : Sritrave@ md3.vsnl.net.in

கோடை விடுமுறையை உங்கள் குடும்பத்துடன் களித்து மகிழ

ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் இப்பொழுதே திட்டமிடுங்கள்

அனல் பறக்கும் கோடையில் குளு குளு மலைப் பிரதேசங்கள்!

ST 4 புறப்படும் தேதி 21.04.1999

சென்னை – கல்கத்தா – டார்ஜிலிங் – கேங்க்டாக் (சிக்கிம்) – காத்மாண்டு (நேபாளம்) – வாரணாசி – அலகாபாத் – சென்னை.

பயணத் தொகை ரூபாய் 6,600/- 12 நாட்கள்

ST 5 புறப்படும் தேதி 7.05.1999

சென்னை – ஆக்ரா – டில்லி – சிம்லா – குலு – மணாலி – சண்டிகார் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – டில்லி – சென்னை.

பயணத் தொகை ரூபாய் 5,600/- 12 நாட்கள்

ST 6 *பக்தி மணம் பரப்பும் பரவச இறை உலா!*

புறப்படும் தேதி 24.05.1999

சென்னை – காசி – சாரநாத் – அலகாபாத் – ஜம்மு வைஷ்ணவி தேவி – அமிர்தசரஸ் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – கர்ணபிரயாக் – ருத்ரபிரயாக் – பத்ரிநாத் – கேதாரிநாத் – டில்லி – ஆக்ரா – சென்னை.

பயணத் தொகை ரூபாய் 6,600/- 15 நாட்கள்

- *அனைத்து இடங்களிலும் தரமான ஹோட்டல்களில் பிரத்தியேக ரூம்கள்*
- *மூன்று வேளையும் நேர் முழுவதும் தரமான சைவ உணவு*
- *எல்லா இடங்களிலும் நுழைவுக் கட்டணம் உட்பட*
- *நட்சத்திர ஹோட்டலில் பிரத்தியேக விருந்து*
- *ஊர் சுற்றி பார்க்க தரமான பஸ் வசதி*

கோடையில் கடுமையான நெரிசல் இருக்கும் என்பதால் பயணத் தேதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே முன் பணம் ரூபாய் **3,000/-** செலுத்துபவர்களுக்கு மட்டுமே கண்டிப்பாக இடங்கள் கிடைக்கும்

அனைத்து கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

L.T.C. வசதி உண்டு

(இரயிலில் **II tier A/C** வேண்டுபவர்களுக்கு பிரத்யேக வசதி செய்து கொடுக்கப்படும்)

ஒருமுறை ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் பயணம் செய்திடுங்கள்.

சுகமான அனுபவம் உங்களுக்கு காத்திருக்கிறது.

ஏமாற்றத்தைத் தவிர்க்க! உடனே முந்துங்கள்!

அத்வானி வருகிறார்.. ஆபத்தும் வருகிறது?

– கவலையில் கோவை வாசிகள்



கடந்த வருடம் பிப்ரவரி 14-ந் தேதி நடந்த குண்டு வெடிப்புக்குப் பின்னர் முதல்முறையாக அத்வானி கோவைக்கு வரவிருக்கிறார். இம்முறை பிப்ரவரி ஆறாம் தேதி. இதற்கு இடைப்பட்ட காலத்தில் இரண்டு முறை வருவதாக அறிவிக்கப்பட்டு, பயணம் ரத்து செய்யப்பட்டது. இப்போது அவர் வருவதாக அறிவிக்கப்பட்ட நாளுக்குப் பத்து நாட்கள் முன்னரே கோவையில் அதிரடி பாதுகாப்பு ஏற்பாடுகள். பா.ஜ.க.வினரின் வரவேற்பு சுவர் விளம்பரங்கள். பொதுக் கூட்டம் நடைபெறுவதாக உள்ள வ.உ.சி. பூங்கா மைதானம் இரண்டு வாரம் முன்பிருந்தே முழுப் பாதுகாப்புக்கு ஆட்பட்டு, பிப்ரவரி ஏழாம் தேதி வரை பொது மக்களுக்கு அனுமதியில்லை என்று சொல்லி விட்டார்கள். அருகில் உள்ள கடைகள் 4, 5, 6 தேதிகளில் பூட்டப்பட வேண்டும் என்று அரசுத் தரப்பில் வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்.

ஒரு டீக்கடையில், 'அத்வானி வருகிறாராமே?'



• வ.உ.சி. பூங்கா மைதானம் : வெறிச்!

என்று நாம் கேட்டதுதான் தாமதம். வாயில் வைத்த தம்ளரைச் சட்டென்று எடுத்துவிட்டு ஒருவர், "அத்வானியா? எதுக்கு வர்றாராம்? நாலு வார்த்தை பேசுவார். பத்துக் குண்டு வெடிக்கும். நூறு பேர் சாவோம். கோடிக் கணக்கான பேர் நிம்மதி கெடும். தேவையா?" என்றார் உணர்ச்சி பொங்க.

"எங்கே சார். இப்பவே எங்களை ட்ரஸ் ஸைக் (யூனிபார்ம்) கழற்ற விடமாட்டேங்

Exclu

ஓரிஸாவில் எரித்துக் கொல்லப்பட்ட

கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் கல்கிக்கு அளித்த




• மூர்த்தி, கணேசன், ஜனா, சுந்தர்ராஜன்

கறாங்க. ஒரு நாளைக்கு கிடைக்கிற அதிகபட்ச ஒய்வே ரெண்டு மூணு மணி நேரம்தான். இனி அவர் வந்து போற வரைக்கும் என்னவெல்லாம் அவஸ்தையோ?'' என்பது போலீஸ்காரர்களின் புலம்பல். நாம் போனபோது பூங்காவைச் சுற்றி 30 – 40 போலீசார், பாதுகாப்பாக நின்று கொண்டிருந்தனர்.

''கோவை இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. இப்போது அத்வானி வருகையினால் பழையபடி ஏதும் அசம்பாவிதம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் பரவி நிற்கிறது. பரபரப்பு எண்ணங்கள் மறைந்து வரும் சூழலில், அதே பிப்ரவரி மாதத்திலேயே அத்வானி வருவதால் பாதுகாப்பு என்ற பெயரில் காவல் துறை மேலும் மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகிறது. அத்வானி வருகிறாரோ இல்லையோ, அவருடன் ஆபத்தும் வருகிறதோ இல்லையோ, மக்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தி அல்லலுற வைக்கிற நிகழ்ச்சியே இது'' என்கிறார் கோவை தி.க. மாவட்டப் பொதுச் செயலாளர் கு. ராம கிருஷ்ணன்.



• நடராஜன்



• நந்தகுமார்


''மறுபடியும் அத்வானி வர்றாரான்னு ஜனங்க அதிர்ச்சியோட கேட்கறது வாஸ்தவந்தான். மறுபடியும் குண்டுக வெடிக்கப் போகுதாங்கற மாதிரியான பேச்சு இது. இதை இப்படியே விட்டா எப்படி சார்? அவர் வரணும். அதுதான் நாங்க எதிர்பார்ப்பது. இங்கே ஒரு கிரிக்கெட் மேட்ச் பார்க்கப் போறவன் தன்னோட சரித்திரத்தையே அங்கே புள்ளி விவரமா கொடுக்க வேண்டியிருக்குன்னா வெட்கப்பட வேண்டியது நாம்தான். அதேமாதிரி நம்ம தேசத்து உள்துறை அமைச்சர் இங்கே வந்து போக, எதிரான சூழல் இருக்குன்னா அதை எப்படிங்க ஏத்துக்க முடியும்? இப்ப அவர் வந்து போன பின்னாடியாவது கோய

sive!

ஆஸ்திரேலியப் பாதிரியாரின் மனைவி பிரத்தியேகப் பேட்டி அடுத்த வாரம்!

முத்தூர் பழைய நிலைமைக்குத் திரும்பாதா? தொழில் நடக்காதா?ன்னுதான் நாங்க எல்லாம் எதிர்பார்த்துட்டு இருக்கோம்'' என்கிறார்கள் மூர்த்தி, கணேசன், ஜனார்த்தனன், சுந்தரராஜன் ஆகிய ஆட்டோ டிரைவர்கள். சென்ற முறை குண்டு வெடித்த இடமான ஆர்.வி. ஹோட்டல் ஸ்டேண்ட் வாசிகள்.

''இப்படிப்பட்ட டென்ஷனான சூழலில் இவர் வரவேண்டிய அவசியமே இல்லை. அவர்களின் கட்சி கூட இங்கே பலமாக மதப்பிரசாரங்களைச் செய்து வரும் சூழ்நிலையில், அத்வானியின் வருகை வேறு மாதிரியான சிக்கல்களைத் தோற்றுவிக்கவே வழிவகுக்கும். மக்கள் மத்தியில் கடந்த கால பாதிப்புகளின் பயம் நிறையவே இருக்கிறது. அதனைக் கூடுதலாக்குவது நல்லதல்ல'' என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நடராஜன் சொன்னாலும், உள்ளூர் போலீசார் சிலரின் கருத்தோ, வேறு மாதிரியாக உள்ளது.



• கு. ராமகிருஷ்ணன்

''இது சேலஞ்ச்! கௌரவப் பிரச்னை. ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும், ஒரு தீவிரவாத அமைப்புக்குமான போட்டி என்றில்லாமல் சட்டம் - ஒழுங்கு எப்படி துரிதமாக இங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டவே இதை சவாலாக நாங்கள் மட்டுமல்ல; ஜனங்களும் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்கின்றனர்.

'அத்வானி இப்போது வருவதற்கு அவசியம்தான் என்ன?' என்று கோவை மாவட்ட பா.ஜ.க. செயலாளர் நந்தகுமாரைச் சந்தித்துக் கேட்டோம்.

''கடந்த பிப்ரவரி 14 குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள், அத்வானி அவர்களைச் சந்தித்துக் கருத்துக்கள் கூற ஆவல் கொண்டுள்ளனர் என்பதே நாங்கள் விசாரித்த அளவில் உண்மை. நீங்கள் சுட்டிக்காட்டுகிற கோவை மக்களின் பயம், பீதி, கவலை ஆகியவை தேவையற்றது. தற்போது தமிழக அரசு சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது. கடந்த டிசம்பர் - 6 அதற்கு ஒரு சரியான உதாரணம். குறிப்பாக வியாபாரப் பிரமுகர்கள், தொழில் வல்லுனர்கள் போன்றோர், அத்வானி வந்து சென்ற பிறகாவது பொதுமக்கள் பயம் நீங்கி, ஒரு வருடத்திற்கு முன் இருந்தது போல் சகஜ நிலைக்கு வருவார்கள் என்று உறுதியாக நம்புகின்றனர். நமக்குள் இருக்கிற கவலைகளை நம் உள்துறை அமைச்சரிடம் எடுத்துக் கூறி நமக்குத் தேவையானவற்றை மத்திய அரசிடம் பெறுவதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. மேலும் தீவிரவாதம் உள்ள ஒரு இடத்திற்குத் திரும்பவும் அவர் துணிந்து வருகிறாரென்றால், இது நம் ஜனங்களின் அச்சம் போக்க, மனத்தைத் தெளிவுபடுத்த! அதைக் கண்டிப்பாக 'நம் மக்கள் அத்வானி வருகைக்குப் பின் புரிந்து கொள்வார்கள்'' என்றார் அழுத்தமாக. ●

பேட்டி, படங்கள் :
கா. சு. வேலாயுதன்



துறுதுறுப்பான முகம். துளியும் மேக்-அப் இல்லை. முதல் தடவையானாலும், பல நாள் பழகியது போன்ற உணர்வை ஏற்படுத்தி விடுகிறார். எதைப் பற்றிக் கேட்டாலும் வழவழா பிசினஸ் கிடையாது. பளிச்சென்று, வெளிப்படையாக பதில் வருகிறது. கனவுக் கன்னியாக இருந்து ஒரு பெரிய சரிவுக்குப்பின் இரண்டாவது இன்னிங்ஸில் போராடி மீண்டும் ஜெயித்திருக்கும் குஷ்புவுடன் ஒரு சந்திப்பு:

இரண்டாவது இன்னிங்ஸ்!

''உங்கள் சினிமா வாழ்க்கையில் ஒரு தொய்வு ஏற்பட்டு, பின் இரண்டாவது ரவுண்டு வந்து வெற்றி பெற்றுள்ளீர்கள்! இது எப்படி சாத்தியமானது?''

''தொய்வு ஏற்பட்ட கால கட்டத்தில், மறுபடியும் திரையுலகப் பிரவேசம் செய்ய வேண்டும் என்ற வெறி எனக்குள்ளே உருவானது. என் குடும்பத்தினர், 'உனக்குத் திறமை இருக்கிறது; உன்னால் மறுபடியும் சாதிக்க முடியும்' என்று ஊக்குவித்ததுதான் காரணம் என நினைக்கிறேன். அதற்கேற்ப எனக்கு கேரக்டர்கள் அமைந்தன.''

''வயசு என்பது ஒரு நடிகைக்கு முதல் எதிரி. ஆனால் அது ஒரு பொருட்டல்ல என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

''வந்த புதுசில் நான் ஒரு கிளாமர் பதுமையாகத்தான் கருதப்பட்டேன். டைரக்டர்களும் சரி, ரசிகர்களும் சரி, என்னிடமிருந்து பெரிசாக நடிப்பை எதிர்பார்க்கவில்லை. ஆனால் இப்போது அப்படியில்லை. எனவே, எனக்கு இப்போது அவர்களுடைய எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற பொறுப்பு இருக்கிறது. அதுவே, வயதை ஒதுக்கி விட்டு, திறமையை முன்னிறுத்தக் காரணமாக இருப்பதாக நினைக்கிறேன்.''

''ஒரு கிளாமர் பதுமையிடமிருந்து நடிப்புத் திறமையை எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டது?''

''சின்னத்தம்பிதான் என் திரை வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை. என்னாலும் நடிப்பை வெளிப்படுத்த முடியும் என்று நிரூபிக்க முடிந்தது. ஆனாலும் – அதற்குப் பின்னரும் எனக்கு நடிப்புத் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பான படங்கள் அமையவில்லை. மறுபடியும் இயக்குனர் கே.எஸ். ரவிகுமாரின் புருஷலட்சணம் மூலம் அந்த வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின்தான் சீரியஸ் ரோல்கள் நிறைய வர ஆரம்பித்தன. இப்போது நினைத்துப் பார்க்கிறேன். முதலில் கனகாதான், சின்னத்தம்பியில் நடிப்பதாக இருந்ததாம். ஆனால் ஏனோ அவருக்குப் பதிலாக என்னை புக் பண்ணினார்கள். படம் முடியும் தருணத்தில்தான் இந்த விஷயம் எனக்குத் தெரியும். கனகா இழந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எத்தனை அதிர்ஷ்டம் என்று நான் பலமுறை எண்ணி ஆச்சரியப்பட்டதுண்டு.''

''கதைகளில் உங்கள் கேரக்டர் முக்கியத்துவம் வாய்ந்ததா? நடிப்பதற்கு ஸ்கோப் உள்ளதா என்றெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் இப்போது படங்களை

குஷ்பு ஸ்பெஷல் பேட்டி!

ஒப்புக் கொள்ளுகிறீர்களா?"

"இல்லை. குஷ்பு நடிப்பதாலேயே ஒரு படம் வெற்றி பெற்று விடும் என்று நான் நினைக்கவில்லை. அப்படி நினைப்பது முட்டாள்தனம். படத்தின் வெற்றிக்கு நானும் ஏதோ ஒருவிதத்தில் உதவியிருக்கிறேன் என்றே நான் எடுத்துக் கொள்ளுவேன். அப்புறம் எதன் அடிப்படையில் படங்களை ஒப்புக் கொள்ளுகிறேன் என்று கேட்கலாம். படத்தின் டைரக்டர், தயாரிப்பாளர், ஹீரோ போன்றவற்றைப் பார்க்கிறேன். சினிமா உலகம் ஆணாதிக்கம் நிறைந்தது என்பதை மறந்து விடக் கூடாது."

"லைட்டான கேரக்டரில் வந்து, நடிப்புக்கு முக்கியத்துவம் தராமல், நடித்துக் கொண்டிருந்த கட்டத்தில், இது ரொம்ப நாள் நீடிக்காது என்ற பயம் உங்களுக்கு இருந்ததா?"

"அதென்னமோ தெரியவில்லை. எனக்கு அப்படி ஒருவித பயமே இல்லை. அந்த மாதிரி பயம் வருவதற்கு முன்னதாகவே, நல்ல கேரக்டர் ரோல்களாக எனக்கு வர ஆரம்பித்து விட்டன. அப்படி வராமல் இருந்திருந்தால், நான் ஓரங்கட்டப்பட்டிருப்பேனோ என்னவோ."

"நீங்கள் நடித்த பழைய படங்களைப் பார்க்கிற போது ஏன் இதில் நடித்தோம் என்ற எண்ணம் ஏற்படுமா?"

"ஓ எஸ்! பெரிய பேனர் பெரிய ஸ்டார், டைரக்டர் என்று நம்பி ஒப்புக் கொண்டாலும், அதன்பின் பார்க்கிற போது, இன்னும் சிறப்பாக நடித்திருக்கலாம் என்று தோன்



றும்; இந்தப் படத்தில் நமக்கு உருப்படியாகப் பங்கு ஒன்றுமில்லையே! ஒப்புக் கொள்ளாமல் இருந்திருக்கலாமோ என்றும் தோன்றும்."

"ஹிந்தியிலிருந்து தெலுங்கு, கன்னடம், தமிழ் என்று தாவிய நீங்கள், தமிழிலேயே நிரந்தரமாய்த் தங்கிவிட முடிவெடுத்தது ஏன்?"

"ஹிந்தியிலிருந்து தெலுங்குக்கு வந்த போது, நாகார்ஜுனா போன்ற இளம் ஹீரோக்களுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. படங்கள் ஹிட் ஆயின. அதைத் தொடர்ந்து, கன்னடத்தில் அழைத்தார்கள். ஒரே வருடத்தில் பத்துப் படங்கள்! அத்தனை ஹீரோக்களுடனும் நடித்தாகி விட்டது. கன்னடத் திரையுலகத்தில் பெரிய அளவில் ஸ்கோப் இல்லை என்றதும் தமிழுக்கு வந்தேன். வெரைட்டியான கேரக்டர்கள், பல ஹீரோக்கள், பல டைரக்டர்கள் என்று நிறைய வாய்ப்புகள் வரவே, இனி தமிழ்தான் நமக்கு என்று தீர்மானித்து விட்டேன். சென்னையிலேயே வீடு வாங்கிக் கொண்டு செட்டிலாகி விட்டேன். தமிழ் பேசவும், படிக்கவும், எழுதவும் கூடக் கற்றுக் கொண்டு விட்டேன்."

"இந்தியில் நடித்திருந்தால் இன்னும் நிறைய சம்பாதித்திருக்கலாமே என்று நினைப்பதுண்டா?"

"இல்லை. அந்த எண்ணமே எனக்கு வந்ததில்லை. இந்தியிலோ, தெலுங்கிலோ தொடர்ந்திருந்தால், இன்னும் நிறைய சம்பாதித்திருக்கலாம் என்பது வாஸ்தவம். நான்



மாதுரி என்றால் முதல்வரும் இறங்குவார்!

● 'ஜெயிலில் இருந்து பெயிலில் வெளிவரும் போது ஒரு சுற்று பருமனாகி விடுகிறார் லாலு பிரசாத் யாதவ்' என்பது பீகார் பத்திரிகைக்காரர்களின் கணிப்பு. காரணம்? ஜெயிலுக்குள்ளே லாலுவுக்கு மூக்கைப் பிடிக்கச் சாப்பிடுவது, டி.வி. பார்ப்பது, தூங்குவது – இதுதானே வேலை? ராப்ரி தேவி தினமும் ஸ்பெஷல் ஜூஸ், உணவு ஐட்டங்கள் எல்லாம் அனுப்பி விடுவாராம்!

● அண்மையில் திருட்டு வீடியோவை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மனு ஒன்றை அளிக்க சல்மான் கான்; சஞ்சய் தத் உட்பட பல மும்பை நட்சத்திரங்கள் அடங்கிய குழு ஒன்று மராட்டிய முதலமைச்சர் மனோகர் ஜோஷியைச் சந்திக்க அவரது அலுவலகத்துக்குப் போனது. 'முதலமைச்சர் பிஸி; சந்திக்க இயலாது' என்று அவரது அலுவலகத்தில் சொல்லி விட்டார்களாம். உடனே சஞ்சய் தத், சல்மான் கான் இருவரும் ஒரு ஐடியா பண்ணினார்களாம். "ஜோஷிஜீ! மாதுரி தீட்சித் உங்களைக் காணக் காத்திருக்கிறார்" என்று உள்ளே இருக்கும் முதலமைச்சர் காதில் விழும்படி உரக்கக் கத்தினார்களாம். சில நிமிடங்களில் கூப்பிய கரங்களுடன், நட்சத்திரங்களைச் சந்திக்க எழுந்து வந்து விட்டாராம் மனோகர் ஜோஷி! ஹுசைனின் இளவல்?

● கட்சிப் பொறுப்புகளில் முப்பத்து மூன்று சதவீதத்தைப் பெண்களுக்கு ஒதுக்கினாலும் ஒதுக்கினார் சோனியா காந்தி. கட்சிப் புள்ளிகள் அஸ்தியில் ஜுரம்! ஒருவேளை பதவியிலிருந்து தாம் கழற்றி விடப்பட்டாலும் தம் மனைவியை ஏதாவது ஒரு பொறுப்பில் அமர்த்தி விடுவது என்கிற கோணத்தில் தீவிரமாகத் திரைமறைவு முயற்சியில் இறங்கியிருக்கிறார்களாம்!

● டெல்லி நகரத்துப் பிரச்னைகள் எதைப் பற்றிப் பேசினாலும், ரெடிமேடாக ஒரு பதிலைச் சொல்லி விடுகிறார் டெல்லி முதல்வர் ஷீலா தீட்சித். "இது பல வருடகாலமாக இருக்கிற பிரச்னை. இதனை அத்தனை சுலபமாக ஒரே நாளில் தீர்த்து விட முடியுமா? பொறுமையுடன் இருங்கள்; ஆவன செய்யப்படும்."

தாமரைக் கட்சியைத் தோற்கடித்து விட்டு, பதவிக்கு வந்தவர் தாமரை இலைத் தண்ணீர் போலப் பேசுகிறார்!

— நியூஸ் பையன்

+2 திருப்பு முனை TURNING POINT

ஆம்! +2 என்பது வாழ்க்கையின் திருப்புமுனைதான். +2 தேர்விலிருந்து கல்லூரி சேரும் வரை உள்ள 2 மாதங்கள்தான், ஒரு மாணவனின் வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போகிறது. இதை உணர்ந்த ஈஸி கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம், +2 மாணவர்களுக்காக, பல தேர்ந்த வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட புத்தகங்களைக் கொண்டு வருகிறது. **ஈஸி நுழைவுத் தேர்வு வழிகாட்டி** (TNPCEE) இந்த புத்தகத்தில் மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற அனைத்து நுழைவுத் தேர்வுகளுக்கும் ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட 12,000 கேள்வி பதில்கள் உள்ளன. இத்துடன் **"+2க்கு பிறகு..."** (தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கோர்ஸ்கள், வேலை வாய்ப்பு, சம்பளம் பற்றி முழு விவரங்களுடன் வரும் முதல் புத்தகம்) மற்றும், மெர்வின் எழுதிய **"நுழைவுத் தேர்வு சிறப்பாக செய்வது எப்படி?"** – என்ற **இரண்டு புத்தகங்கள் இலவசமாகக் கிடைக்கின்றன.**

இந்த புத்தகங்களைப் பற்றி சென்னையில் உள்ள பிரபல பள்ளி முதல்வர்களின் கருத்து:

திருமதி. சௌந்தரி துரையப்பா, முதல்வர் SBOA மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



ஈஸி நிறுவனத்தின் இந்த புத்தகத்தைப் படிக்க... படிக்க... அவ்வளவு விபரங் கள், எனக்கே தெரியாத பல கோர்ஸ்களைப் பற்றியும் அதனால் கிடைக்கும் வேலை வாய்ப்பு, சம்பளம் போன்ற அனைத்து விபரங்களும் மிகவும் நுணுக்க மாகத் தரபட்டுள்ளது. It is a Eye opener for every +2 students and their parents.

திருமதி. சீதாலெட்சுமி, முதல்வர் Dr. அழகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



இவ்வளவு கோர்ஸ்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றனவா என வியக்கும் வகையில், நூற்றுக்கும் மேற்பட்ட கோர்ஸ்களைப் பற்றிய அனைத்து தகவல்களும் உள்ளன. பைலட், ஏர்லைன் கோர்ஸ், போர்ட் மேனேஜ்மெண்ட், மெரைன் இன்ஜினியரிங், ஃபேஷன் டெக்னாலஜி, சேல்ஸ்டெக், ஆர்மி, நேவி, மருத்துவத்தில் அனைத்து பிரிவுகள், டெக்னாலஜியில் உள்ள பிரிவுகள். அவை எங்கு இருக்கின்றன, எப்படி சேர்வது, வேலை வாய்ப்பு எப்படி? சம்பளம், எத்தனை ஆண்டுகள் படிக்க வேண்டும், எவ்வளவு செலவாகும் போன்ற தகவல்களும் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு +2, +1 மாணவர்களுக்கும் கலங்கரை விளக்கமாக பயன்படும் என்பது திண்ணம்.

திருமதி. செண்பகம், முதல்வர், வள்ளியம்மாள் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



40 வருடங்களாக கல்வித் துறையில் பணியாற்றி வருகிறேன். என் அனுபவத்தில் இப்படி ஒரு புத்தகத்தைப் பார்த்ததில்லை. ஒவ்வொரு வீட்டிலும் அகராதி இருப்பது போல் இப்புத்தகம் இருக்க வேண்டும். அவ்வளவு பயன்தரக்கூடியது. இதை படிக்காத +2 மாணவர்களுக்கு பேரிழப்பாக இருக்கும்.

ரூ. 400/- விலையுள்ள இம்மூன்று புத்தகங்கள் அறிமுக விலையாக உங்களுக்கு ரூ. 300/-க்கே கிடைக்கின்றது. இச்சலுகை பிப்ரவரி 15-ந் தேதி வரையே.

* தமிழ்/ஆங்கிலம் மீடியம் தனித்தனி புத்தகங்கள். மீடியம் குறிப்பிடவும்.
* முதலில் அனுப்புகின்ற 500 பேருக்கு திரு. வெ. இறையன்பு IAS அவர்கள் எழுதிய "IAS தேர்வும் அணுகுமுறையும்" என்ற புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்படும்.
* உங்கள் முகவரியுடன் 'Easy Communications' என்ற பெயரில் ரூ. 300 க்கான DD/MO/Cash தபாலிலோ அல்லது நேரிலோ முன் பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். முகவரி :

'Easy Communications', A-4, கிரிஜா அபார்ட்மெண்ட் 50-A, 100அடி ரோடு, MMDA, சென்னை - 106 போன் : 4843796

ஆர்டரின் பேரில் மட்டுமே கிடைக்கும். வேறு எங்கும் கிடைக்காது. சில ஆயிரம் பிரதிகளே உள்ளன. முந்துங்கள்!

"300 ரூபாயில் உங்களது மகன்/மகளின் மகிழ்ச்சியான வருங்காலத்திற்கு ஓர் அஸ்திவாரம்.

ADVT

பேராசைக்காரி இல்லை. அதற்கு என் வளர்ப்பும் குடும்பச் சூழ்நிலையும்தான் காரணம்.''

''இத்தனை வருடங்களாக நடித்துக் கொண்டிருந்தாலும், தேசிய அளவில் ஒரு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்ற குறை உங்களுக்கு உண்டா?''

''என்னுடைய திறமைக்கு நான் இந்த அளவுக்கு வாழ்க்கையில் உயர்ந்திருப்பதே பெரிய விஷயம். அதுவரை எனக்கு ரொம்ப திருப்தி. சந்தோஷம். பன்னிரண்டு வருடமாய் நடித்துக் கொண்டிருக்கிறாய். ஒரு தடவை கூட தேசிய விருது வாங்கினது இல்லையே! என்று சிலர் என்னிடம் கேட்பார்கள். 'தேசிய விருதை விடுங்கள். பிலிம்பேர் விருது கூட நான் வாங்கினதில்லை' என்று நான் பதில் சொல்லுவேன். வருஷா வருஷம் பிலிம் பேர் விருது விழாவுக்குச் செல்லும் போது, அதன் ஆசிரியர் காலித் முகம் மதிடம் நான் தமாஷாக 'வருடந்தோறும் யாருக்காவது விருது கொடுக்க என்னைக் கூப்பிடுகிறீர்கள். எனக்கு ஒரு தடவை யாவது விருது தரக் கூடாதா?' என்பேன். அவரும், 'அதற்கேற்ப திறமையை வெளிப் படுத்துங்கள்; நிச்சயம் விருது கிடைக் கும்! ஆல் தி பெஸ்ட்' என்பார். விருது என்பது தகுதியுடைய வேறு ஒருவருக்குத் தரப்படுகிறபோது, நான் வருத்தப்பட லாமா?''

''நடிகை என்றால், சாதாரண மக்களிட மிருந்து விலகின வாழ்க்கைதான். உங் களுக்கு இந்த நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிக் கொஞ்ச மேனும் அபிப்பிராயம் உள்ளதா?''

''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நான் தினமும் பேப்பர் படிக்கிறேன். இந்த நாட்டில் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியும். நாடு நல்ல வழியில் செல்லவில் லையே என்று எனக்கும் கவலை உண்டு. இங்கே சேவை செய்ய வந்த ஆஸ்திரேலியக் குடும்பத்தை உயிருடன் எரிப்பது என்பது கொடூரத்தின் உச்சம்! இந்து, முஸ்லீம் பிரச்னை இப்போது, இந்து – கிறிஸ்தவ மோதல் என்றும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமாக உள்ளது. இதற்கெல்லாம் மக்கள் மீது அக்கறை இல்லாத அரசியல்வாதிகள் தான் காரணம். அதிகார விளையாட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அரசியல் வாதிகள். தங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். தேர்தலில், கிரிமினல் பின்னணி கொண்டவர் என்று தெரிந்தே டிக்கெட் கொடுக்கிறார்கள். காரணம் என்ன? ஜாதி அரசியல். இந்த நாட்டின் திறமையான தலைவர் என்று நான் இந்திரா காந்தியைத்தான் சொல்லுவேன். அவருடைய தைரியம் யாருக்கும் வராது.''

''நீங்கள் தேர்தலில் வோட்டுப் போடு கிறீர்களா?''

''ஓ.எஸ். ஒவ்வொரு தேர்தலிலும் வோட்டுப் போட்டுக் கொண்டுதான் இருக் கிறேன்.''

''நாட்டு நடப்பைப் பற்றி எல்லாம் தெளி வாகப் பேசுகிற நீங்கள், சொந்த வாழ்க் கையில் – குறிப்பாக திருமண விஷயத்தில் மட்டும் தடுமாற்றம் கொள்வது ஏன்?''


''தவறு என்பது வாழ்க்கையில் சகஜம் தானே? அந்தந்த சமயத்தில் சரி என்று படு வதை நான் செய்கிறேன். நடந்து முடிந்து விட்ட விஷயங்களுக்காக நான் வருத்தப்படு வதில்லை. அதே நேரம், நான் திருமண விஷயத்தில் தடுமாறுவதாகச் சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டேன். என் வாழ்க் கையில், நான் என்ன முடிவு எடுக்க வேண் டும் என்று அடுத்தவர் எனக்கு அட்வைஸ் செய்யத் தேவையில்லை. முதல் தடவை முடிவு எடுத்தபோதும், எனக்கு வருத்த மில்லை. சந்தோஷமே! இப்போது எடுத் துள்ள முடிவும் அப்படியே.''

''திருமணம் செய்து கொள்ளுவது என்று தீர்மானித்தால், திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதானே? எதற்கு தள்ளிப் போட்டு, வேண்டாத யூகங்களுக்கு இடம் தருகிறீர்கள்?''

''எங்களைப் பற்றி பத்திரிகைகள் எழுது கின்றன என்றால் நாங்கள் இரண்டு பேருமே மக்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதாகத்தானே அர்த்தம்? அவரும் நானும் காந்தங்களின் எதிர் துருவங்கள் போல! எனவேதான் ஒருவருக்கொருவர் பிடித்திருக்கிறது. ஆனால், சுந்தருக்கென்று சில கமிட்மென்ட்ஸ் உள்ளன. அதே போலவே எனக்கும். அவை முடிந்தபின், சரியான நேரம் என்று நாங்கள் நினைக்கிற போது, எங்கள் திருமணம் நடக்கும்.''

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **ப்ரவீன்குமார்**



வேண்டாம், வருது!

நாவலாசிரியை ஷோபா டே, சென்னை வந்திருந்தார். 'லேண்ட் மார்க்' புத்தகக் கடையில் வாசகர் சந்திப்பினை முடித்துவிட்டு, சுமார் அரை மணி நேரம் நம்முடன் பேசினார். பேட்டியிலிருந்து :

''மிகவும் இயந்திரத்தனமான வாழ்க்கை முறை கொண்ட மும்பையில், சிருஷ்டிகர்த்தவாக இருப்பது கஷ்டமாக இல்லையா?''

''மும்பை நகரம் கொஞ்சம் வித்தியாசமானது. நீ யார், உன் பின்னணி என்ன? உனக்கு யாருடைய சிபாரிசு இருக்கிறது? என்றெல்லாம் அது பார்ப்பது இல்லை. உன்னிடம் திறமை இருக்கிறதா என்றுதான் பார்க்கிறது. உன் விடாமுயற்சியை அது சோதிக்கிறது. உன் தோல்வியை அது ஏற்பதில்லை. வாழ்க்கையை ஒரு சவாலாக நினைத்து, அதில் வெற்றி பெற வேண்டும் என்ற உந்துதல் கொண்டவர்களுக்கு மும்பை மிகவும் பிடிக்கும். நானும் அப்படித்தான்.''

''உங்கள் எழுத்துக்கு என்ன நோக்கம்?''

''நிச்சயமாக சமுதாயத்தை என் எழுத்துக்களால் மாற்றி விட முடியும் என்று நான் நம்பவில்லை. என் கருத்துக்களை நான் தெரிவிக்கிறேன். அதில் வாசகர்கள் ஏதாவது மெஸேஜ் இருப்பதாக நினைத்தால் எடுத்துக் கொள்ளலாம். நான் எதையும் எவர் மீதும் திணிக்க விரும்பவில்லை.''

''நாவல், நாவல் அல்லாத விஷயங்கள்,



எதைப்பற்றி அதிகம் எழுதப் பிடிக்கிறது?''

''எனக்கு எழுதப் பிடிக்கிறது. அது நாவலா, வேறு விஷயமா என்பது அவ்வப்போது முடிவாகிறது.''

''உங்கள் வாழ்க்கை அனுபவத்தை எழுதலாம் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?''

''பெங்குயின் நிறுவனத்திலிருந்து, 'உங்களுக்கு ஐம்பது வயது ஆகிறதே! வாழ்க்கை அனுபவங்களை எழுத இது சரியான தருணம்' என்று கேட்டபோது நான் தயங்கினேன். ஆனால் அவர்கள் வற்புறுத்தியபோது சம்மதித்தேன். எழுதி முடித்தபோது, அட! இத்தனை விஷயங்கள் நம்மிடம் இருக்கிறதா, சொல்லுவதற்கு' என்ற வியப்பு ஏற்பட்டது.

''யாரைப் பற்றியாவது, முதலில் சொல்ல நினைத்து, அதன்பின், வீண் பிரச்னை எதற்காக என்று விட்டு விட்டிருக்கிறீர்களா?''

''இல்லை. ஒளிவு மறைவு இல்லாமல், என் அனுபவங்களை வெளிப்படையாக, தாட்சண்யமின்றி நான் சொல்லியிருக்கிறேன். யாரையும் விட்டுவிடவில்லை.''

''நீங்கள் குறிப்பிட்ட நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு எழுதுவீர்களா?''

''என் குழந்தைகளில் இரண்டு பேர் படிக்கிறார்கள். மற்றவர்கள் வேலைக்குப் போகிறார்கள். அவர்கள் எல்லாம் புறப்பட்டுப் போன பின், வீட்டு வேலைகளையெல்லாம் முடித்து விட்டு, எழுத ஆரம்பிப்பேன். மாலை அவர்கள் வரும் வரை எழுதுவேன். அப்புறம் அவர்களுடன் நேரம் போய் விடும். இரவு கண் விழித்து எழுதுவதென்பது கிடையாது.''

''உங்கள் எழுத்துக்கள் பற்றிய விமர்சனங்களை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?''

''நடுநிலையோடு எழுதப்படும் விமர்சனங்களை நான் அக்கறையுடன் படித்து, குறிப்பிடப்படும் தவறுகளைத் தவிர்ப்பதில் அக்கறை காட்டுகிறேன். பாராட்டும் படியான விமர்சனங்கள் என்னை மகிழ்ச்சியடையச் செய்கின்றன. உள்நோக்கத்துடன் எழுதப்படும் கடுமையான விமர்சனங்களை நான் ஒதுக்கி விடுகிறேன்.''

''இவரைப் போல வர வேண்டும்'' என்று இளம் வயதில் யாரையாவது நினைத்தது உண்டா?''

''வாசகர்களுடனான சந்திப்பு ஒவ்வொன்றிலும் 'உங்களுடைய 'ரோல் மாடல்' யார் என்ற கேள்வியை என்னிடம் தவறாமல் கேட்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்வது என்று நான் இனிமேல்தான் கற்பனை செய்து தீர்மானிக்க வேண்டும். (சிரிப்பு) ஒவ்வொரு கட்டத்தில், ஒவ்வொரு விஷயத்துக்காக, ஒவ்வொருவரை எனக்குப் பிடித்தது. தட்ஸ் ஆல்.''

''ஒரு புத்தகம் எழுதுவதற்கு முன்பு, அந்த விஷயம் பற்றி முழுமையாக ரிசர்ச் செய்து, தகவல்களைச் சேகரித்துக் கொள்ளும் பழக்கம் உண்டா?''

''நான் எடுத்துக் கொள்ளும் சப்ஜெக்ட்களுக்கு அப்படிப்பட்ட ரிசர்ச் அவசியமாக

இருக்கவில்லை. எனவே நான் ஆராய்ச்சி எல்லாம் மேற்கொள்வதில்லை."

"பெண்களுக்கான முப்பத்து மூன்று சதவீத இட ஒதுக்கீடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"அவசியமில்லாத ஒன்று. இன்று பெண்களுக்கு அத்தியாவசியமானது கல்வி அறிவு. அதை அளித்தால் போதும். அவர்கள் முன்னேறி, ஆண்களுடன் போட்டி போட்டு ஜெயித்துவிடுவார்கள். பெண்களுக்கு என்று இல்லை, எதிலுமே இட ஒதுக்கீடு அவசியமில்லை என்பது என் கருத்து. எல்லோருக்கும் ஒரேமாதிரியான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்."

"நீங்கள் பா.ஜ.க.வில் சேரப் போவதாகச் சொல்லப்படுகிறதே?"

"ஆதாரமற்ற செய்தி. நான் நானாகவே இருக்க விரும்புகிறேன். என் கருத்துச் சுதந்தரத்துக்கு யாரும் தடை போடுவதை நான் விரும்பவில்லை. பி.ஜே.பி என்று இல்லை, எந்த அரசியல் கட்சியிலும் நான் சேருகிற எண்ணமில்லை."

"உங்கள் எழுத்து மூலம் நிறைய பணமும், பேரும் கிடைத்தாலும் விருது என்ற அங்கீகாரம் கிடைக்காதது பற்றி உங்களுக்கு வருத்தம் உண்டா?"

"இல்லை. எனக்கு விருது வேண்டாம். நான் அதற்காக எழுதுவதில்லை. லட்சக்கணக்கான வாசகர்களைப் பெற்றிருப்பதையே நான் மிகப் பெரிய விருதாகக் கருதுகிறேன்."

"உங்களுக்கு சிறிய குடும்பம் என்கிற கொள்கையில் நம்பிக்கை இல்லையா?"

(சிரிப்பு) "ஆறு குழந்தைகள் எனக்கு! குழந்தைகளுக்கு சிறந்த கல்வியும், வாழ்க்கையும் அளிப்பதற்குரிய மனமும் வளமும் இருந்தால், எண்ணிக்கை ஒரு பொருட்டல்ல என்பது என் சித்தாந்தம்" ●

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
படம்: **ப்ரவீன்குமார்**

● ஆங்கிலக் கதை எழுதும் இந்திய எழுத்தாளர்கள் வெளிநாட்டு வாசகர்களை மனதில் கொண்டுதான் எழுதுகிறாற்போல் இருக்கிறதே?

சத்யஜித்ரேவின் பதேர் பாஞ்சாலியும், மீரா நாயரின் காமசூத்ராவும் அல்லது மிஞ்சிப் போனால் ஷேகர் கபூரின் பாண்டிட் குவீனும்தான் இந்தியா என்பது வெளிநாட்டினரின் மனதில் பதிந்திருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய வகையில் எழுதிவிட்டுப் போவோமே என்று நினைத்து இங்கு பலர் செயல்படுவது உண்மைதான்.

● புக்கர் பரிசு பெற்ற அருந்ததி ராயின் **God of Small Things** நாவல் பற்றிய உங்கள் கருத்து என்ன?

சரியான முறையில், சரியான ஏஜெண்டின் மூலம், சரியான நேரத்தில் (சுதந்திரப் பொன்விழா ஆண்டு என்பதால் உலகின் கவனம் இந்தியா மீது பதிந்த நேரம்) வெளியிடப்பட்ட புத்திசாலித்தனமான முயற்சி. இப்படிச் சொல்வதால் அந்த நூலை நான் குறைத்து மதிப்பிடுவதாக அர்த்தமில்லை. வித்தியாசமான நடையில் எழுதப்பட்ட சுவாரஸ்யமான நாவல் அது.

● ஸ்டார் டஸ்ட் இதழில் கற்பனைச் செய்திகளின் சதவிகிதம் எவ்வளவு?

நான் பத்து வருடங்கள் அதற்கு ஆசிரியையாக இருந்த அனுபவத்தை வைத்துச் சொல்வதானால் அதில் எதுவுமே கற்பனையில்லை. பெரும்பாலான செய்திகள் நட்சத்திரங்களாலேயே தரப்பட்டவை. கொஞ்சம் மசாலா சேர்த்தது வேண்டுமானால் உண்மை.

● ஒரு ஆணாகப் பிறந்திருந்தால் உங்களால் இதே அளவு வெற்றியை அடைந்திருக்க முடியுமா?

பெண்ணாகப் பிறந்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். அதேசமயம் யூகமான இந்தக் கேள்விக்கு எனக்கு விடை தெரியவில்லை. ●

(ஐஐடியில் நடந்த 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் ஷோபா டேயின் நறுக் பதில்கள்.)

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்.**

தீபிகா

வையவன்

'கர்ச்சிப்'பில் கை துடைத்தவாறு தீபிகா வீட்டுப் படி இறங்கினான் பாஸ். மனசில் ஒரு கேள்வி, வண்டு போல் ரீங்கரித்தது.

இதற்கு இவ்வளவு காலமா? நாள் எண்ணினான்.

சித்தேரி மலைக்குச் சாலை போட முதல் சர்வேவுக்கு அவன் வந்து மூன்று வருடமாகிறது.

அப்போதுதான் ஃபாரஸ்டர் பொறுப்பேற்றிருந்தான் ஆவுடையப்பன்.

"இவங்க சின்னம்மிணி. ஹாஸ்பிடல் நர்ஸ். இது அவங்க மகள் தீபிகா."

ஆவுடையப்பன்தான் அறிமுகம் செய்து வைத்தான்.

தீபிகா. என்ன பெயர் அது! ஒரு புத்த விகாரத்துக்கோ இலக்கண நூலுக்கோ வைக்க வேண்டியது.

சிரித்தபடியே கைகூப்பினாள் தீபிகா.

பளிச்சென்று தன் முகத்தில் சர்ச் லைட் அடித்ததாய் உணர்ந்தான் பாஸ். மனக்குகையை ஊடுருவிய அந்த ஒளியில் ஒரு சோகம். மருண்டு மருண்டு பார்த்த கண்களில் கருணை மனு.

அப்போது ஆவுடையப்பன் எதிரில் நின்றிருந்தாள் தீபிகா. மனம் ஜோடி சேர்த்தது.

அண்ணனுக்கு எவ்வளவு பொருத்தம் இவள்!

ஏனோ அந்த எண்ணம் உதித்தது.

பிறகு சித்தேரிச் சாலைக்கு 'லேண்ட்-சர்வே' எடுத்து முடித்த போது அது வீண் கனவு என்று தோன்றியது. கேள்விப்பட்டது அப்படி!

தேவஸ்தானம் என்ற பாலாற்றங்கரை கிராமத்தில், எவனோ ஒரு கல்யாணத் தரகன் செய்த புரட்டினால், தீபிகாவின் திருமண வாழ்க்கை உதித்த மறுதினம் அஸ்தமித்திருந்தது.

தாலி கட்டியவனுக்கு மனக்கோளாறு. அதை சாந்தி முகூர்த்த இரவில்தான் தீபிகா கண்டுபிடித்திருக்கிறாள்.

வெளியே தாளிட்டிருந்த கதவை ஓங்கி, ஓங்கித் தட்டி அவள் கதறிய கதறல், வெளிக் கூடத்தில் படுத்திருந்த சின்னம்மிணியை எழுப்பி விட்டது.

ஓடிப் போய்க் கதவைத் திறந்திருக்கிறாள்.

ஓவென்று அலறியபடி காலின் மேல் விழுந்தாள் மகள்.

"அந்த ஆளுக்குப் பைத்தியம்மா!"

விம்மல்களுக்கிடையே தீபிகா சொன்ன வார்த்தைகள் சின்னம்மிணியைப் பிடறியில் அறைந்தன.

அவளை வாரியெடுத்து மார்பில் அணைத்துக் கொண்டாள்.

ப்ளஸ் டூவில் ஃபெயில் ஆகி மேலே படிக்க மறுத்து விட்டாள் என்பதற்காக, சொத்து, வீடு, வசதி என்ற கணக்கில் மயங்கி ஒரே மகளை என்ன செய்து விட்டோம்? அன்று மகளைத் தன் பாயில் அணைத்தவாறே படுக்க வைத்துக் கொண்டாள்.

அன்று இரவு அவள் உறங்கவில்லை.

அதன் பின் பல இரவுகள்.

அந்த வட்டாரமே வேண்டாம் என்று தானாக விண்ணப்பித்து அந்த மலையூருக்கு வேலை மாற்றல் வாங்கி வந்திருக்கிறாள்.

சின்னம்மிணி அடி முட்டாள் அல்ல. தவறு செய்தது தான். மகள் பலியாகக் கூடாது. அந்த உறுதியோடு விவாகரத்து வாங்கினாள்.

எனினும் தீபிகாவின் எதிர்காலம்?

இரவுகள் மலையேறி அவள் உறக்கம் துரத்தி வந்தன. சின்னம்மிணியைக் காதலித்து மணந்த கம்பவுண்டர், பிறந்த பெண் குழந்தையையும் அவளையும் விட்டு வேறு



2

ஒரு நர்ஸோடு சிங்கப்பூர் போய் செட்டில் ஆன பழைய சோகத்தின் மீது புதிய வரவு அழுந்திக் கனத்தது. விதி உண்டா?

மனிதர்கள் போடும் தப்புக் கணக்குகளுக்கு தப்பு விடை வந்தால் அந்தப் பழி, சுமத்த நட்டு வைத்திருக்கும் சுமைதாங்கிக் கல்தான் விதியா?

எனில் எது, ஏன் மனிதனைத் தப்புக் கணக்குப் போட வைக்கிறது?

பாஸ் தனக்குள் கேட்டுக் கொண்டான். அண்ணன் ஆவுடையப்பனைப் பார்க்கும் போது, அவனுடன் பேசும் போது பல சமயம் ஒன்று தோன்றும்.

இவன் அந்நியன்.

பதினெட்டாம் வயசில் பார்த்த அந்த ஆவண்ணா அல்ல.

இவன் திடீரென்று நிசப்தமானவன். காணாமற்போனவன்.

ஏன்? ஏன்? ஏன்?

ஆவுடையப்பன் ஓடி விட்ட அன்று – பள்ளி மைதானத்திலிருந்து இரவு ஏழு மணிக்குத் திரும்பி வந்த அப்பா கேட்டார்.

"ஆவு எங்கடா பாஸ்?"

''கோயிலுக்குப் போறேன்னு சொல் விட்டுப் போச்சு!"

"எப்ப?"

"ஆறு மணி இருக்கும்."

"பிஸிக்ஸ் ட்யூஷனுக்குப் போகலியா அவன்?"

''கோயிலுக்குப் போயிட்டுப் போறேன்னுச்சி."

இரவு ஒன்பது மணிக்கு ப்ளஸ் டு பிஸிக்ஸ் ஆசிரியரிடம் ஆவுடையப்பனைத் தேடிக் கொண்டு சைக்கிளில் போன கந்தசாமி, பத்தே நிமிஷத்தில் திரும்பி வந்தார்.

"என்னப்பா?"

''அவன் இன்னிக்கு டியூஷனுக்கு வரவே இல்லியாமே?"

பாஸுக்கு அதிர்ச்சி. அண்ணனாவது டியூஷனுக்குத் தவறுவதாவது?

பின்பு ஒருநாள். இரண்டு நாள். ஒரு வாரம் ஆகியும் ஆவுடையப்பன் வீடு திரும்பவில்லை.

தெரிந்த வீடுகள். சொந்த ஊர். போயிருப்பான் என்று சந்தேகம் வந்த ஊர் என்று கந்தசாமி அலைந்து அலைந்து தேடினார்.

எங்கும் வரவில்லை.

எந்தத் தகவலும் இல்லை.

ஒரு வாரம் கழித்து வீட்டிற்கு வழக்கமாகப் பால் கொண்டு வரும் பால்காரி

சொன்னாள்.

"சிவங் கோவுல்ல பத்து நாள் மின்னாடி தச்சிணாமூர்த்தி சந்நிதியாண்ட ஒரு சாமி யார்கிட்டே ஆவு பேசிட்டிருந்துச்சு. நான் பார்த்தேன்."

ஆவுடையப்பனா? சாமியாரிடமா? நம்ப முடியாத செய்தி. ஜீன்ஸ் வாங்கவில்லை என்று அப்பாவிடம் சண்டை பிடித்தவன். தாளிக்காமல் சட்னி சாப்பிட மறுத்தவன். ப்ளஸ் ஒன் வந்ததுமே 'டைடன்-வாட்ச்' கேட்டவன்.

பதினைந்து நாள் தவித்துத் தத்தளித்து அப்பா துருவித் துருவி விசாரித்ததில், ஒரு துப்பு கிடைத்தது.

ஆவுடையப்பன் மிகவும் நேசித்த பயாலஜி டீச்சர் பவித்ரா மேடத்தின் தங்கை, திருமண நிச்சயம் ஆன மறுநாள் பஸ் விபத்தில் இறந்து போனாளாம்!

அதை பவித்ரா மேடம் கதறிக் கதறிச் சொன்ன போது, கண்ணீர் வழிய வழிய ஆவுடையப்பன் கேட்டுக் கொண்டிருந்தானாம்!

தென்னை மரத்தைத் தேள் கொட்டப் பனஞ்செடியில் விஷம் ஏறிய கதையாய் அன்று பாஸுக்குப்பட்டது.

அனுபவம் சற்று கூடிய பிறகு இன்று புரிகிறது. துக்கத் தேள் தன்னைக் கொட்ட வேண்டும் என்றில்லை. தான் மிக மிக நேசிக்கும் ஒருவரைக் கொட்டினால் கூடப் போதுமோ?

பவித்ரா மேடத்தை ஆவண்ணா அவ்வளவு நேசித்தானா? அம்மா பிம்பமா? அம்மா போனது அவனை அவ்வளவு சூனியமாக்கி ஒரு பிரதிபிம்பம் தேடி அப்படி ஏங்கினானா?

அப்பா 'ஸ்போர்ட்ஸ்மன்'.

ஆட்ட விதிகளை எவ்வளவு அனுசரிப்பாரோ அப்படி அனுசரித்துத் தேடி முடித்து, மீண்டு விட்டார்.

அவரால் எந்தத் தோல்வியில் இருந்தும் மீண்டு விட முடியும். எந்த இழப்பிலிருந்தும், எந்த வெற்றியில் இருந்தும்.

"அட போடா பொடலங்கா! இந்த 'மேச்' லாஸ். அடுத்த 'மேச்' பார்ப்போம். வின் ஆர் லாஸ். வெளயாட வந்தாச்சு. மூக்கைச் சிந்தினா வெளயாடற ஸ்பிரிட் போயிடும்."

அம்மா போனதற்கும் அப்படித்தான் ஐந்து நிமிஷம் கலங்கினார். மீண்டு விட்டார். பாஸ் திக்குமுக்காடினான். முதலில் அம்மாவுக்காக. அடுத்து அண்ணனுக்காக.

"பையா! பிக்-அப்... பிக்-அப்" ஒருநாள் சிரித்தபடி தேற்றினார்.

பாஸ் மலங்க மலங்க விழித்தான்.

"எந்த கிரவுண்டும் நமது இல்லே. எந்தப் பந்தும் நமதில்லே. கைக்கு வந்திருக்கு. 'ஹெட்' பண்ணு. இல்ல 'ஸ்பைக்' பண்ணு. வச்சுனு உருட்டாதே!"

"இந்தத் தத்துவம்லாம் எனக்கு வேணாம்!"

"அதுக்குத்தாண்டா காராபூந்தி வாங்கியாந்திருக்கேன். தயிர்ல தூவி ஸ்பூன்ல வெட்டிச் சாப்பிடு."

ஒருநாள் தூங்கும்போது பாஸ் கேட்டான்.

"அண்ணன் வருமாப்பா?"

"விதி இருந்தா வருவான்."

"எப்போ வரும்?"

"விதி வர்றப்போ."

"ஓங்கிட்ட இருந்துதான் இந்த சாமியார்ப் புத்தி அண்ணனுக்குப் போயிருக்கும்."

பதிலுக்கு மறுபடியும் ஒரு தத்துவம் விடப் போகிறார் என்று பாஸ் எதிர்பார்த்தான். இல்லை.

போர்வையை உதறி அவனுக்குப் போர்த்தி விட்டு கந்தசாமி லைட்டை அணைத்தார்.

அவர் சொன்னபடி விதி இருந்தது. வந்தது.

மூன்று மாதம் கழித்து அல்மோராவில் ஒரு மடத்துச் சந்நியாசி ஆவுடையப்பன் அங்கே இருப்பதாக ஒரு கடிதம் போட்




''நீ திருட்டுத் தொழிலுக்குப் புதுசா?''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''மாமூல் கேட்டா திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி முழிக்கிறாயே!''

– அம்பை தேவா



OVER THE YEARS WE HAVE LANDMARKED INDIA WITH MANY NATIONAL MONUMENTS

Each coal and gas-based power project of NTPC is a national monument. Each a hallmark of our unparalleled contribution to India's power scenario which makes NTPC the largest power corporation with an installed capacity of 16,910 MW. The corporation also manages two power stations having a total generating capacity of 975 MW.

That's not all. With an additional 3170 MW of generating capacity under various stages of completion, NTPC is all set to landmark India with many more national monuments.

एनटीपीसी
NTPC

National Thermal Power Corporation Ltd.

naa/59NTPC/98

Leading by Vision



"இதுவா? வீடு கட்டற காண்ட்ராக்டர் ஒருத்தருக்கு சிலை செஞ்சு வைச்சாங்களாம். அது கொஞ்சம், கொஞ்சமா தரையிலே புதைஞ்சுட்டே போகுதாம்!"

— பாஸு

டிருந்தார்.

"என்னப்பா பண்ணப் போறே?" பாஸ் கேட்டான்.

"பாக்கறது என்ன? எனக்கு ஆவண்ணா வேணும்."

புறப்பட்டுப் போன கந்தசாமி பதிமூன்றாம் நாள் ஆவுடையப்பனோடு திரும்பி வந்தார்.

"அவனை எதுவும் கேட்டுத் தொலைக்காதே!" என்று எச்சரித்தார்.

பாஸ் துளைக்கவில்லை. துளைத்திருந்தாலும் பதில் வராத நிசப்தம் ஆவுடையப்பனைச் சூழ்ந்திருந்தது.

ஆவுடையப்பன் கண்கள் வெறிக்க பாஸை ஆழமாகப் பார்த்தான்.

'இவன் ஆவண்ணா இல்லை. அந்நியன். இவன் வேண்டாம். ஆவண்ணாதான் வேண்டும்! அவன் திரும்பி வருவானா?' பாஸ் உழன்றான்.

அதன் பிறகு ஆவுடையப்பன் எங்கும் ஓடவில்லை. படித்தான். தலையும் கால்களும் உள்ளே ஒடுங்கிய ஓர் ஆமை மாதிரி தென்பட்டான். டிகிரி வாங்கினான். ஃபாரஸ்டர் தேர்வு எழுதினான். பாஸ் சிவில் டிப்ளமா முடித்த போது அவன் ஃபாரஸ்டர் ஆனான்.

மரங்கள் வளர்த்தான். டிவிஷன் டிவிஷனாக ரேஞ்சு ரேஞ்சாக மரம் வளர்க்க விதி நியமித்தவன் போல் வளர்த்துக் கொண்டே போனான்.

'புகை... மது... சீட்டாட்டம்... பெண்கள்.. இறைச்சி – அட இந்த கண்றாவிகள் இல்லையென்றாலும் கோயிலாவது...?'

ஆவுடையப்பன் கோயிலுக்கும் போவதில்லை. நிறுத்தி விட்டான். அங்குல நீளத்துக்கு நெற்றியில் எப்போதும் துலங்கும் விபூதி இல்லாது நெற்றி வெறித்தது.

'என்ன ஆனாய் ஆவண்ணா? அல்மோரா மடத்தில் நீ தொலைந்து போனாயா? நீ எனக்கு வேண்டுமே! எப்போ வருவாய் ஆவண்ணா?'

தீபிகா என்றால் விளக்குச் சுடர் என்று அர்த்தமாம். சம்ஸ்கிருதம் தெரிந்த ஏ.ஈ. சொன்னார்.

"ஏன் கேக்கறே?" அவர் மடக்கினார்.

"சும்மா தெரிஞ்சுக்க" தப்பித்தான் அன்று.

யார் அந்த விளக்குச் சுடர்? படிக்க மறுத்த தீபிகாவுக்கு மீண்டும் ப்ளஸ் டூ எழுத ஊக்கம் வருவித்த ஆவண்ணாவா? அந்த மரம் வளர்க்கும் மகானின் சலவைக் கல் முகத்தில் சில நொடிகள் எரிச்சல், சிரிப்பு என்று சரளம் வருவித்த தீபிகாவா?

ஆவண்ணா மீளலாம். மீண்டு விடலாம்.

மூன்று வருடங்கள் ஜல்லிக்கல்... தார் காய்ச்சல்... ரோடு ரோலர் என்று சித்தேரி மலையில் பாஸ் உழலும் போது திறந்த ஜன்னல்களில் கிடைத்த ஒரு சிறு ஆசுவாசம்.

ஆவுடையப்பன் தீபிகாவுக்குத் தாவரவியல் சொல்லித் தருகிறான். தீபிகா சிரிக்கிறாள். கண்மை. ஸ்டிக்கர் பொட்டு. கரை வைத்த முந்தானை இளமை. எல்லாம் சிரிக்கின்றன.

"ஸ்பைரோகைரா வரஞ்சே, ஓகே! ஜைகோ ஸ்போர்ல ஒரு தப்பு" ஆவுடையப்பன் சொல்கிறான்.

தீபிகா நாக்கைக் கடிக்கிறாள். உதட்டுச் சிரிப்பை ரோஸ் நாக்கு தொடுகிறது. ஈர்ப்புச் சக்தியின் ஈரப்பசை மின்னுகிறது.

"ஸாரி சார்... உள்ளே டாட்ஸ் வெக்க மறந்துட்டேன்."

அரப்புத் தூள்... கஸ்தூரி மஞ்சள்... சந்தனப் பவுடர் என்று ஒரு கலவை வாசனை தீபிகாவிடமிருந்து வீசும். பாஸ் நுகர்ந்திருக்கிறான்.

'தீபிகா... ப்ளீஸ்... எங்க ஆவண்ணாவை மீட்டுக் குடுங்க.'

அந்த வாசனையிடமும் கண்மை ஸ்டிக்கர்களிடமும் பாஸ் வேண்டினான்.

"நியூக்ளியர் ப்யூஷன்ல வெளிப்படுற எனர்ஜி எது?" பிசிக்ஸ் நடத்தும் போது ஆவுடையப்பன் தீபிகாவைக் கேட்டான் பாஸ் எதிரில்.

"நியூக்ளியர் எனர்ஜி" தீபிகா சொன்னாள்.

தீபிகா துள்ளி எழுந்து பயம் முகத்தில் பதறிப் படர ஆவுடையப்பன் தோள் மீது இடுப்பு உரச, பாஸ் நிற்கிற நினைப்பே மறந்து ஒட்டி நிற்கிறாள்.

"என்ன?" ஆவுடையப்பன் எழுந்து விட்டான்.

அவள் தரையில் விரல் நீட்டிக் காட்டினாள்.

ஒரு தேரை.

"தவளை தேரைன்னா எனக்கு பயம் சார்" சமாதானம் சொல்கிறாள். அது உண்மை.

தீபிகாவின் கழுத்தில் இரண்டு மடிப்புகள் உண்டு. ஹாரங்கள் போல. தொடு, தொடு என்று வேண்டுவன போல. அந்த பயத்தில் அவள் மென்று விழுங்கியதில் அவை மேலேறித் தாழ்ந்தன. ஸ்கிப்பிங் கயிறு போல.

ஆவுடையப்பன் அதைப் பார்க்கிறானா என்று பாஸ் திரும்பிக் கவனித்தான்.

ஆவுடையப்பன் துடைப்பத்தால் தேரைக்கு வலிக்காதபடி நகர்த்தித் தூரத் தள்ளிக் கொண்டிருந்தான்.

முடிந்து விட்டது. சித்தேரி மலைப் பாதை வேலை. குளிர்... நிலா வெளிச்சம். காட்டெருமைகள்.. காட்டுப் பன்றிகள்.. கடல் மட்டத்திலிருந்து இரண்டாயிரத்துச் சொச்சம் உயரத்தில் குளிர் பதனம் பெற்றிருந்த இயற்கையை நாகரீகம் தொட்டுச் சீர்குலைக்க மூன்று வருஷமாகப் போட்ட மலைச்சாலை நாளை அவனுக்கு வணக்கம் சொல்லப் போகிறது.

வெண் பொங்கல் பரிமாறும் போது தீபிகா விசுக்கென்று தன் மனம் திறந்து மூடிய திரையை நினைத்தான்.

இவ்வளவு காலம் பிடிக்குமா?

இரவில் வேலை முடித்து அகாலத்தில் குவார்ட்டர்ஸுக்கு வரும்போது அண்ணா தீபிகாவுக்கு டியூஷன் நடத்துவது மூடிய ஜன்னல் கண்ணாடியில் தெரியும்.

சில சமயம் கேட்டே அறியாத ஒரு புதிய குரல் ஆவுடையப்பனிடமிருந்து புறப்படுவது போல் தோன்றும்.

"த அஸிம்டோட் ஆஃப் எ கர்வ் ஈஸ் எ ஸ்ட்ரெய்ட் லைன்.. டச்சிங் இட் அட் இன்ஃபினிட்டி" - அனலிடிக்கல் ஜியாமெட்ரியில் ஹைபர் போலா விதி.

மூன்று வருஷமாகுமா ஒரு பெண் மனசில் பாதை போட? அவ்வளவு காலமா?



"உன் கணவரை ரெண்டு ரவுடிங்க அடிச்சுட்டாங்களா...? அவர்தான் கராத்தேல பிளாக் பெல்ட் வாங்கினவராச்சே!"

"அது சரி, ஆனா அவர் அடிச்சப்போ கராத்தே டிரஸ்ல இல்லியே!"

– கிறிஸ்டி

மை காட்...

சாலைத் திருப்பம் வந்த போது எதிரே ஆவுடையப்பன் வந்து கொண்டிருந்தான்.

முன்னால் அவன். பின்னால் நால்வர். இரண்டு கார்டுகள்... இரண்டு வாச்சர்கள்.

'ஒரு குரு. நான்கு சிடர்கள்' என்று அந்தக் காட்சி பார்த்து ஓர் எண்ணம் தோன்றியது.

பின்னால் வந்த நால்வரும் அப்படி கை கட்டி நிசப்தமாக நடந்து வந்தனர். போலி வேஷமோ, பதவிக்கு அடக்கமோ இல்லை. நிஜ மரியாதை எழுதி ஒட்டியிருந்தது அவர்கள் முகத்தில்.

'எவ்வளவு நாளைக்கு? பார்க்கிறேன்' என்று மனசில் குதூகலமாகக் கறுவிக் கொண்டான் பாஸ்.

ஆவுடையப்பன் தம்பியைப் பார்த்ததும் நின்றான்.

"எங்கே?" என்று கேட்டான்.

"ஜீப் ரிப்பேர் சரிபார்த்துட்டேன். டிஈ ஆபீஸ் போகணும்" என்றான் பாஸ்.

"எப்போ பொறப்படறே?"

"ஏன் கேக்கறே?"

"கீழே கொஞ்சம் வேலை இருக்கு! நானும் வர்றேன். ஒருத்தர் சேலத்துக்கு வர்றாரு. ஸ்டேஷனுக்குப் போய் மீட் பண்ணணும்" என்றான் ஆவுடையப்பன்.


"யாரு?" பாஸ் கேட்டான்.

"சச்சிதானந்தா"

"சாமியாரா?" பாஸ் விடவில்லை.

"ஆமாம்... அல்மோரா மடத்திலேர்ந்து வர்றார்" என்று ஆவுடையப்பன் பதில் சொன்னான்.

(தொடரும்)





1999 பிப்ரவரி 7
வெகுதான்ய தை 24
மலர் : 57
இதழ் : 28

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

பிரதமரின் உண்ணாவிரதம்!

மௌன விரதம் இருந்தது போதாதென்று இப்போது உண்ணாவிரதம் வேறு மேற்கொள்ளவிருக்கிறார் பிரதமர்.

மத்திய பிரதேசத்தில், குஜராத்தில், ஒரிஸ்ஸாவில் என்று எல்லாத் திசைகளிலும் வேற்று மத எதிர்ப்பு வெறியைக் கிளறிவிட்டு வன்முறையில் ஈடுபட்டனர் ஹிந்து அடிப்படைவாதிகள். 'பாகிஸ்தான் கிரிக்கெட் ஆட வருவதாவது, விட்டேனே பார்' என்று டெல்லியில் பிட்சை நாசம் செய்தனர் சிவ சேனையினர்; மும்பையில் கிரிக்கெட் கட்டுப்பாடு அலுவலகத்தைச் சேதப்படுத்தினர். எதுவொன்றையும் கண்டிக்க வக்கில்லாமல் மௌன விரதம் காத்த பிரதமர் வாஜ்பாயி, காந்திஜி அமரரான ஜனவரி 30 அன்று உண்ணா நோன்பு இருக்கப் போவதாக அறிவித்திருப்பது அந்த மகாத்மாவுக்கே இழைக்கப்படும் அவமரியாதை!

சிறுபான்மையினருக்கு எதிராக நடந்துவரும் கொடூரங்களை எதிர்த்துத்தான் இந்த அடையாள உண்ணாவிரதம் என்பதைக் கூட பிரதமர் பகிரங்கமாக அறிவிக்கவில்லை; அதை நாமே அனுமானித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!

நடந்த கொடூரங்கள் பிரதமரை அவ்வளவு தூரம் பாதித்திருக்குமேயானால் உண்ணாவிரதமிருப்பதற்கு ஜனவரி 30 வரை காத்திருக்க வேண்டிய அவசியமென்ன?



காந்தியத்தைத் துணைக்கு அழைக்கும் அரசியல் நடவடிக்கைதான் இது என்ற முடிவுக்கு நாம் வருவதில் தவறில்லை.

அந்த மகாத்மாவின் கொள்கைகளுள் எதைத்தான் கடைப்பிடித்திருக்கிறது பி.ஜே.பி?


இலட்சியம் தூய்மையானதாக இருந்தால் போதாது; அதனை அடையும் மார்க்கமும் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பது காந்தியத்தின் முக்கியக் கொள்கை.

அந்த அரிச்சுவடிப் பாடத்திலேயே பி.ஜே.பி பாஸ் மார்க் வாங்கவில்லை. பதவி என்ற இலக்கை அடைவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் விதவிதமாகக் கூட்டணிகளை அமைத்துக் கொண்டது. கொள்கை முரண்பாடு கொண்டவர்கள் மட்டுமின்றி, அடிப்படை நேர்மை இல்லாதவர்களும் அரசியல் கூட்டாளிகளானார்கள். அவர்கள் இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்கும் கட்டாயமும் ஏற்பட்டது.

இந்த அகௌரவம் ஒருபுறம் என்றால், இன்னொரு பக்கத்தில் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கொடுமை! காந்தியத்துக்குத் துளியும் ஒவ்வாத அடிப்படைவாத சக்திகளுக்கு பி.ஜே.பியின் இதய மையத்தில் இடம் தரப்பட்டிருக்கிறது. அவைதான் அக்கட்சியைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

இதர கட்சிகள் சிறுபான்மையினர் ஆதரவு அரசியல் நடத்த, பி.ஜே.பி சிறுபான்மையினர் எதிர்ப்பு அரசியலைத் தேர்ந்தெடுத்தது. ஹிந்து அடிப்படைவாத சக்திகளின் பலமும் உழைப்பும் வோட்டுப் பெற்றுத்தர உதவியாயிருந்ததோடு சரி. ஆட்சிக்கு வந்த பிறகு அதே சக்திகள் நாட்டை அழிவு நோக்கி திசை திருப்பியிருக்கின்றன.

மகாத்மாவின் சர்வ சமய சமபாவம் எங்கே, இந்த மூர்க்கர்களின் முரட்டு மதவெறி எங்கே? அவரது கால் தூசுக்குப் பெறாதவர்களையெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு வளரவிட்டு விட்டு, இப்போது காந்திஜியைத் துணைக்கு அழைக்கும் பிரதமர் பரிதாப



மாகக் காட்சியளிக்கிறார்.

ஒரிஸ்ஸாவில் குஷ்ட நோயாளிகளுக்குச் சேவை செய்து வந்த கிறிஸ்துவப் பாதிரியாரும் அவரது இரு மகன்களும் உயிரோடு கொளுத்தப்பட்டிருக்கிறார்கள் – உலகமே அதிர்ந்து போயிருக்கிற நேரத்தில் வி.எச்.பி. தலைவர்கள் மட்டும், 'பாதிரியார் ஸ்டேய்ன்ஸ், குஷ்ட நோயாளிகளுக்குச் சேவை செய்யவில்லை; அப்பகுதியில் குஷ்ட நோயாளிகளே இல்லை. சேவை என்கிற போர்வையில் மதமாற்றத்தில் ஈடுபட்டிருந்தார் ஸ்டெய்ன்ஸ்' எனப் புகார் படிக்கிறார்கள். அதையும் கேட்டுக் கொண்டு சும்மாயிருக்கிறார் நமது பிரதமர்!

ஒரு கொலைபாதக சம்பவம் என்பதாக அந்த நிகழ்வை நோக்காமல், மீண்டும் மத உணர்வைப் புகுத்தி வேறுபாடுகள் வளர்க்கும் வெறுப்புப் பிரசாரம் விமரிசையாகத் தொடர்கிறது.

அதில் ஈடுபடும் வி.எச்.பி.யையோ பஜ்ரங் தளையோ வெளிப்படையாகக் கண்டிக்க முடியாத வாஜ்பாய், உண்ணாவிரதம் இருந்து என்ன ஆகப் போகிறது!

'காந்தியத்தைக் கேலிக்கூத்தாக்குவதை நிறுத்துங்கள்' என்று பிரதமரைக் கேட்டுக் கொள்கிறோம்.

மெய்யான காந்தியவாதியாகப் பிரகாசிக்கிறவர், எரிக்கப்பட்ட பாதிரியாரின் மனைவிதான். 'குற்றவாளிகளை இறைவன் மன்னிக்கட்டும்; அரசாங்கமும் மன்னிக்கட்டும்' என்று அவர் இதயபூர்வமாகப் பேசியதை அறிந்து சிலிர்க்காத நல்ல உள்ளங்கள் இருக்க முடியாது.

நிலைமை இந்த அளவுக்குக் கட்டவிழ்ந்து மோசமாகிறவரை பேசாமலிருந்த அரசையும், இப்போது காந்தியைத் துணைக்கு அழைக்கும் பிரதமரையும் கூட அதே ஆண்டவன்தான் மன்னிக்க வேண்டும்! ○

அழகாகத் தோற்றமளிக்க...



என்ன மேடம்! உங்கள் உடம்பு 'ஷேப்லெஸ்' ஆக இருக்கிறது. நன்றாக 'சிக்'கென்று ஆக வேண்டும் என்பதுதானே உங்கள் ஆசை?


உங்கள் பிரச்னை என்ன சார்? 'எவர் பிரக்னென்ட்; நெவர் டெலிவரி' என்று கிண்டல் செய்யப்படும் உங்கள் தொப்பையைக் குறைப்பது சாத்தியமா என்பதுதானே?

இடுப்பில் 'ஸ்டெப்னி'களாக அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிற சதை டயர்களை இறக்கி வைக்க முடியுமா என்பதுதான் உங்கள் கவலையா அம்மணி?

'ஒட்டடைக் குச்சி போல நெடு நெடுவென்று இருக்கிறேன். பாடி பில்டர் போல நல்ல பர்சனாலிடி இருந்தால்...' என்பதுதானே நண்பரே உங்கள் ஏக்கம்?

அல்லது இவை எதுவும் இல்லாமல், இப்போது உள்ள நல்ல உடம்பை இதே மாதிரி தொடர்ந்து மெயின்டெயின் பண்ணுவது எப்படி என்று யோசிக்கும் பிரிவா நீங்கள்?

நீங்கள் எல்லோரும் உங்கள் கவலைகளை எல்லாம் மறந்திடுங்க. பொடி நடையாய் (வாக்கிங் நல்ல உடற்பயிற்சிதானே?) சென்னை சிந்தாதிரிப்பேட்டை (பறக்கும்) ரயில் நிலையத்துக்கு ஒரு நடை வாருங்கள். எஸ்கலேட்டரைத் தவிர்த்துவிட்டு, நடந்தே (படியேறுதல் கூட நல்ல எக்ஸர்சைஸ்தான்) முதல் மாடிக்குப் போனால் அங்கே உங்கள் அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு காத்துக் கொண்டிருக்கிறது.



ஆமாம்! அங்கேதான் ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டம் (Hi Toch Fitness System) ஷோரூம் இருக்கிறது. இந்த நிறுவனம் கடந்த பல வருடங்களாக உடற்பயிற்சிக்குத் தேவையான பல்வேறு உபகரணங்களையும், தானே வடிவமைத்து, உருவாக்கி, விற்பனை செய்து வருகிறது.

பல்வேறு பிரிவினரின் தேவைகளையும் விஞ்ஞானபூர்வமாக நிறைவேற்றும் வகையில் மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு, உயரிய தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட பலவிதமான உடல் நலம் பேணும் உடற்பயிற்சிக் கருவிகள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்தக் கருவிகளையெல்லாம் ஒரு தடவை பயன்படுத்துகிறபோது பார்த்தாலே போதும், நாமும் உடற் பயிற்சிகள் செய்து, நம் உடம்பை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அடங்காத ஆசை உங்கள் மனதில் ஏற்பட்டுவிடும்!

இனி, ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டம் வடிவமைத்து, உருவாக்கி விற்பனை செய்யும் சில பயனுள்ள உபகரணங்களைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாமா?

தொப்பை குறைய :

அப்டாமினல் புல்ஓவர் (Abdominal Pullover) என்பது அமெரிக்காவில் மிகப் பிரபலமான உடற்பயிற்சி உபகரணம். இதில் பயிற்சி செய்தால், உங்கள் தொப்பை, வெயிலில் வைத்த ஐஸ் கட்டி போல நாளாவட்டத்தில் குறைவதைக் காணலாம்; 'போயே போச்சு!' என்று உங்கள் காணாமல் போன தொப்பையை ஆசையுடன் 'தடவி'க் கொடுக்கலாம்.

நின்றபடியே நடக்க :

நடப்பது என்பது உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரபலமான ஒரு உடற் பயிற்சிதான். ஆனால், மழை, குளிர், பனி என்று எதுவானாலும் பொருட்படுத்தாமல் காலையில் எழுந்து வாக்கிங் போய்விட்டு வருவது சாத்தியமா? பொழுது விடிந்த பின் வாக்கிங் போனாலோ, வாகனங்களின் நச்சுப் புகையை சுவாசிக்க வேண்டிய கட்டாயம். இதற்கு என்ன தீர்வு? இதோ இருக்கிறது 'வாக்கர்' என்கிற டிரெட் மில். (Tread Mill)

மிகவும் உடல் பருமனானவர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றதா? இங்கே வாக்கர் கிடைப்பது சுலபமில்லை. ஆ... ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டம் தயாரித்துள்ள உபகரணம், நூற்றைம்பது கிலோ எடையுள்ளவர்கள் பயன்படுத்தும் அளவுக்கு உறுதியானது.

தவிர, எந்த வேகத்தில் நடக்க வேண்டும் என்பதை நாமே தீர்மானித்து, செட் பண்ணிக் கொள்ளவும் இதில் வசதியுண்டு. மேலும், எத்தனை தூரம் நடந்திருக்கிறோம், எவ்வளவு நேரம் ஆகியுள்ளது என்பதையும் காட்டுவதற்கு இதில் வசதி உண்டு.

இதய நோயாளிகளுக்கு மிகவும் உபயோகமாக, நடக்கிறபோது, நாடித்துடிப்பு காட்டவும் வசதி உள்ளது. நாடித்துடிப்பு ஒரு குறிப்பிட்ட அளவைத் தொட்டவுடன் 'இனி நடையை நிறுத்தி விடுவது நல்லது என எச்சரிக்கை வந்துவிடும்.

டபுள் பர்னர் :


Double Burner என்ற உபகரணத்தில் பயிற்சி செய்தால் இரட்டைப் பலன் கிடைக்கும். இது நடைப் பயிற்சி, நீச்சல் இரண்டையும் விட மேம்பட்டது. அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இத்தகைய உபகரணம் மார்க்கெட்டில் இருக்கிறது. ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டம் தயாரிக்கிற டபுள் பர்னர் கருவி, இம்போர்ட் செய்யப்பட்டதை விட உறுதியானது. பிரச்னையில்லாதது. தினம் அரை மணி நேரம் இந்தக் கருவியுடன் செலவிட்டால் போதும், உங்கள் பர்சனாலிடியே மாறிவிடும். 'நீங்க எந்த காலேஜ்ல படிக்கிறீங்க?' என்று யாராவது கேட்டால் மயக்கம் போட்டு விடாதீர்கள்.

மல்டி ஸ்டேஷன் :

இது உடற்பயிற்சி உபகரணங்களில் ஒரு பன்முகப் பயன் தரும் கண்டுபிடிப்பு. ஒரே நேரத்தில் நாலு பேர் இதில் உடற்பயிற்சி செய்யும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்போது வழக்கமான ஜிம்னாசியம்கள் மட்டுமின்றி, அடுக்கு மாடி, ஃப்ளாட் கட்டுபவர்கள், ஸ்பெஷல் அட்ராக்ஷனாக அமைக்கும் ஜிம்களில் இது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பதினாறு பேர்கள் வரை ஒரே சமயத்தில் உடற்பயிற்சி செய்ய வசதியாய் இதனை விரிவுபடுத்த முடியும். இது போன்ற மல்டி ஸ்டேஷன்களை இறக்குமதி செய்யும்போது, பல லட்சங்கள் விலையாகும். ஆனால் ஹை டெக் தயாரிப்பு ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறைவான விலை! ஆச்சரியமாக இல்லை?

இடுப்பைக் குறைக்க :

ஹிப் வைப்ரேட்டர் (Hip Vibrator) என்பது, இடுப்பில் மட்டுமின்றி, தொடை, கை, ஆடு சதை என்று எங்கெங்கெல்லாம் எக்ஸ்டிரா சதை இருக்கிறதோ, அங்கேயெல்லாம் வைப்ரேஷன் என்கிற சுகமான அனுபவம் மூலமே சதையைக் குறைத்து விடுகிற சூட்சமம் பண்ணும் உபகரணம். இதில் நிற்கிறபோது, உடற்பயிற்சி செய்கிற உணர்வே இருக்காது. சதையைக் குறைப்பதற்கு மட்டுமில்லை, உடலின் எந்தப் பகுதியில் வலி இருந்தாலும், இந்த உபகரணம், சூப்பராய் மசாஜ் செய்து, வலியைப் போக்கிவிடும்.



இவை எல்லாம் ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டத்தினால் வடிவமைத்து, உருவாக்கி, பலராலும் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு ஒரு சில சாம்பிள்கள்தான். இவை தவிர, சூப்பர் ஆக்டர் கமல் போன்ற பிரபலங்களுக்கு, அவர்களுடைய குறிப்பிட்ட தேவைக்கு ஏற்ப, பிரத்யேகமாய் வடிவமைத்து, உருவாக்கித் தரப்பட்டுள்ள ஐட்டங்களும் உண்டு.


காப்ஸ்யூல்கள் :

அதெல்லாம் சரி! இந்த உடற்பயிற்சி சமாசாரமெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராதுங்க. சுலபமான வழி ஏதாவது உண்டா என்று கேட்கிறவர்களுக்கும் உதவக் காத்திருக்கிறது ஹை டெக் நிறுவனம். பல்லாண்டு அனுபவம் கொண்ட சித்த மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்று உருவாக்கப்பட்டுள்ள 'ஸ்லிம்மிங் கேப்ஸ்யூல்ஸ்' அனுபவ ரீதியாக நல்ல பயன் தருவதாகச் சாப்பிட்டவர்கள் சொல்கிறார்கள்.

...யாருக்குத்தான் ஆசையில்லை?

இதனைச் சாப்பிட்டால் பக்கவிளைவுகள் எதுவுமில்லை என்பது ஒரு கூடுதல் வசதி. ஆனால் இந்த கேப்ஸ்யூல்ஸ், மருந்துக் கடைகளில் விற்பனைக்கு இல்லை. அப்புறம்? கேப்ஸ்யூல்ஸ் தேவைப்படுபவர்கள் என்ன செய்ய வேண்டும்?

ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டம் ஷோரூமுக்கு நேரில் வரலாம். அல்லது 8528083க்கு போன் செய்யலாம்.



உடனடியாக அணுகவும். முகவரி :

ஹை டெக் ஃபிட்னஸ் சிஸ்டம்
ஜிம்னாசியம் & ஃபிட்னஸ் உபகரணங்கள்
தயாரிப்பாளர்கள்
M-6, முதல் தளம், சிந்தாதிரிப்பேட்டை ரயில் நிலையம்,
(சிம்சன் எதிரில்), சென்னை - 600 002.
டெலிபோன் : 8528083 ஃபேக்ஸ் : 8591370.



முதலில் அவனைப் பிச்சைக்காரன் என்றுதான் நினைத்தேன். முடி வெட்டவும் முகம் மழிக்கவும் எப்போதும் சமயம் வாய்ப்பதில்லை போலும். தவிர, என்ன வண்ணம் என்று கண்டுபிடிக்க இயலாதபடி அவன் அணிந்திருந்த பேன்ட்-சட்டை அழுக்கேறி, நைந்து போயிருந்தது. விழிகளின் கீழே தீட்டினாற் போலப் படிந்திருந்த கருமையும் நகங்களில் ஏறியிருந்த அழுக்கும் வயதை யூகிக்க முடியாதபடி ஒடுங்கியிருந்த உடலும் கூட அப்படித்தான் நினைக்க வைத்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, குதுப்ஷாவின் கல்லறைக்கு வெளியே, புங்க மரத்தடியில் அவன் விழுந்து கிடந்த கோலம் வேறு எது மாதிரியும் எண்ண இயலாமல் செய்துவிட்டது. பெரும் பிசகு.

கோட்டை உச்சி வரை ஏறி இறங்கிய களைப்பில், சற்று அமரலாம் என்று நினைத்து அந்த மரத்தடி நிழலைத் தேர்ந்தெடுத்திருந்தேன். சட்டென்று ஒரு கை என்னை நோக்கி நீண்டதும் புரட்டிக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு, சட்டைப் பையைத் துழாவப் போனேன்.

"மன்னிக்கவும். நான் பிச்சை கேட்கவில்லை. அந்தப் புத்தகத்தை ஒரு விநாடி காட்ட இயலுமா?" என்று சுத்தமான ஆங்கிலத்தில் அவன் கேட்டதும் அவமானத்தில் கருங்கிப் போனேன்.

படித்துக் கிழித்த அத்தனை தத்துவங்களும், 'தோற்றமல்ல; அதற்கும் அப்பால்' என்றுதானே இடைவிடாமல் கூறிவந்திருக்கின்றன? என்ன படித்து, எழுதி என்ன? கோல்கொண்டா கோட்டை முகப்பில் ஒரு முன்பின் தெரியாத மனிதன் என் ஞானச் செருக்கைக் காலடியில் நசுக்கி எறிந்தாற் போலிருந்தது.

அவமானமும் வியப்பும் ஒருங்கே தாக்க, புத்தகத்தை அவனிடம் மௌனமாக நீட்டினேன். Moor's Last Sigh. தலைப்பை வாய் விட்டுப் படித்துவிட்டு, தனக்கே சொல்லிக் கொள்பவன் போல, "பெரிய ஜாலக்காரன். சரக்கு மட்டானாலும் மொழியால் பூசி மெழுகிவிடுவான்!" என்றான், பாராட்டும் கிண்டலும் கலந்த தொனியில்.



தனக்குள் இரண்டாவது அபிப்பிராயமே இல்லாத தீர்மானமுடன் அவன் பேசியவிதம் என்னைத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

பா. ராகவன்

வியப்புடன் அவனை உற்றுப் பார்த்தேன். பூரணமான விவேகியாக இருக்கக் கூடும். தோற்றத்தில், வாழ்க்கை விளையாடிப் பார்க்கத் தேர்ந்தெடுத்த மரப்பாச்சி போலிருந்தான். வாழ்வில் எப்போதாவது இதுபோல் ஆணியடித்தாற் போன்ற கருத்து எனக்கு உண்டாகியிருக்கிறதா? எழுத்தில் கலைத் தன்மை எது என்பது பற்றிய மயக்கம், எப்போதும் காலைச் சுற்றி ஓடி வரும் வளர்ப்பு நாய்க்குட்டி போல உடன் வந்து கொண்டே இருக்கிறது. படிப்பும் அனுபவமும் தரத் தவறிக் கொண்டிருக்கும் ஞானத்தை, ஏதோ ஒரு மூன்றாவது மரம் ஆப்பிளாகக் கரங்களில் விழச் செய்யப் போகிறது என்று மடத்தனமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்.



அவன் மரியாதையுடன் புத்தகத்தைத் திருப்பித் தந்து விட்டு, எழுந்து நின்று தன் ஆடையை பட்பட் என்று தட்டிக் கொண்டான். தலையை வேகமாக ஒருதரம் சிலுப்பி விட்டுக் கொண்டு, "இன்று எனக்கு மிக மோசமான நாள். காலையிலிருந்து சவாரி ஒன்றும் இல்லை!" என்றான் என்னைப் பார்த்துச் சிரித்தபடி.

அப்போதுதான் அங்கொரு ஆட்டோவும் நிற்பதை கவனித்தேன். திறமை மிக்க டிரைவர்கள் எப்படியெல்லாம் தூண்டில் போடுகிறார்கள்?

இப்போது நான் செய்யக் கூடியது என்ன என்று யோசித்தேன். நேரம் அதிகம் ஆகிவிடவில்லை. நாலேகால்தான். தகதகக்கும் வெயிலில், சற்று தூரத்தில் தெரிந்த கோல்கொண்டா கோட்டையின் உப்பரிகை, ஒரு கிணற்றின் கைப்பிடிச் சுவர் போலத் தெரிந்தது. நாம்பள்ளி வழியே செல்லும் பேருந்துகள் பதினைந்து நிமிஷத்துக்கு ஒன்று என வந்த வண்ணம் இருக்கின்றன. இரண்டு அல்லது மூன்று ரூபாய் செலவில் அறைக்குப் போய்விடலாம்தான். ஆனால், ஏனோ அவன் என்னைக் கவர்ந்திழுந்தான். ஒத்த அலை வரிசை காரணமாயிருக்கலாம். பேச்சுக்கு நாக்கைச் சப்புக் கொட்டுகிற மனம். ஐம்பது ரூபாய் கேட்பானா?

"இங்கெல்லாம் மீட்டருக்கு ஆகிற காசைக் கொடுத்தால் போதும் சார்" என்றான் அவன்.

"எத்தனை தூரம் என்றாலும் மீட்டர் போடுவீர்களா?" என்றேன் சந்தேகத்துடன்.

"நிச்சயமாக."

"நீங்கள் மட்டும்தானா? அல்லது..."

"இங்கே சுற்று வட்டாரத்தில் ஐம்பது கிலோ மீட்டர் தூரம் வரை அநேகமாக எல்லோருமே அப்படித்தான்" என்றான்.

"ஆச்சர்யமாக இருக்கிறது."

"உங்களுக்குத் தெரியாமல் இருக்குமா? எல்லாம், எல்லாமே

பழக்கத்தின் அடிப்படையில் உருவாவது தானே? பயிற்றுவிக்கப்பட்ட வாழ்க்கையைத்தானே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?" என்றான் மிகச் சாதாரண தொனியில்.

அது சரிதான் என்று நினைத்தேன்.

ஒருதரம் திருப்பதி போயிருந்தேன். சரியான உற்சவ நேரம். ஏராளமான ஜனங்கள் எறும்பு போல் நகர்ந்து கொண்டிருந்தார்கள். நீளமான சந்நிதியின் வாயிலில், உள்ளே நுழையக் காத்திருக்கும் வரிசை ஒருபுறம். திரும்பிச் செல்லும் கூட்டம் ஒருபுறம்.

கோவிந்தா, கோவிந்தா என்கிற கோஷம் அலை போலச் சுருண்டு எழுந்து சுவர்களை மோதியது. கட்டுப்பாடு மீறிய மனவெழுச்சியை வலுக்கட்டாயமாகத் திணிப்பது போலிருந்தது அக்கோஷம்.

சட்டென்று அப்போது ஒரு காட்சி கண்ணில் பட்டது. சந்நிதி நுழைவாயிலின் மேலிருந்த சிற்பச் செதுக்கலை ஒரு பெண் – மொட்டை அடித்திருந்தாள் – தொட்டுக் கும்பிட்டு விட்டு, நின்ற இடத்திலேயே மூன்று தோப்புக்கரணம் போட்டு விட்டுப் போனாள். அவளுக்குப் பின்னால் வந்த பத்துப் பேர் சடங்கு போல அந்தச் சிற்பத்தைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு, சிரத்தையாக மூன்று தோப்புக்கரணம் போட்டு விட்டே நகர்ந்தனர்.

நெரிசல் அதிகமாகி வழி அடைத்துப் போக, அப்படி ஒரு சம்பிரதாயம் கிடையாது என்று விளக்கிச் சொல்லி, கூட்டத்தை வெளியேறச் செய்வதற்குள் காவலர்கள் நூறு தோப்புக்கரணங்கள் போட வேண்டியிருந்தது.

இதை நான் அவனிடம் சொன்னபோது, "உண்மைதான் சார். நம் சமூகம் மக்களையல்ல; மந்தைகளைத்தான் உருவாக்குகிறது. அரசியல்வாதிகளுக்கும் மந்தைகள்தான் வேண்டியிருக்கிறது – மாலை போட, கோஷம் போட, வோட்டுப் போட!" என்றான்.

குடியிருப்புப் பகுதிகளைக் கடந்து, ஆட்டோ பிரதான சாலையில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அவன் ஆட்டோவில் பயணம் செய்வது எனக்கு மிகுந்த உற்சாகம் அளிப்பதாக இருந்தது. மொழி தெரியாத மாநிலம். இலக்கியமும் பேசும் சமூக அக்கறை மிக்க ஆட்டோ டிரைவர். அதுவும் அவனது ஆங்கிலம், நான் பொறாமை கொள்ளத்தக்கதாக இருந்தது.

உஸ்மானியாவில் எம்.ஏ. முடித்திருப்பதாகச் சொன்னான். பிரமாதமான விஷயம் இல்லைதான். அவரவர் சோகங்களின் பின்னணியை ஆராயப்புறப்படுவது வெறும் கால விரயம். ஆனால், அவன் ஆட்டோவில் ஹெமிங்வேயின் கடல் கிழவனைப் பார்த்தபோதுதான் ஆச்சர்யமாக இருந்தது.

"எப்பேர்ப்பட்ட ஜென்மம் சார் அவன்! பெரிய வீரன். மிகப் பெரிய வேட்டைக்காரன்! நீச்சலடிப்பான். போர் முனையில் துப்பாக்கிக் குண்டடி பட்டிருக்கிறான். உள்ளம் எத்தனை இறுகி, எஃகாகியிருக்க வேண்டும்? ஆனால் எழுத்தில் – ஐயோ! என்ன மிருது! கோழிக்குஞ்சு வெட்கப்படும்!"

நான் ஹெமிங்வே படித்ததில்லை என்று சொல்வதற்கு வெட்கமாக இருந்தது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழுக்கு அவ்வளவாக வருவதில்லை. நூலகங்களில் மூலப் பிரதிகள் ஒருவேளை கிடைக்கலாம். ஆனால், தேடியெடுக்கத் தனியே ஒரு பிறவி அருளப்பட்டிருக்க வேண்டும்.

இதை நான் மெல்லிய குரலில் அவனிடம் வருத்தமுடன் சொன்னபோது, "மோசம்! மிக மோசம்!" என்றான், மிகவும் உணர்ச்சிவசப்பட்டவனாக.

"கலை என்கிறோம். இலக்கியம் என்கிறோம். கட்டமைப்பில் பல சிக்கல்கள் மிக்க தேசம் சார் இது! அத்தனை அமைப்புகளும் அழுகி, துர்நாற்றமெடுக்கத் தொடங்கி விட்டன. ஒருதரம் கடல் கொண்டு மீண்டால்தான் உருப்படும்!" என்றான், தீவிரமாக.

"புரட்சியைக் குறிப்பிடுகிறீர்களா?" என்றேன் கொப்பளிக்கும் சிரிப்புடன்.

"புரட்சி! ஹா! அது ஒரு கேவலமான கெட்ட வார்த்தை ஆகிவிட்டது. உங்கள் மாநிலத்துப்

"அவர் பயங்கர ஜால்ரா!"

"அப்படியா?"

"தும்முறப்ப கூட, தலைவர் பேரைச் சொல்ற மாதிரி சத்தம் எழுப்புவார்!"

– அம்பை தேவா



புரட்சியாளர்களைப் பற்றிக் கூட நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் குறும்பாகச் சிரித்தபடி.

ஆட்டோ ஒரு பாலத்தின் மீது விரைந்து கொண்டிருந்தது. நகரம் நெருங்கி விட்டது என்பதைச் சில அடையாளங்கள் மூலம் கண்டு கொண்டேன். எனக்கு நானே செய்து வைத்துக் கொண்ட விளம்பர போர்டு அடையாளங்கள்.

பாலத்தின் கீழே விரிந்து கிடந்த ஏரியில், தூரத்தில் ஒரு படகு தென்பட்டது. காட்சி மிக அற்புதமாக இருந்தது.

என் மனத்தைப் படித்தவன் போல அவன், "இந்த ஏரியை இரவில் பார்க்க வேண்டும் சார். துர்நாற்றம் ஒரு பொருட்டில்லை என்றால், விடிய விடிய நின்று ரசித்துக் கொண்டே இருக்கலாம். கரையோரம் குட்டிக் குட்டி வண்ண விளக்குகள் வரிசையாக எரிவது, ஒரு பெண் மெஹந்தி இட்டுக் கொண்டு விரல்களை விரித்துக் கொண்டு மல்லாக்கப் படுத்திருக்கிறாற்போலிருக்கும்!" என்றான்.

கவிதை போலல்லவா பேசுகிறான்! உண்மையில் அவன் மேல் மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது.

முகம் வெளிப்படுத்தாததையா மொழி வெளிப்படுத்தி விடும்? என் பாராட்டைச் சந்தோஷமுடன் ஏற்றுக் கொள்ளும் விதமாகச் சிரித்தான்.

"விருப்பமிருந்தால் சொல்லுங்கள். இரவு நானே உங்களை இங்கே அழைத்து வந்து, திரும்பக் கொண்டு விடுகிறேன்" என்றான் உற்சாகமாக.

நான் சற்றும் யோசிக்காமல் உடனே ஒப்புக் கொண்டேன்.

நாம்பள்ளி ஸ்டேஷனுக்கு எதிரே முச்சந்தியில் நான் தங்கியிருந்த லாட்ஜ் வாசலில் இறக்கி விட்டு, "என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"சும்மா சுற்றிப் பார்க்க" என்று நான் சொன்ன பதில் ஏதோ ஒரு வகையில் அவனுக்கு மகிழ்ச்சியளித்திருக்க வேண்டும்.

"பரவாயில்லை. சுவாசித்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதரைச் சந்தித்த திருப்தி இன்று எனக்கு" என்றான்.

அன்றைக்கு வந்து படுத்தவன், அலுப்பில் அப்படியே தூங்கிப் போனேன். திடீரென்று கதவு இடிக்கும் சப்தம் கேட்கவும், பதறி எழுந்து மணி பார்த்தேன். ஒன்பது. இரவா? பகலா?



"அந்தத் திருடன் ஏன் சலிச்சுக்கறான்?"

"'என்னதான் நாங்க லலண்டா டிரெஸ் செஞ்சுகிட்டாலும் பத்திரிகைகளில் படம் வரையறவங்க எங்களை கறுப்பு முகமூடியோட கழுத்துல ஸ்கார்ஃப் கட்டிட்டு தூங்கியைத் தூக்கி கட்டிட்ட மாதிரியேதான் வரையறாங்க! ரொம்ப மோசம்'னு புலம்பறான்!"

– பாலு

கதவைத் திறந்தபோது அவன்தான் நின்று கொண்டிருந்தான். தோற்றத்தில் பளிச்சென்று ஒரு மாறுதல் தெரிந்தது. எண்ணெய் தடவி, தலையை வாரிவிட்டிருந்தான். தவிர, இந்நேரத்துக்குக் குளித்திருப்பான் போலும். புத்துணர்ச்சியுடன் புன்னகை செய்து, "மன்னிக்கவும். தொந்தரவு செய்து விட்டேனா?" என்றான் என் உறங்கி வீங்கியிருந்த முகத்தைப் பார்த்து.

"ஒரு நிமிஷம்" என்று உள்ளே போனவனைத் தடுத்தான்.

"முகம் கழுவப் போகிறீர்களா? குளிர் புரட்டி விடும், பழக்கம் இல்லா விட்டால்" என்று எச்சரித்தான்.

நான் முகம் கழுவவில்லை. துண்டால் அழுந்தத் துடைத்து, தூக்கத்தைத் துரத்தினேன். ஒரு தம்ளர் நீர் அருந்திவிட்டு, "போகலாம்" என்று கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

ஆட்டோவில் ஏறியபோது பின் இருக்கையில் ஒரு பிரபலமான தமிழ் நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பார்த்தேன். "உங்கள் வீடு பக்கத்தில்தானா?" என்று கேட்டேன்.

"ஆமாம் சார். இங்கே பப்ளிக் கார்டன் பின்புறம் ரயில்வே லைனை ஒட்டி ஒரு குடிசைப் பகுதி இருக்கிறது. அங்கே இப்ராஹிம் என்றால் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்."

எப்போதும் ஆட்டோ டிரைவர்கள் அவரவர் எல்லைக்குள் பிரபலமானவர்களாகவே

இருக்கிறார்கள். ஒரு குமாஸ்தாவுக்கு வாய்க்காத பிரபலம். ஓர் ஆசிரியருக்கு வாய்க்காத பிரபலம். ஓர் எழுத்தாளனுக்கு வாய்க்காத பிரபலம்.

நானும் ஓர் எழுத்தாளன்தான். வசிக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் பாதிப் பேருக்கு நானொருத்தன் ஜீவித்துக் கொண்டிருப்பதே கூடத் தெரியாது. ஒரு பேச்சுக்கு நான் இதைச் சொன்னபோது அவன் வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

"ஓர் எழுத்தாளர் என் வண்டியில் பயணம் செய்வது என் அதிர்ஷ்டம்" என்றான்.

என் பெயர், ஊர், எழுதிய கதைகள், புத்தகம் உண்டா என்று அடுக்கடுக்காகக் கேட்டுக் கொண்டே வந்தவன், "இங்கே கூட ஒரு தமிழ் எழுத்தாளர் முன்பு இருந்திருக்கிறார். இந்த ஊரைப் பற்றி, ஏரியைப் பற்றி, நிஜாம் சமஸ்தானம் பற்றி, நடந்த கலவரம் பற்றியெல்லாம் ஒரு நாவலில் விரிவாக எழுதியிருக்கிறார். ஆங்கிலத்தில் படித்திருக்கிறேன்" என்றான்.

திரும்பத் திரும்ப எனக்கு வியப்பு ஏற்படுத்துவதாகவே இருந்தது அவன் பேச்சு. தற்செயலாக நேர்ந்துவிடுகிற சில அபூர்வமான சந்திப்புகள், எதிர்பாராத கணத்தில் கண்முன்னே சுடர் விட்டு உதிரும் அந்த ஒற்றை நட்சத்திரம் போல மனத்தில் விடாப்பிடியாக ஏறி உட்கார்ந்து கொண்டு விடுகின்றன.

"உங்களை என்னால் மறக்க இயலாது இப்ராஹிம்" என்றேன் அவன் தோளைத் தொட்டு.

"பலர் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள் சார். எனக்கான அடையாளத்தை நான் இப்படித்தான் பெற வேண்டியிருக்கிறது" என்றான் வருத்தமுடன்.

பாவம், என்னென்ன கனவுகள் வைத்திருந்தானோ?

பாலத்தின் நடுவே வந்ததும் ஓரமாக ஆட்டோவை நிறுத்தினான். இறங்கிக் கொண்டேன். ஸ்வெட்டரை நன்றாக இழுத்து விட்டுக் கொண்டு, மஃப்ளரால் காதுகளைச் சுற்றி மூடிக் கொண்டு பாலத்தின் விளிம்பில் வந்து நின்று ஏரியைப் பார்த்தேன்.

இப்ராஹிம் சொன்னது சரிதான். இரவுக்கென ஒரு பிரத்தியேக முகத்தை மாட்டிக் கொண்டு சலனமற்றுக் கிடந்தது ஏரி. வண்ண விளக்குகளின் சாறு நீர்ப் பரப்பில் இறங்கி, திட்டுத் திட்டாகச் சாயமிட்டாற் போலச் செய்திருந்தது. சிலீரென்ற காற்றும் அமைதியும் பிரவாகமாகத் தாக்க, தோற்றத்தின் எழிலைப் பூரணமாக எடுத்து விழுங்கி விடும் வேட்கையுடன் விழி விரித்து நின்றிருந்தேன்.

ஒரு மணியா? இரண்டா? இப்ராஹிம், "போகலாமா சார்?" என்று கேட்டபோதுதான் சுய நினைவு வந்தது.

"நன்றி இப்ராஹிம். உங்களை வெறும் ஆட்டோக்காரனாக என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இந்தப் பேருதவிக்கு நான் எவ்வளவு பணம் தந்து கடன் கழிக்க முடியும்!" என்றேன், நெகிழ்ச்சியுற்றவனாக.

"உங்கள் இஷ்டம் சார்!" என்றான் புன்னகைத்தபடி. நான் கொடுத்ததில் அவன் மிகுந்த திருப்தி அடைந்தான் என்பதை அவன் முகமே எனக்குக் காட்டிவிட்டது. புறப்பட்டோம்.

இருபதடி கூட ஆட்டோ சென்றிருக்காது. சட்டென்று எதிர்ப்புறம் வந்த ஒரு ஜீப்பிலிருந்து இரண்டு போலீஸ்காரர்கள் வேகமாகக் குதித்து குறுக்கே வந்து கை நீட்டவும், இப்ராஹிம் வண்டியை நிறுத்தினான்.

எனக்குள் கலவரம் மூண்டது.

போலீஸ்காரர்களுள் ஒருவர் ஜீப்பில் இருந்தவரைப் பார்த்துக் குரல் கொடுக்க, ஜீப்பின் பின்புறக் கதவைத் திறந்து ஒரு பெண் வெளிப்பட்டாள்.

புரியாத பாஷை. அந்தப் பெண்ணிடம் போலீஸ்காரர் ஏதோ கேட்க, அவள் இப்ராஹிமைக் கைகாட்டி ஏதோ பேச, நான் படபடப்புடன் அவனைப் பார்த்தேன்.



"அப்பா! இந்த ஃபீடிங் பாட்டில் சரியா வேலை செய்யலை! இந்த கம்பெனிகாரன் மேலே கன்ஸ்யூமர் கோர்ட்டில கேஸ் போட முடியுமான்னு பாரு...!"
– பாலா

நியாயமாக, அந்தச் சூழ்நிலையில் மிகுந்த பதற்றமும் பயமும் யாருக்கும் வரும். ஆனால் இப்ராஹிம் தெளிவான, பயமற்ற குரலில் போலீஸ்காரரிடம் விளக்கம் கூறும் தொனியில் பேசிக் கொண்டிருந்தான்.

சற்றும் எதிர்பாராத கணத்தில் போலீஸ்காரர் அவன் புறங்கழுத்தில் பளார் என்று அறையவும் நான் மிரண்டு, பின் வாங்கினேன். சொக்கப்பனை வெடிப்பது போன்ற சொற்களில் அந்தப் பெண் பேசிக் கொண்டே போக, என் கண் முன்னால் இப்ராஹிம் தரதரவென இழுத்துச் செல்லப்பட்டு ஜீப்பில் ஏற்றப்பட்டான்.

"சார்! சார்!" என்று அவன் என்னைப் பரிதவிப்புடன் அழைத்தது என் கலவரத்தை அதிகரிக்கச் செய்வதாக இருந்தது. 'ஒரு கணமும் இங்கே இனி நிற்க இயலாது. ஓடு. ஓடிவிடு!' என்று உள்ளுக்குள் குரல் ஒலிக்க, எதிர்ப்பட்ட வேறொரு ஆட்டோவைக் கை தட்டி நிறுத்தி ஏறிக் கொண்டேன்.

மிகவும் பயந்திருந்தேன். சற்றும் எதிர்பாராத ஓர் அனுபவம். மென்மையும் இனிமையுமாக எனக்குக் காட்சியளித்த இப்ராஹிம் உண்மையில் யார்? அந்தப் பெண் யார்? எதற்காக போலீஸ் அவனை அழைத்து வந்தது? இப்ராஹிம் மேல் என்ன பிராது கொடுத்திருப்பாள்? போலீஸ் அடித்து இழுத்துப் போகிற அளவுக்கு அவன் என்ன குற்றம் புரிந்திருப்பான்?

கோர்வையற்ற பல காரணங்கள் தோன்றின. எது ஒன்றுமே உண்மை இல்லாமல் இருக்கலாம். அல்லது எல்லாமே உண்மையாக.

பாலம் கடந்து, நகருக்குள் நுழையும் போது திரும்பிப் பார்த்தேன். பாலத்தின் நடுவே இப்ராஹிமின் ஆட்டோ அநாதையாகக் கிடந்தது.

இரண்டு நாட்களில் கிளம்பி விட்டேன். இரண்டு நாட்களும் இப்ராஹிம் கண்ணில் படவில்லை. திடீரென்று அறைக் கதவைத் தட்டி, போலீஸ்காரர்கள் என்னிடம் விசாரிப்பார்களோ என்றெல்லாம் பயந்தேன். நல்ல வேளை. அப்படியெதுவும் நடக்கவில்லை.

மாறாக, சற்றும் எதிர்பாராத விதமாக இப்ராஹிமும் அந்த போலீஸ்காரரும் மிகுந்த சகஜ பாவமுடன் ஒரு டீக்கடையில் நின்று பேசிக் கொண்டிருந்ததை நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் போது கண்டேன்.

அதிர்ச்சியும் குழப்பமும் ஒருங்கே தாக்க, ஒரு கணம் அப்படியே நின்று விட்டேன்.

இலக்கியம் பேசிய இப்ராஹிம். நள்ளிரவில் போலீஸால் இழுத்துப் போகப்பட்ட இப்ராஹிம். அதே போலீஸுடன் சகஜமாகப் பேசிச் சிரித்துத் தேநீர் அருந்தும் இப்ராஹிம்.

சில நெருடலான முடிச்சுகளை அவிழ்க்க இயலாமலே போவதுதான் வாழ்வின் மிகப் பெரிய சுவாரஸ்யம் என்று தோன்றியது. இப்ராஹிம் குற்றம் ஏதும் புரிந்தவனாக இல்லாமலே இருக்கலாம். இதெல்லாம் அவன் வாழ்வில் – தொழிலில் வழக்கமான ஒன்றாக இருக்கக் கூடும். ஆனால் சமநிலையைக் குலைக்கக் கூடிய எந்தவொரு வளையத்திலும் சிக்கிக் கொள்ளாமல் தப்பி ஓடி விடுவதுதான் என் இயல்பாக எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

'சார் சார்' என்று அவன் அலறியபோது நான் பதறித் தாவி ஆட்டோவில் ஏறி, ஓடி மறைந்த காட்சி கண்முன் வந்தது. சற்று வெட்கமாக இருந்தது.

நான் இப்ராஹிமைப் பார்த்தேன். அந்த போலீஸ்காரருடன் சிரித்துப் பேசிக் கொண்டுதான் இருந்தான். இது கூட என் சமநிலை குலைக்கிற விஷயம்தான். ஓடிவிட வேண்டும் என்றுதான் இப்போதும் தோன்றியது.

இன்றோ, நாளையோ எப்போதோ ஒரு தரமாவது அவன் என்னை நினைத்துப் பார்க்காமல் இருக்க மாட்டான். நான் பீதி கொண்டு ஓடிய காட்சியை எண்ணிச் சிரிப்பானாயிருக்கும்.

இலக்கியம் தெரிந்தவனுக்கு, இலக்கியவாதிகள் பற்றியும் அவசியம் தெரிந்திருக்கக் கூடும். ●



"நீங்க ஆனாலும் ரொம்ப 'வெயிட்'டான கதையைத்தான் எழுதி போஸ்ட் செஞ்சிருக்கீங்கன்னு நினைக்கறேன்!"

– பாலு

✉ ஒரு சரியான வீரனுக்கு அழகு,
தோல்விகளை அவன் எப்படி படிக்கட்டு
களாக மாற்றிக்கொண்டு வெற்றி பெறு
கிறான் என்பதுதான். இந்த அடிப்படையில்
'வைகோ'வும் வெற்றி பெற்றவர்தான் என்
பதை அவரது ஜெயித்த கதை நிரூபிக்கிறது.
பாராட்டுகள்.
ப. மூர்த்தி.
பெங்களூர் - 72,

✉ திக்குளித்த எந்தத் தொண்டனுக்காகக்
கட்சி ஆரம்பித்தாரோ அதே தொண்டர்
களை போயஸ் தோட்டத்துக்கு ஓட்டிச்
சென்று வைகோ பலி கொடுத்து விட்டார்
என்பதை என் போன்ற அபிமானிகள்
அறிவர்.
புதுவை ச. புகழேந்தி.
சென்னை - 86,

✉ மும்பையில் கல்யாண விழா போல்
நடந்த கல்கி விழாவை கலைபடத் தொகுத்து
(நிகழ்ச்சியை நேரில் பார்த்தது போன்ற
மகிழ்ச்சியை) அளித்த விதம் கனகச்சிதம்.
த. சத்தியநாராயணன்.
அயன்புரம்,

✉ கூட்டணிக் கட்சிகளின் கூப்பாடு
களைக் கண்டு, குனிந்து, வளைந்து, நெளிந்து,
கும்பிடு போட்டு, பதவியைக் காப்பாற்றிக்
கொள்ள நினைக்கும் பாரதீய ஜனதாவுக்கு,
தலையங்கம் மூலம் சரியான அறிவுரை
வழங்கி விட்டீர்கள்! சபாஷ்!
எஸ். கே. மூர்த்தி.
கும்பகோணம்,

✉ வீரமணியின் பேட்டி கண்டேன். சிறப்
பான கேள்விகள் மூலம் துடிப்பான பதில்
களை வரவழைத்துள்ளீர்கள். வித்தியாச
மான பேட்டி!
எஸ். பொன்னுசாமி.
உடுமலை,

✉ கழுவுற தண்ணீரில் நழுவுற மீனாக
சமாளிக்கும் அயோத்தியாகுப்பத்துக்காரர்
அரசியலுக்கு வர ரெடிதான்.
வெ. ரஜினி ராம்கி.
புனே,

✉ கமி எங்களையே ஹைதராபாத் திரை
விழாவுக்கு நேரடியாக அழைத்துச் சென்று
விட்டார். இந்த சாட்டிலைட் யுகத்திலும்,
வாசிக்கும் பழக்கத்தை வளப்படுத்துவதற்
காக அவர் செய்யும் 'தொண்டு' அளப்
பரியது.
பாலு.
காரைக்குடி,

✉ 10.1.99 இதழில் 'நீங்கள் கேட்டவை'
பகுதியில் தராக 'Our sweetest songs are those
that tell of saddest thought' (The
saddest thought
அல்ல) கீட்ஸ்
எழுதியதாகக் குறிப்பிட்டிருக்
கிறார். இதை எழுதியவர் ஷெல்லி; கீட்ஸ்
அல்ல. அதேபோல் 24.1.99 இதழில்
'லாலுவுக்கு ஒரு சாப்பாட்டு அமைச்சர்'
என்ற தலைப்பின் கீழ் திப்பு 1899ம் ஆண்டு
கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.
திப்பு கொல்லப்பட்டது 1799ல். ஷீலா தீட்
சித் தம் கணவருடன் சினிமா பார்த்ததாகச்
சொல்லப்பட்டிருக்கிறது. ஷீலா தீட்சித் பல
ஆண்டுகளுக்கு முன்பு கணவரை இழந்
தவர். அவர் பார்த்த படத்தின் பெயர் 'குச்
குச் ஹோடா ஹை' என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. 'ஹோடா' அல்ல;
'ஹோதா'. இவ்வளவு தவறுகள் வர
லாமா?
கே.வி. ராமநாதன்.
திருவான்மியூர்,

✉ ராகு கேது கிரகங்களைப் போன்று
ரங்கசாமியும் மெல்ல மெல்ல சபேசனைச்
சுற்றி வளைத்து மீளவொண்ணாத் துயரத்
திற்குத் தள்ளியதை எஸ். சங்கர
நாராயணன் அழகாக எழுதியிருந்தார்.
இந் நான்கு வாரத் தொடருக்கு
நடனத்தின் ஓவியங்களும் வெகு
அழகு!
க. சுந்தர்.
நெய்வேலி,

✉ விளை நிலங்களை ஃப்ளாட் வீடு
களாக்கும் கொடுமை ஒருபுறம் என்
றால் பாரம்பரியம் மிகுந்த, புராதன
வீடுகளை விலைபேசும் கொடுமை
இன்னொரு பக்கம். நான்கு வாரத்
தொடர்களிலேயே என் மனதைத்
தொட்ட கதை 'ராகு கேது ரங்க
சாமி'தான்! சங்கரநாராயணனின்
கலையான நடை என்பதை விட,
(காவிரிக் கரையில் வீட்டை விற்ற)
எங்களைப் போன்றவர்களின்
அனுபவமும் அதில் சேர்ந்திருக்
கிறது.
வெங்கி.
திண்டுக்கல் - 5,

✉ 'பரம் 10,000 சூப்பர் கம்ப்
யூட்டர்' இந்தியாவிலேயே
முதன் முறையாக - தமிழ்
நாட்டில் ஒரு கல்வி நிறு
வனத்தில் இருப்பது நாமெல்
லாம் பெருமைப்படத்தக்க
செய்தி.
திண்டுக்கல்,
ஜனனி பார்கவி.



அருள்மிகு கிருபாலநாதர் மற்றும் வரதராஜப் பெருமாள் ஆலயங்கள், புத்தமங்கலம்.

அமரர் கல்கி அவர்கள் பிறந்த கிராமம்

அமரர் கல்கி அவர்கள் பிறந்த கிராமமான புத்தமங்கலத்தில் (மயிலாடுதுறை வட்டம்) அருள்மிகு கிருபாலநாதர் மற்றும் வரதராஜப் பெருமாள் ஆலயங்கள் சிதிலமடைந்த நிலையில் உள்ளன.

அமரர் கல்கி அவர்களின் நூற்றாண்டு சமயத்தில் அவற்றைத் தமிழ்நாடு அறநிலையத் துறையின் ஒப்புதலுடன் புதுப்பிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத் திருப்பணிக்கு அறநிலையத் துறை ரூ. 9,20,000 மதிப்பீடு செய்து, அரசின் பங்காக ரூ. 4,50,000 வழங்குகிறது. மீதமுள்ள தொகையில் கல்கி குடும்பத்தினரும் நெருங்கிய உறவினர்களும் ரூ. 3,00,000 வழங்கியுள்ளனர். கும்பாபிஷேகச் செலவுகளும் இருக்கின்றபடியால் மேலும் இரண்டு லட்சம் ரூபாய் நன்கொடைகளாகப் பெறுமாறு அறநிலையத் துறை கோரியுள்ளது.

சென்ற ஜனவரி மாதம் 24-ம் தேதி திருப்பணி துவக்க விழாவும் பாலாலயம் அமைக்கும் நிகழ்ச்சியும் புத்தமங்கலம் கிராமத்தில் சிறப்பாக நடந்தேறின.

அமரர் கல்கி அவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருக்கும் அன்பர்கள் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் பரவியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் திருப்பணியில் பங்குபெற ஆர்வமாக இருக்கும். அவரவரும் அதிகபட்சமாகத் தங்களால் இயன்ற அளவில் நன்கொடை அனுப்பி அருள்மிகு கிருபாலநாதர் மற்றும் வரதராஜப் பெருமாள் திருவருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

தங்களுடைய நன்கொடையை மயிலாடுதுறையில் உள்ள எந்த ஒரு வங்கிக் கிளைக்கும் டிடி எடுத்து அனுப்பலாம். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மணல்மேடு கிளையில் (மயிலாடுதுறை வட்டம்) இதற்காகத் தொடங்கப்பட்டுள்ள கணக்கில் அது வரவு வைக்கப்படும்.

காசோலையை **(DD or cheque), "IOB, Manalmedu, A/C No. 13874, Thirupani Nidhi, Kripalanadar Temple"** என்ற பெயரில் எடுத்து பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். நன்றி.




கி. ராஜேந்திரன்,
தலைவர் : புத்தமங்கலம் திருக்கோயில்கள் திருப்பணிக் குழு.
பதிப்பாளர், கல்கி நிறுவனப் பத்திரிகைகள்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097.

03.02.99



குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத்தன்மை

போன்றவைகளுக்கு தெய்வீக மூலிகை மருத்துவம்



குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத்தன்மை போன்றவைகளுக்கு முக்கிய காரணம் நாம் உண்ணும் உணவுகளில் அதிகமாக ரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதாலும், பலவித நோய்களுக்காக அவ்வப்போது வீரியமிக்க ரசாயன மாத்திரைகளை உட்கொள்வதாலும், அடிக்கடி மாமிச உணவுகள் உண்பதாலும், அதிகமான கவலை கொள்ளுதல், பலருடன் உடலுறவு கொள்ளுதல் போன்றவைகளால் கர்ப்பப்பையில் புண் ஏற்படுகின்றது. இதனால் கர்ப்பப்பையில் உள்ள சுரப்பிகள் நன்றாக இயங்காது. மேலும் அதன் சுரப்பு நீரும் திறன் மிக்கதாக இருக்காது தவிர கர்ப்பப்பையும் நன்றாக சுருங்கி விரியும் தன்மையினை இழந்துவிட்டால் முறையான மாதவிடாய் இருக்காது வெள்ளைப்படுதலும் தோன்றும். வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறுகள், மலட்டுத்தன்மை உள்ள தாய்க்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் கடினம்.

கருத்தரிக்காமைக்கு காரணம்

பெண்களுக்கு உற்பத்தியாகும் கரு முட்டைகள் சரியான முதிர்ச்சியும், வளர்ச்சியும் இல்லாதிருத்தல், கருப்பையின் குழாய்கள் அடைப்பு அல்லது சுருங்கி இருத்தல், முட்டையகத்தில் டிவரி குறைபாடு, கருப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பை புண் ஆண்களின் விந்தணு எண்ணிக்கையில் குறைவாகவும், தகுந்த உயிரூட்டத்துடன் இல்லாமல் இருத்தல், ஆண்மைக் குறைவு சரியானநேரம் அறிந்து உடலுறவு கொள்ளாமை, அடிக்கடி உடலுறவு கொள்ளுவதால் முதிர்ச்சி இல்லாத விந்தணு வெளியாகி உயிர்ப்பிக்கும் சக்தி இல்லாதிருத்தல் ஆகியன கருத்தரிக்காமைக்குக் காரணம் ஆகும்.

தெய்வீக மூலிகை வைத்தியம்

விநாயகருக்குரிய அருகம்புல், சக்திக்குரிய வேப்பிலை, சிவனுக்குரிய வில்வம், பிரம்மாவுக்குரிய அத்தி, கங்கைக்குரிய மாவிலை மற்றும் அற்புத மூலிகை மருத்துவ குணம் கொண்ட அரசிலை, ஆலஇலை, நாவல் இலை, முருங்கையிலை, ஓரிலை தாமரை, கீழாநெல்லி ஆகியவைகளைப் பறித்து வந்து வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து சலித்து பின் சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக்கொள்ளவும். பின் இதிலிருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒருடம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு முன் தினமும் காலை இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ளவும் இதனை சுமார் ஆறுமாதம் வரை பின்பற்றவும். இளம் தம்பதிகளுக்கு மிக விரைவிலும், மற்றவர்களுக்கு சற்றுத் தாமதமாகவும் கண்டிப்பாக பலன் தெரியும். இத்தகைய மூலிகைகளினால் வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத்தன்மை நீங்கி கர்ப்பப்பை நன்கு வளர்ச்சி அடையும் விந்தணு, சினை முட்டைகள் நன்கு முதிர்ச்சி அடைந்ததாகவும், வளர்ந்ததாகவும் இருக்கும். மேலும் எலும்புகள், நரம்புகள் பலம் பெற்று ஆண்மைக் குறைவும் மறையும்.

வேப்பிலை, வில்வம், கீழாநெல்லி போன்றன எதிர்ப்பு சக்தியையும், ரத்தம் சுத்தம் அடையவும், அத்தியிலை, நாவல், முருங்கை, ஓரிலை தாமரை போன்றவை நரம்பு மண்டலம் நன்கு இயங்கவும், அரசன், ஆலயிலை, மாவிலை போன்றவை கருத்தரிக்க உதவும். உயிர் அணுக்கள், கருமுட்டை ஆகியவற்றின் எண்ணிக்கை அளவு, வீரியம் ஆகியவற்றை அதிகப்படுத்தவும் உதவும். இத்தகைய மிகமையின் காரணமாகவே திருமண சடங்குகளின்போது இதரன் குச்சிகளை ஓமம் வளர்ப்பார்கள். அப்போது அதன் புகையை தம்பதிகள் இருவரும் சுவாசிப்பதன் மூலம் மேற்கூறிய பலனை அடைவார்கள் என்பது உண்மை.

உணவு முறைகள்

தம்பதிகள் இருவரும் தினம் ஏதேனும் ஒருவேளை வேகவைக்காத பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழநீர்கள், சாலட்கள் போன்றவற்றையே உணவாக உட்கொள்ள வேண்டும். கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பேரிக்காய், வாழை, கொய்யா, ஆப்பிள், பேரீட்சை, திராட்சை, மாதுளை, தர்பூசணி, பாதாம், முந்திரி, இளநீர், கரும்புச்சாறு, தேங்காய், வெங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லி போன்றவற்றில் இருந்து ஏதேனும் இரண்டு (அ) மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளலாம். பின்னர் மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உட்கொள்ள வேண்டும். இதில் கேழ்வரகு, கோதுமை, கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்களையும் அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது. நிலக்கடலை, மூக்குக்கடலை, கொள்ளு போன்றவற்றையும் மாலை வேளைகளில் சுண்டல் செய்து உட்கொள்ளலாம். கிடைத்தால் வெள்ளாட்டுப்பால் சிறிது தண்ணீர் கலந்தும் தம்பதிகள் குடிக்கலாம்.

தவிர்க்க வேண்டியது - புகைத்தல், மதுவகைகள், மாமிச உணவுகள், சர்க்கரை கலந்த இனிப்புகள், ரசாயனம் கலந்த உணவுகள், சர்க்கரை கலந்த இனிப்புகள், ரசாயனம் கலந்த உணவுகள், குளிர்பானங்கள், எண்ணெயில் செய்த பலகாரம், அகத்திக்கீரை, பாகற்காய், பப்பாளி முதலியவை தவிர்க்கவும். இவர்கள் வாரம் ஒருநாள் பகல் ஒருவேளை (சமைத்த) உணவை தவிர்க்கவும். இரவு உணவை 7 மணிக்குள் முடித்தல் வேண்டும்.

உடற்பயிற்சிகள் - நடத்தல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், நின்ற இடத்தில் ஓடுதல், குதித்தல், கயிறாட்டம், கைகால் விரல்களை நீட்டி மடக்குதல் மூச்சுப்பயிற்சி தியானம் போன்றவற்றை தினம் 20 நிமிடம் காலை மாலை செய்தல் நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 ✆ 6424285, 6427638

அறிப்பு சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர் ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம்-விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்

தகவல் டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 25 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR).Ph : 4011589

18 & 19-ந் தேதி-புது டெல்லி:காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆ : 5717126, 5723651

ஆபாசமில்லாமல் ஹஹ்ஹா!

"அம்பத்தாறு வருஷம் முன்னால போயிட்டேன். என்னோட 'பாய்ஸ் கம்பெனி' காலம் அப்படியே நினைவுக்கு வந்துடுச்சு. ராமசாமி அண்ணன், எம்.கே. ராதா, எம்.ஆர். ராதா அண்ணன், டி.எஸ். பாலையா அத்தனை பேரையும் கொண்டு வந்து கொஞ்ச நேரத்துல என் கண் முன்னாடி நிறுத்திட்டாங்க இந்தப் பசங்க...!"

– ஒரு மேடையில் தாம் பேச வந்ததை மறந்து இப்படி நெஞ்சு நெகிழ்ந்து பேசியவர் வி.கே. ராமசாமி. பாராட்டிப் பேசியது, 'மதுரை காமெடி பாய்ஸ்' ஏழு இளைஞர்களை. மோனோ ஆக்டிங், மிமிக்ரி, காமெடி நாடகம் என போகிற இடங்களெல்லாம் இடைவிடாது கலகலப்பூட்டும் இந்த இளைஞர்கள் சமீப காலமாக அனைத்து மீடியாவிலும் வலம் வருபவர்கள். (லேட்டஸ்ட் : 'தூக்கணாங்குருவி' – டிடி சீரியல்.)

"நாங்கள் கல்லூரியில் படிக்கும் போது கேஷுவலாக ஆரம்பித்தவை மோனோ ஆக்டிங், மிமிக்ரி, நாடகம். மதுரை ஹியூமர் க்ளப்பில் சேர்ந்தபோது எங்களுக்கு ஒரு 'ஷேப்' கிடைத்தது. ஒரு டீமாக உருவெடுக்கவும் வழி பிறந்தது. ஏழு வருடம் முன்பு பேராசிரியர் ஞானபண்டிதன் 'நகைச்சுவை மன்றத்தை' மதுரையில் ஆரம்பித்தபோது காமெடி பாய்ஸுக்கு முழு வடிவமும் கிடைத்தது!" என்றார் இக் குழுவின் தலைவர் பாலா.

இந்த ஏழு இளைஞர்களுமே பட்டதாரிகள். வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு இடங்களில் பணிபுரிபவர்கள். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் – ஏன் பல குக்கிராமங்களில் கூட விடிய விடிய நிகழ்ச்சிகள் நடத்தி ஜனங்களை சிரிப்புக் கடலில் ஆழ்த்தியிருக்கின்றனர்.

சுப்ரமணிகண்டன் 'வில்லத்தன'த்தில் ஸ்பெஷலிஸ்ட். பாலமுருகன் 'டான்ஸ்' ஆடுவதில் எக்ஸ்பர்ட். சத்யபாஸ்கர் லேடீஸ் ரோல் – ஆக்ஷன் ரோலுக்கும், தண்டபாணி மிமிக்ரிக்கும் பொருத்தமானவர்கள் என்றாலும் ஏழு பேரும் அனைத்து வித்தைகளையும் கைவரப் பெற்றவர்கள். இவர்களது சிறப்பே ஸ்கிரிப்ட் இல்லாமல் தன்னிச்சையாகப் பேசி நடிப்பதுதான்.

"ஒரு டயலாக் எழுதி மனப்பாடம் செஞ்சு பேசற வேலையே எங்ககிட்ட கிடையாது. ஒரு நிகழ்ச்சியில் ஆறு காட்சி இருக்குன்னா முந்தின நாளே எல்லோருக்கும் சொல்லிடுவோம்! அவ்வளவுதான். அடுத்த நாள் அவங்கவங்களே தங்களைத் தயார்ப்படுத்திட்டு வந்து ஒருமுறை செய்து காட்டுவோம். அப்படியே மேடைக்குப் போயிடுவோம். மேலும் நாங்க ஹ்யூமர் க்ளப்ல இருந்த ஆரம்பக் காலத்துல மாதந்தோறும் வந்தவர்களே வருவர். அவங்ககிட்ட ஏற்கெனவே செஞ்ச காமெடி எதுவும் எடுபடாது. அதுக்காக ஒவ்வொரு முறையும் புதுசு புதுசா தேடி எடுத்துட்டு வந்து செய்து காட்டுவோம். அந்தத் தேடல் எங்களுக்கு இயல்பாகவே மாறிப் போனது" என்கிறார்கள்.

"இப்ப காமெடின்னாலே 'ஆபாசம்'ங்கற மாதிரி ஆயிடுச்சு. ரெட்டை அர்த்த வசனங்கள், ஒருத்தனை அடிச்சு, துரத்தி இம்சைபடுத்தி, கேவலப்படுத்தி செய்யறதுதான் காமெடின்னு ஆகிப் போச்சு. ஆனா ஆபாசம் துளியும் இல்லாத எங்க காமெடிக்கு கை தட்டல் கொடுக்கிறதும் தமிழ்நாட்டு மக்கள்தான். நிமிஷ நேரம் இடைவெளியில்லாமல் ஆடியன்ஸை சிரிக்கச் செய்ய வேண்டும் என்பதே எங்கள் எண்ணம்" என்கிறார்கள் இந்தக் காமெடி பாய்ஸ்.

— கா.சு. வேலாயுதன்





• இடது கோடியில் ஆலன்: சிதம்பரம் நண்பர்களுடன்

கர்ப்ப

கண்டிப்பாக VHP, RSS, BJP, பஜ்ரங்தல், சிவசேனைக்காரர்களுக்கென்றெல்லாமில்லை.... இதை யார் வேண்டுமானாலும் படிக்கலாம்! காசு கொடுத்து, மிஷினரிகள் இந்துக்களை மதமாற்றம் செய்கிறார்கள் என்ற குரல் பல திசைகளிலிருந்தும் ஓங்கி ஒலித்து வருகையில், இது ஒரு வித்தியாசமான குரல்!

ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு சிதம்பரம் சென்றிருந்தோம்.

"மும்பையிலிருந்து தரிசனத்துக்கு வந்திருக்கிறீர்களா? பேஷ்... பேஷ்" என்று ஒருவர் நம்மைப் புளகாங்கிதமடைய வைக்க, இந்த ஓசிப் பாராட்டைப் பொறுக்காமல், எங்கள் உடன் பிறவா- ஸாரி! பழக்க தோஷம்- உடன் பிறந்த சகோதரர் ஜெயசங்கர், "சொந்த ஊரும், வீடும், மனிதர்களும் இருக்கையில், இரண்டே நாளில் ஓடுகின்ற இவர்களையே 'பேஷ்... பேஷ்' என்றால், கடல் கடந்து ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து, ஊரும் தெரியாமல் பாஷையும் புரியாமல் பதினைந்து நாட்களாக பரமேசுவர தீட்சிதர் வீட்டில் முகாமிட்டிருக்கும் ஆலனைப் பற்றி என்ன சொல்வீர்களோ?" என்று நிறுத்தினார்.

அவர் சுட்டிக் காட்டிய திசையில், பரமேசுவர தீட்சிதர் தலைமையில் ஒரு கோஷ்டி அமர்ந்து வேத பாராயணம் செய்து கொண்டிருக்க, பக்கத்திலேயே பரம பக்தியுடன், நீல வேட்டி, நீல அங்கி, சிவப்பு ஷால், கழுத்தில் உருத்திராட்சம், நெற்றியில் விபூதி, சந்தனம், குங்கும சகிதம், ஒரு வெள்ளையர் அந்த மந்திரங்களை ஜெபித்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததைக் கண்டோம்.

கோயிலில் வேட்டி அணிந்து, பூணூல் தரித்த ஆண்களும், ஸல்வார் கமீஸ் போட்டு, பொட்டிட்டு, க்ராப் தலையில் சாமந்திப்பூ செருகிய பெண்களுமாகக் கிட்டத்தட்ட ஒரு டஜன் அந்நியர் தென்பட்டனர். ஆனாலும் கடந்த பன்னிரண்டு வருடங்களாகத் தவறாமல் தரிசனத்திற்கு வருகின்ற ஆலன், வித்தியாசமானவராகப்பட, அவரை அணுகிப் பேச்சுக் கொடுத்தோம்.

ஆலன் க்ரோகர் ஒரு ஆர்கிடெக்ட். ஆஸ்திரேலியாவில் சொந்த பிஸினஸாம். 'Design 5 Architects'என்பது இவரது கம்பெனி பெயர். '5' என்பது பஞ்ச பூதங்களின் அதிபதியான நடராஜரைக் குறிக்கிறதாம். கிறிஸ்துமஸ், புது வருடக் கொண்டாட்டங்களைத் தியாகம் செய்து, இங்கே வருவதற்கு இரண்டு காரணங்கள்- ஒன்று, இங்கே ஆருத்ரா தரிசனம்; இரண்டு அங்கே விடுமுறை சீசன்.

'ஆன்மீகத்தில், அதுவும் இந்து மதத்தில் திடீர் ஈடுபாடு எதனால்? எப்படி?' என்றதும், உணர்ச்சி பொங்க மலரும் நினைவுகளில் நனைத்தார்.

"நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று என்ற இயற்கையம்சங்களுடன் ஐக்கியமான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். யுனிவர்ஸிடியில் படித்துக் கொண்டிருந்த போது 20 வயதிருக்கும். திடீரென்று ஒருநாள், சில அதிர்வுகள் (vibrations) தோன்றி என்னை அலைக்கழித்தன.

"அத்வைத தத்துவத்தின் விதைகள் அன்று தான் என்னுள்ளே தூவப்பட்டன. தெய்வம் என்பது எங்கும், எதிலும், எப்போதும் நிறைந்திருக்கும் ஒரு பேருண்மை! பூரணமானது; நிபந்தனைகளற்ற அன்பைப் பொழியவல்லது; இயற்கையுடன் இயைந்த தன்மையது... என்ற எண்ணங்கள் மெதுவாக என்னுள்ளே

பிரவகித்தன.

"ஆனால் இந்த அனுபவத்தை, கேலி செய்வார்களோ என்ற பயத்தில், பிறருடன் பகிர்ந்து கொள்ளவில்லை. அந்தப் பேரின்ப நிலையை மீண்டும் அனுபவிக்கும் தாகம் மட்டும் குறையவில்லை. பத்து வருடங்கள் கழித்து, எல்லா கிறிஸ்துவப் புண்ணிய ஸ்தலங்களுக்கும் ஒரு 'ஆன்மீக டூர்' அடித்தேன். ஊஹூம்... புண்ணியமில்லை! அப்புறம் லண்டனில் ஒரு கண்காட்சியில் நடராஜர் சிலையை முதன் முதலாகக் கண்டேன்; ஆர்கிடெக்ட் என்ற முறையில், அதன் வடிவமைப்பு என்னை மிகவும் ஈர்த்தது!

"பிறகு 1982ல் முதன் முறை இந்தியா வந்தபோது, டில்லியுடன் திரும்பி விட்டேன்; 86ல், சில நண்பர்களுடன், கோயில்களுக்கு 'உயிர்ப்பு சக்தி'யைத் தருவது எது என்று ஆராய, புராதன ஆலயங்களையும், சிற்ப சாஸ்திர நூல்களையும்தேடி, தென்னிந்தியா வந்தேன். "காஞ்சி, மாமல்லபுரம் போன்ற இடங்களின் நிர்மாண அழகில் லயித்து நிற்கையில், ஒரு ஃப்ரெஞ்சுப் பெண்மணி 'சிதம்பரம் கோயிலைப் பார்த்திருக்கிறாயோ? அசந்து விடுவாய்' என்றாள். ஓடினேன் சிதம்பரத்திற்கு!

கிரகத்தில் ஒரு நியூக்ளியர் ரியாக்டர்!

திருக் கோயிலில் கால் வைத்ததும், முன்பொரு முறை ஏற்பட்ட அதே அனுபவம்... அதே vibrations. கர்பக்கிருஹத்துக்கு வந்தபோது, ஒரு "nuclear reactor"நின்று கொண்டிருந்தது போலிருந்தது.

திகுதிகுவென்ற பிரகாசம்; எரிந்து சாம்பலாக்குகிற நெருப்பில்லை! தூய்மைப் படுத்தி புடம் போடும் நெருப்பு! காலைத் தூக்கி நின்றாடும் நடராஜப் பெருமானின் வடிவில் அந்த ஒளி சங்கமிப்பதைக் கண்டு மெய்சிலிர்த்து நின்றேன்!

"ஆரத்தி காட்டி, ரஹஸ்யத்தை விளக்கி, தீட்சிதர் "திருப்தியா" என்றபோது, எனக்குப் பேச நா எழவில்லை! அன்று டிசம்பர் 25; கிறிஸ்துவர்களுக்கு இறைவன் அவதரித்த நாள்! எனக்கும் அன்றுதான், 'என் கடவுள்' பிறந்த தினம்!"

மறுமுறை அதே சுகானுபவத்தில் அமிழ்ந்து மௌனியாகிவிட்டவரை, "அப்புறம்...?" என்று உசுப்பினோம்.

"உண்மையில் அந்தக் கோயிலின் பரிமாணங்களை, ஒரு ஆர்கிடெக்ட் என்ற முறையில் அளக்கத்தான் வந்திருந்தேன். ஆனால் என் கருவிகளால் அளவிட முடியாத பரிணாமங்கள் அதில் பொதிந்திருந்ததை உணர்ந்து நான் முயற்சியைக் கைவிட்டேன்."

"ம்ம்...?"

"அப்புறம் நண்பர் ஒருவர் பரமேசுவர தீட்சிதரை அறிமுகப்படுத்தினார். அவர் வீட்டிற்குச் சென்றபோது அங்கே வேத பாராயணம் நடந்து கொண்டிருந்தது. மீண்டும் அதே அதிர்வுகள்... இப்போது தான் அவற்றின் ஒலி வடிவையும் உணர்ந்தேன். அதன் பிறகு அவரிடமே அடைக்கலம் புகுந்து, கணேச ஸ்தோத்திரம், மஹா ம்ருத்யுஞ்சய மந்திரம், தைத்ரீய உபநிஷத் முதலியவற்றைக் கற்றேன்..."

ஆசார அனுஷ்டானங்கள் நிரம்பிய தீட்சிதர்களுடன் தங்கி, சைவ உணவை சாப்பிடுவதையும் ஒரு சுகானுபவம் என்கிறார் ஆலன். ஆனால் திரும்பிப் போகும்போது, உடம்பில் கொஞ்சம் 'சத்து' குறைந்தாற்போலிருக்குமாம். அதை ஈடுசெய்ய, ஆஸ்திரேலியாவில் முட்டையும் மீனும் சாப்பிடுவாராம்; பட் நோ 'மீட்'!

இங்கேயுள்ள (அ)சுத்தம், சுகாதாரம், பிச்சைக்காரர்கள் எல்லாவற்றுடனும் இவர் வாழக் கற்றுவிட்டதால், சுத்தமாக 'நோ ப்ராப்ளம்ஸ்'தான்! நிறைய தீட்சிதர் ஃப்ரெண்ட்ஸ் உண்டு; ஆங்கிலத்தில்தான் உரையாடல்கள். ஸம்ஸ்க்ருதம் கற்று வருகிறார். ஆனால் தமிழ் ரொம்பக் கடினமாம்!

ஆஸ்திரேலியாவிலும், சுவாமி தயாநந்தரிடம் தீட்சை பெற்ற மைக்கேல் என்பவரைப் பிடித்து, அத்வைத வேதாந்த சிட்சை எல்லாம் பெற்றிருக்கிறார். வீட்டில் நடராஜர் சிலை வைத்து, அதற்கு ஆரத்தி, பஜனை எல்லாம் செய்கிறாராம். ஒருமித்த கருத்துடையோர் கூடி அத்வைதம், பாகவதம், உபநிஷதம் பற்றி எல்லாம் அலசுவார்களாம். அம்மாவை அழைத்துக் கொண்டு சர்ச்சுக்கும் போவாராம்; அம்மாவும் இவருடைய 'தொழுகை'யில் ஒத்துழைப்பாராம்.

"ஆக, நீங்கள் இப்போது முழுமையான இந்துவாக மதம் மாறிவிட்டீர்களா?" என்ற அஸ்திரத்துக்கும் தளராமல் பதில் சொன்னார்–

"அத்வைதத்தை நம்புபவர்கள் கடவுள் எங்கும் எதிலும் இருப்பதை உணர்வர். அவரவர் நம்பிக்கையின் அடிப்படையில் அவரவர் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். மதமாற்றம் அது இது என்ற பெரிய வார்த்தைகள் ஏன்? religion என்ற இடத்திற்கு நேராக நான் 'ஓம்' என்றுதான் எழுதி வருகிறேன்" என்கிறார். ●

— ஜேயார்


ஜே. ராமன், ஜெயராமன் இருவரும் எங்கள் அலுவலகக் கிளைக்கு ஒரே நாளில் வந்து சேர்ந்தார்கள். அத்தோடு அவர்களுக் கிடையே உள்ள ஒற்றுமை முடிந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜே. ராமன் பெங்களூரிலிருந்து மாற்ற லானவன். இளநிலை அதிகாரி. இளைஞன். அமைதியான சுபாவம்.

'இவனா பெங்களூர்க் கிளையில் விளை யாட்டு மன்றத்தைத் திறம்பட நடத்தியவன்?' என்ற ஆச்சரியத்தை எழ வைத்தான். பிரம் மச்சாரி.

ஜெயராமன் மூத்த குடிமகர். ஹைதரா பாத் கிளையிலிருந்து தாவி வந்தவர் (விருப்ப மாற்றல்). சஷ்டியப்தபூர்த்திக்கு சீக்கிரமே தயாராக வேண்டிய வயது. அதிக ரத்த அழுத்தம் கொண்டவர் என்றது மருத் துவ ரெகார்ட். ஆனால் தமது ஊசி கமெண்ட்கள் மூலம் அவர்தான் மற்றவர் களின் ரத்த அழுத்தத்தை எகிறச் செய்வது வழக்கம் என்றது கிளையிலிருந்து வந்த தகவல்.

இவர்கள் வந்து சேர்ந்த அடுத்த மாதமே எங்கள் மனமகிழ் மன்றத்தின் ஆண்டுத் தேர்தல் வந்துவிட, அதன் செயலாளராக ஜே. ராமனும் (இளமைசாலிப்பா), தலைவராக ஜெயராமனும் (என்ன இருந்தாலும் சீனி யராச்சே) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



மாற்றி விடு!

அதற்கு அடுத்த வாரமே ராமன் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பினான். ஆண்டு முழுவதும் விதவிதமான போட்டிகளை நடத்தப் போவதாக அறிவித்தான். "ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் - இவையே நம் குறிக்கோள்'' என்றிருந்தான். ஓடியாடும் விளையாட்டுகள் தவிர, மூளைக்கு சவால் விடக் கூடிய போட்டிகளையும் நடத்த விருப்பதாக அறிவித்திருந்தான்.

எங்கள் அலுவலகத்தில் கடந்த பல வருடங்களாகவே யாரையும் வேலைக்குச் சேர்க்கவில்லை. கிட்டத்தட்ட எல்லோருக்குமே ஃபார்டி ப்ளஸ் சாப்பிடத் தகுதியான வயது. ஆக, உடலை வருத்திக்கொள்ளும் விளையாட்டுகளில் கொஞ்சம் பேருக்கு மட்டுமே ஆர்வம் என்றானதால், ராமனின் அறிவிப்பு பலருக்கும் பிடித்திருந்தது. அலுவலக நேரத்தில் அதிக அரட்டை, அவ்வப்போது வேலை என்ற நிலை போரடித்தவர்களுக்கு இந்தச் செய்தி செந்தமிழ் நாடானது (காதில் தேன்)!



ஒருவரைத் தவிர - ஜெயராமன். என்னை அழைத்தார்.

"நீங்கதானே மன்றத்தில் உதவிச் செயலாளர்? உங்களையும், என்னையும் கலந்தாலோசிக்காமல் எப்படி ஒரு சுற்றறிக்கையை ராமன் விடலாம்?'' என்றார்.

முதலிலேயே அந்த சுற்றறிக்கையை என்னிடம் காட்டிவிட்டு ''என்ன, அனுப்பலாமில்லே?'' என்று ராமன் கேட்டிருந்தான். ஜெயராமன் சாரிடமும் காட்டியிருப்பான் என்று நினைத்திருந்தேனே.

எனக்கொன்றும் ராமன் செய்தது தப்பாகப் படவில்லை என்றாலும் ஒரு சீனியர் ஊழியரை அலட்சியப்படுத்த மனமின்றி ''நான் ராமனைக் கேட்கிறேன் சார்'' என்றபடி ஒதுங்கினேன்.

நான் எதுவும் சொல்லாமலேயே ராமன் எங்கள் இருவரையும் ஒரு கலந்தாலோசனைக்கு அழைத்தான்.

''முதல்லே ஒரு க்விஸ் நடத்தலாம்னு தோணுது சார். நீங்க என்ன சொல்றீங்க?'' என்றான் ஜெயராமனைப் பார்த்து.

''யார் நடத்தப் போறா? வெளியாட்களை அழைத்து நடத்தச் சொன்னால் மன்றத்தின் பணம் விரயமாகும்'' என்றார்.

'அந்த நிகழ்ச்சியே வேண்டாம்' என்ற ட்ராக்கில் அவர் போவது புரிந்தாலும், அவர் எதிர்பார்க்காத ஒரு பதிலைச் சொன்னான் ராமன் - தானே அந்த நிகழ்ச்சியை நடத்துவதாக.

ஜெயராமனின் முகம் சிறுத்தது. "இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் கேள்விகளை ஒருத்தரே தயாரிப்பதைவிட, நம்ம ஆபிசிலே ஒரு பத்து பேரிடம் ஆளுக்கு ஐம்பது கேள்வி பதில்கள் எழுதித் தரச் சொல்லி, அதிலேயிருந்து நாம வடிகட்டிக் கேட்கலாம். அப்போ சிறந்த கேள்விகள் அமைந்து நிகழ்ச்சி களை கட்டிடும்'' என்றார்.

''அதெல்லாம் சரி வராது சார். கேள்வி கொடுத்தவங்களைப் பங்கெடுக்க அனுமதிக்க முடியாமல் போயிடும். தவிர கேள்விகள் அவுட்டாகி விடும் வாய்ப்புகள் இதிலே இருக்கு.''

அருண் சரண்யா

நான் குறுக்கிட்டேன். "நியாயம்தான் ராமன். நீங்களே இந்த முதல் நிகழ்ச்சியை நடத்துங்க" என்றேன்.

ஜெயராமன் மௌனம் சாதித்தார். அசம்மத மௌனம்!

வினாடிவினா நிகழ்ச்சி மாபெரும் வெற்றியாக அமைந்தது. 'கடிகாரத்தில் உள்ள ஜுவல்ஸ் என்பது எதைக் குறிக்கிறது? ப்ராட் கேஜ் இருப்புப்பாதையின் அகலம் எவ்வளவு? எல்ஜி. பெருங்காயத்தில் எல்ஜி. என்பது என்ன?' – இப்படி எல்லாக் கேள்விகளையும் எல்லோருக்கும் தொடர்புடையதாகவே ராமன் அமைத்ததுதான் அந்த வெற்றிக்குக் காரணம் என்பது புரிய, மனப்பூர்வமாக அவனைப் பாராட்டினேன்.

"சரித்திரத்திலேயிருந்து ஒரு கேள்வி கூடக் கேட்காததை என்னாலே ஒத்துக்க முடியாது" என்று ஜெயராமன் நறுக்காகக் கூறினாலும், அவருக்கு ஆதரவுக் குரல் இல்லை என்பதையும் உணர்ந்ததுமாதிரி இருந்தது.

முதல் நிகழ்ச்சியில் கிடைத்த வெற்றியில் சூட்டோடு சூடாக அடுத்த நிகழ்ச்சிக்குத் திட்டமிட்டான் ராமன். "நம்ம ஊரு நல்ல ஊரு" என்று அதற்குப் பெயரிட்டான். 'ட்ரஷர் ஹன்ட்' என்பார்களே அந்த வகைப் போட்டி.. கேள்வித்தாளில் சென்னையில் பல்வேறு இடங்களைப் பற்றி மறைமுகமாக க்ளு கொடுக்கப்பட்டிருக்கும். இரு சக்கர வாகனத்தில் அந்த இடங்களுக்குச் சென்று அங்கே இருக்கும் வாலன்டியர்களிடமிருந்து கூப்பன்களை வாங்கி வர வேண்டும். இப்படிக் குறைந்த நேரத்தில் எல்லா இடங்களையும் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு.

"நல்ல ஐடியா" என்று நான் சொல்வதற்குள் ஜெயராமன் முந்திக்கொண்டார்.

"நோ நோ. இதை நான் ஒத்துக்க மாட்டேன். யாராவது வேகமா வண்டி ஓட்டி கையைக் காலை முறிச்சிக்கிட்டா என்னாவது?"

"நம்ம நண்பர்கள்தானே சார். முதல்லேயே அவங்ககிட்டே பாதுகாப்பா வண்டியோட்டணும்கிறதைப் பதிய வைக்கிறமாதிரி எடுத்துச் சொல்லிடுவோமே" என்றான் ராமன்.

"அதெல்லாம் ஒத்துவராது. முதல்லே வந்தாதான் பரிசுன்றதாலே வேகமாகத்தான் வண்டி ஓட்டுவாங்க. யாருக்காவது ஏதாவது ஆச்சுன்னா அப்புறம் பொறுப்பாளர்ங்கிற முறையிலே நாமதான் கம்பி எண்ண வேண்டியிருக்கும்"

"அதுக்கெல்லாம் சான்ஸே இல்லே சார். இதுமாதிரி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் இதிலே ரிஸ்க் உண்டுன்றதைத் தெரிஞ்சுக்கிட்டுதான் சேருவாங்க. அதனாலே அவங்க பொறுப்பிலே கலந்துப்பதாகத்தான் அர்த்தம். சட்டம் கூட நமக்குச் சாதகமாகத்தான் இருக்கு."

"மிஸ்டர் ராமன். எனக்கும் சட்டம் தெரியும். 'வாலன்டி நான் ஃபிட் இன்ஜுரியா'தானே? நான் பி.ஜி.எல். படிச்சவன்" என்றார் ஜெயராமன் கர்வமும், எகத்தாளமுமாக.

போட்டி எனக்குப் பிடித்திருந்தாலும், ஜெயராமன் அபசகுனமாகப் பேசியதைத் தொடர்ந்து "ஒருவேளை யாருக்காவது விபத்து நேர்ந்து விட்டால்?" என்ற சந்தேக பயம். எந்த முடிவையும் எடுக்காமல் கலைந்தோம்.

அடுத்தநாளே ஆபீஸில் இந்தப் புதுப் போட்டி பற்றிய விவரங்கள் 'லீக்'காகி விட்டன. நாங்கள் மூவர் மட்டுமே விவாதித்த இந்த விஷயம் வெளியே கசிய ஜே. ராமனோ, ஜெயராமனோ காரணமில்லை என்பதை இந்த இடத்திலே சொல்லிவிடுவதுதான் நியாயம்.

"இது போன்ற வீர விளையாட்டே எங்கள் லட்சியம்" என்று ஏதோ ஸ்பெயின் நாட்டு எருதுச் சண்டை வீரர்கள் போல் அலுவலக நண்பர்கள் தோள் தட்டிப் புளகாங்கிதப்பட, 'மக்கள் விருப்பமே மனமகிழ் மன்றத்தின் விருப்பம்' என்று நான் வெளிப்படையாக ஆதரிக்க, போட்டிக்கான நாள் குறிக்கப்பட்டது.

"முதலிரவும் அதுவுமா ஏன் கண்ணே ஊமை மாதிரி இருக்கே? ஏதாச்சும் பேசேன், ப்ளீஸ்!"

"உங்க அம்மாவை எப்போ வீட்டை விட்டு அனுப்பப் போறீங்க, அத்தான்?"

— சித்தாதம்பி



"கேட்டதை எல்லாம் கொடுக்கும் தியேட்டரா? இது என்ன க்ளு?"

"காமதேனு தியேட்டர்டா."

"வெறுமே கல்லூரின்னு போட்டா என்ன அர்த்தம்? அட, 'ல'க்கு மேலே புள்ளிக்கு பதிலாக சிலுவைக் குறி போட்டிருக்கே. அப்போ லயோலாவாதான் இருக்கணும்."

"ஏன் கிறிஸ்டியன் காலேஜா இருக்கக் கூடாதா?"

அங்கங்கே குழுகுழுவாகப் பிரிந்து க்ளு-ஷீட்டை அலசினார்கள். பிறகு சர்சர்ரென்று ஸ்கூட்டர்களும், மோட்டார் பைக்குகளும் கிளம்பின. ஏற்கெனவே குறிப்பிட்ட இடங்களுக்கு வாலன்டியர்களை அனுப்பியிருந்தோம்.

"எல்லாம் நல்லபடியாக நடக்கணும்" என்றான் ராமன் கொஞ்சம் கவலையுடன்.

"ஜெயராமன் கொடுத்த பேதி மருந்து ஒர்க் அவுட் ஆகுதா? கவலைப்படாதீங்க" என்றேன்.

அடுத்த நாற்பது நிமிடங்களில் மூன்று குழுவினர் வந்து சேர்ந்துவிட, ராமனின் ரத்த ஓட்டம் சீராகத் தொடங்கியது. எந்த வித சிக்கலுமின்றிப் போட்டி முடிந்தது.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும் ராமனின் முக்கியத்துவம் கூடிக் கொண்டே போனது. புது யோசனைகள், திட்டமிடும் பாங்கு, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் விதம் எல்லாவற்றிலும் அவனுக்குத் திறமை இருப்பதைப் பற்றி ஒருமுறை பேச்சு வர, "ராமன்தாம்பா நம்ம ஆபீஸின் இதயமே" என்று சக ஊழியர் ஒருவர் கூறினார். "இதயத்தைவிட மூளைதான் முக்கியமானது சார். இதயம் நின்ன பிறகு கூட உயிர் பிழைச்சவங்க இருக்காங்க. ஆனால் மூளை நின்னு போச்சுன்னா படா பட்" என்றது - வேறு யார்? ஜெயராமன்தான்.

"சரியான 'கில்-ஜாய்' இந்த ஆளு" என்று அவர் முதுகுக்குப் பின்னே பலர் முணு முணுத்தனர். என்றாலும் அவர்களில் சிலர் "உங்க தலைமையிலேதான் மனமகிழ் மன்றம் சக்கைப் போடு போடுது" என்று நேரில் அவரை நக்கலாகப் பாராட்டவும் செய்தனர். "எல்லாம் விதிப்படிதான் நடக்கும். இதிலே எனக்கோ இன்னொருத்தருக்கோ புகழ்மாலை சூட்டுவது தப்பு" என்றார்!

என்னதான் ஜெயராமனின் போக்கு பிடிக்கவில்லையென்றாலும் அவரை நினைத்து எல்லோருமே கொஞ்சம் இளகும்படியான, ஏன் பாராட்டியும் பேச வேண்டிய சூழ்நிலை உருவானது.

அவர் பதவி ஓய்வு பெறும்நாள் வந்து விட, பிரிவுபசார விழா ஏற்பாடானது. எங்கள் எல்லோர் மனத்திலும் ஒரு நெக்குருகல். ஜெயராமனின் கண்களிலும் ஒருவித மினுமினுப்பு தெரிந்தது.

"பாவம், எல்லோருமே ஏதோ ஒரு சமயத்தில் தன் தவறுகளை உணர்ந்து ஈகோவைக் களைகிறார்கள். இறப்பின் விளிம்பில்கூட இந்த ஞானோதயம் வரலாம்" என்று தோன்றியது.

சம்பிரதாயப் பேச்சுகள் முடிந்து நினைவுப் பரிசும் தரப்பட்டபின் ஜெயராமன் எழுந்தார். மூக்கை இருமுறை உறிஞ்சிக்கொண்டு பேசத் தொடங்கினார்.

"இந்த நிறுவனத்தின் ஊழியன் என்பதில் எனக்கு எவ்வளவு பெருமையோ, அதைவிட அதிகப் பெருமை நம் மனமகிழ் மன்றத்தின் தலைவராக நான் பதவி வகித்தேன் என்பதில். உங்கள் பயம் எனக்குப் புரிகிறது - எனக்குப் பிறகு நம் மன்றம் முடங்கிப் போய்விடுமே என்ற கலக்கம்தானே? கவலைப்பட வேண்டாம். பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கைதானே. நான் போனால் என்ன, நம் மன்றத்தில் புது இரத்தம் பாயட்டுமே. உடனடியாக ஒரு தேர்தலை நடத்தி, புதிதாக ஒரு தலைவரையும், புதிதாக ஒரு செயலாளரையும் தேர்ந்தெடுத்தால் போதுமே."



''பத்து நாளா ராமாயணம், ஹரி கதை கேட்டிங்களே, என்ன புரிஞ்சுக்கிட்டீங்க?''

''வெளியே புறப்பட்டுப் போகும்போது பெண்டாட்டியை கூடவே அழைச்சிக்கிட்டுப் போனா பிரச்னைதான்னு புரிஞ்சிக்கிட்டேன்!''

— சீத்தாதம்பி



நாற்பத்தேழாம் அத்தியாயம்

பேய்ச் சிரிப்பு

இளவரசரும் பூங்குழலியும் யானை மீது ஏறிச் சென்ற பிறகு, பின் தங்கியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை நாமும் நேயர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"யானைக்கு மதம் பிடித்துவிட்டது!" என்று சேநாதிபதி கூச்சலிட்டதைக் கேட்டு மற்றவர்களும் அப்படியே முதலில் நம்பினார்கள். யானையைப் பின்தொடர்ந்து குதிரைகளை வேகமாக விட்டுக் கொண்டு போகப் பார்த்தார்கள். ஆனால் அது இயலுகிற காரியமாயில்லை. 'யானைஇறவு'த் துறையை அடைந்ததும் அவர்களுடைய பிரயாணம் தடைப்பட்டு விட்டது. வழக்கம்போல் எல்லாருக்கும் முதலில் சென்ற வந்தியத்தேவனுடைய குதிரை அக் கடல் துறையில் இறங்கிப் பாய்ந்து சேற்றில் அகப்பட்டுக் கொண்டது. மிக்க சிரமப்பட்டு அதை வெளியேற்றினார்கள். ஆனாலும் குதிரை இனிப் பிரயாணத்துக்குத் தகுதியில்லையென்று ஏற்பட்டது.

சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி இன்னது செய்வதென்று தெரியாமல் தலையில் தலையில் அடித்துக் கொண்டார். "என் வாழ்க்கையில் இம்மாதிரி தவறு செய்ததில்லை. எல்லாரும் சும்மா நிற்கிறீர்களே? என்ன செய்யலாம்? இளவரசரை எப்படிக் காப்பாற்றலாம்? யாருக்காவது யோசனை தோன்றினால் சொல்லுங்கள்!" என்றார்.

அப்போது ஆழ்வார்க்கடியான் முன்வந்து "சேநாதிபதி! எனக்கு ஒன்று தோன்று



அமரர் கல்கி

கல்கி கலெக்ஷன்

கிறது; சொல்லட்டுமா?'' என்றான்.

"சொல்வதற்கு நல்லவேளை பார்த்துக் கொண்டிருக்கிறயா, சீக்கிரம் சொல்!'' என்றார் சேநாதிபதி.

"இளவரசர் சென்ற யானைக்கு உண்மையில் மதம் பிடிக்கவில்லை..."


''என்ன உளறுகிறாய்? பின்னே யாருக்கு மதம் பிடித்தது? உனக்கா?''

"ஒருவருக்கும் மதம் பிடிக்கவில்லை. தாங்கள் வேண்டுமென்று பிரயாணத்தைத் தாமதப்படுத்துகிறீர்கள் என்ற சந்தேகம் இளவரசருக்கு உண்டாகி விட்டது. அதனால் நம்மை விட்டுப் பிரிந்து போவதற்காக யானையை அப்படித் தூண்டிவிட்டு வேகமாய்ப் போய் விட்டார். யானையைப் பழக்கும் வித்தையின் சகல இரகசியங்களையும் அறிந்தவர் இளவரசர் என்பதுதான் நம் எல்லோருக்கும் தெரியுமே?''

இது உண்மையாயிருக்கும் என்று சேநாதிபதிக்கும் பட்டது. அவர் உள்ளம் சிறிது நிம்மதி அடைந்தது.

"சரி அப்படியேயிருக்கட்டும்: ஆனாலும் நாம் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்துக்குப் போய்ச் சேர வேண்டும் அல்லவா? அங்கே நடப்பது என்ன என்றாவது தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?''

"போக வேண்டியதுதான். கடற்கழியின் ஓரமாகச் சென்று எங்கேயாவது படகு கிடைத்தால்




அதில் ஏறிக் கொண்டுதான் கடந்தாக வேண்டும். அல்லது பார்த்திபேந்திர பல்லவரின் கப்பல் வரும் வரையில் காத்திருக்கலாம்.''

''வைஷ்ணவரே! நீர் பொல்லாதவர். இளவரசரிடம் இப்படி ஏதாவது சொல்லிவிட்டீர் போலிருக்கிறது.''

''சேநாதிபதி! இந்தப் பிரயாணம் கிளம்பியதிலிருந்து நான் இளவரசருடன் பேசவே இல்லை.''

இதன் பிறகு அவர்கள் அந்தக் கடற்கழியின் ஓரமாகக் கிழக்கு நோக்கிச் சென்றார்கள்.



சென்ற அத்தியாயத்தில் வெளியாகியிருந்த படங்களிலிருந்து நேயர்கள் இலங்கைத் தீவின் வட பகுதியின் இயல்பை ஒருவாறு அறிந்திருக்கலாம். இலங்கையின் வடக்கு முனைப் பகுதிக்கு அந்நாளில் நாகத் வீபம் என்று பெயர் வழங்கியது. அந்தப் பகுதியையும் இலங்கையின் மற்ற பெரும் பகுதியையும் இருபுறத்திலிருந்தும் கடல் உட்புகுந்து பிரித்தது. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லும்படியாகக் கடற்கழி மிகக் குறுகியிருந்த இடத்துக்கு 'யானை இறவு'த் துறை என்று பெயர். சில சமயம் இத்துறையில் தண்ணீர் குறைவாயிருக்கும். அப்போது சுலபமாக இறங்கிக் கடந்து செல்லலாம். மற்ற சமயங்களில் அதைக் கடப்பது எளிதன்று. படகுகளிலேதான் கடக்க வேண்டும்.*

அந்தச் சமயத்தில் இலங்கைக் கடற்கரையோரமாக இருந்த படகுகள் எல்லாம் பெரும்பாலும் மாதோட்டத்துக்கும் திரிகோண மலைக்கும் சென்றிருந்தன. என்றாலும், தப்பித் தவறி எங்கேயாவது ஒன்றிரண்டு படகுகள் இருக்கலாம் என்று எண்ணிச் சேநாதிபதி முதலியவர்கள் பார்த்துக்கொண்டே சென்றார்கள். கடைசியாக மீன் பிடிக்கும் வலைஞனுடைய சிறிய படகு ஒன்று சிக்கியது. அதில் படகோட்டி ஒருவனேயிருந்தான். அவனும் முதலில் வர மாட்டேன் என்று தகராறு செய்தான். கேட்கிறவர் சோழ நாட்டுச் சேநாதிபதி என்று தெரிந்து கொண்டு சம்மதித்தான்.

படகில் ஏறிக் கடல் கால்வாயைக் கடந்தார்கள். ஆனால் பிறகு எப்படித் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தை அடைவது? காட்டு வழியில் நடந்து போய்ச் சேர்வது சுலபமன்று. அதிக நேரமும் ஆகும். ஆகையால், அதே படகை உபயோகித்துக் கீழைக் கடற்கரையோரமாகவே சென்று தொண்டைமானாற்றின் சங்கமத்தை அடைவதென்று தீர்மானித்தார்கள்.

நள்ளிரவு வரையில் படகுக்காரன் கடலோரமாகப் படகு விட்டுக் கொண்டு சென்றான். அதற்குப் பிறகு அவன் களைத்துவிட்டான். மற்றவர்கள் உதவி செய்வதாகச் சொல்லியும் பயனில்லை. "இனி அடிக்கடி திசை திரும்ப வேண்டும். மூலை முடுக்குகளும் கற்பாறைகளும் அதிகம். பாறையில் மோதினால் படகு உடைந்து சுக்குநூறாகி விடும். இனிப் பொழுது விடிந்துதான் படகு செலுத்த முடியும்'' என்றான். சேநாதிபதி முதலியவர்களும் களைப்படைந்து போயிருக்கிறார்கள். ஆகையால் கரையில் இறங்கித் தோப்பு ஒன்றில் படுத்தார்கள்.

வந்தியத்தேவனுக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. அவன் ஆழ்வார்க்கடியானோடு சண்டை பிடித்தான். "எல்லாம் உன்னாலே வந்த வினை!'' என்றான்.

''என்னால் என்ன இப்போது வந்தது?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"நீ ஒன்றையும் மனம் விட்டுச் சொல்வதில்லை. கடம்பூரிலிருந்து நானும் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். கொஞ்சம் சொல்வதுபோல் சொல்கிறாய்; பாதிச் செய்தியை இரகசியமாய் வைத்துக் கொள்கிறாய். இளவரசர் யானைமேல் ஏறியதன் நோக்கம் உனக்குத் தெரிந்திருக்கிறதே? அதை என்னிடம் முன்னமே சொல்லியிருந்தால் நானும் அந்த யானையின் மேல் ஏறியிருப்பேன் அல்லவா? இவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடிப் பிடித்த இளவரசரை இப்போது கைநழுவ விட்டு விட்டோமே? பழையாறைக்குப் போய் இளையபிராட்டியிடம் என்ன சொல்வது?'' என்றான் வந்தியத்தேவன்.

''ஓலையைக் கொடுத்ததும் உன் கடமை தீர்ந்து விட்டது. இன்னும் என்ன?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அதுதான் இல்லை. இளவரசரை இளையபிராட்டியிடம் கொண்டு போய்ச் சேர்த்த பிறகுதான் என்னுடைய கடமை தீர்ந்ததாகும். நீயே

* யானை மந்தைகள் இந்த இடத்தில் கடலில் இறங்கிக் கடந்து செல்வது வழக்கமான படியால் 'யானை இறவு' என்ற பெயர் வந்தது. முற்காலத்தில் இவ்விடத்தில் யானைகளைக் கப்பல்களில் ஏற்றி வெளிநாடுகளுக்கு அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறது.

அதற்குக் குறுக்கே நிற்பாய் போலிருக்கிறதே!”

“இல்லை, அப்பா இல்லை! நான் குறுக்கே நிற்கவில்லை. நாளைக்கே நான் சேநாதிபதியிடம் விடைபெற்றுக் கொண்டு என் வழியே போகிறேன்.”

“உன் காரியம் முடிந்து விட்டது. இளவரசரைப் பிடித்துக் கொடுத்தாகி விட்டது என்று போகப் பார்க்கிறாயாக்கும். உன் பேரில் எனக்கு எப்போதுமே கொஞ்சம் சந்தேகமிருந்தது. இப்போது அது உறுதியாகிறது.”

இவ்விதம் அவர்கள் சிறிது நேரம் சண்டை பிடித்துக்கொண்டிருந்த பிறகு தூங்கிப் போனார்கள். நன்றாகக் களைத்திருந்தபடியால் அடித்துப் போட்டவர்களைப் போல் தூங்கினார்கள்.

பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் படகு வலிக்கும் சத்தம் கேட்டு ஆழ்வார்க்கடியான் முதலில் விழித்துக் கொண்டான். அவன் எதிரே தோன்றிய காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. கடலில் கொஞ்ச தூரத்துக் கப்பால் பாய் மரம் விரித்த மரக்கலம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. அது பயணப் படுவதற்கு ஆயத்தமாக நின்றதாக நன்கு தெரிந்தது. அந்த மரக்கலத்தை நோக்கிக் கரையிலிருந்து ஒரு படகு போய்க் கொண்டிருந்தது. அதில் படகுக்காரனைத்



தவிர மூன்று பேர் இருந்தார்கள். அந்தப் படகு முதல் நாள் மாலை தங்களை ஏற்றி வந்த படகுதான் என்று தெரிந்து கொள்ள ஆழ்வார்க்கடியானுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

அந்த மரக்கலம் எங்கிருந்து திடீரென்று கிளம்பிற்று என்பதையும் அவன் விரைவிலேயே ஊகித்துக் கொண்டான். அவர்கள் படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் கடல் பூமிக்குள் குடைந்து சென்றிருந்தது. மரங்கள் அந்த இடத்தை ஓரளவு மறைத்திருந்தன. அந்தக் குடாவிலேதான் அம்மரக்கலம் நின்றிருக்க வேண்டும். பொழுது விடிந்ததும் புறப்பட்டிருக்க வேண்டும்.

அந்த மரக்கலம் யாருடையது? எங்கிருந்து வந்தது? எங்கே போவது? படகு எதற்காகக் கப்பலை நோக்கிப் போகிறது? அதில் இருப்பவர்கள் யார்?

இவ்வளவு கேள்விகளும் ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் மின்னலைப் போல் தோன்றி மறைந்தன.

''சேநாதிபதி! சேநாதிபதி! எழுந்திருங்கள்!'' என்று கூவினான்.

சேநாதிபதியும் வந்தியத்தேவனும் மற்ற இரு வீரர்களும் திடுக்கிட்டு விழித்தெழுந்தார்கள்.

முதலில் கடலில் நின்ற பாய்மரக் கப்பல் அவர்கள் கண்ணில் தென்பட்டது.

சேநாதிபதி, ''ஓ! அது சோழ நாட்டுக் கப்பல்தான்! பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலாகவே இருக்கலாம்! இளவரசர் ஒருவேளை அதில் போகிறாரோ, என்னமோ? ஐயோ! தூங்கிப் போய் விட்டோமே! என்ன பிசகு செய்தோம்!'' என்றார்.

பிறகு, ''படகு எங்கே? போய்க் கப்பலைப் பிடிக்க முடியுமா என்று பார்க்கலாம்?'' என்றார்.

அதற்குள் படகு சென்று கொண்டிருப்பதும் அவர் கண்ணில் படவே, ''அடடே! அதோ போகிறது நாம் வந்த படகல்லவா? அதில் ஏறிப் போகிறவர்கள் யார்? அடே படகுக்காரா! நில் நில்!'' என்று இரைந்தார்.

படகுக்காரனின் காதில் அது விழுந்ததோ என்னவோ தெரியாது. அவன் படகை நிறுத்தவில்லை. மேலே செலுத்திக் கொண்டு போனான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தான் வந்தியத்தேவன். ''அந்தக் கப்பலில் இளவரசர் போகிறார்!'' என்று சேநாதிபதி கூறியது அவன் செவி வழியாகப் புகுந்து மனத்தில் பதிந்தது. அதற்குப் பிறகு வேறு எந்த நினைவிற்கும் அவன் மனத்தில் இடமிருக்கவில்லை. அவன் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பற்றித்தான் ஏதேனும் சந்தேகம் உண்டா? அவன் கால்களுக்குக் கட்டளையிட வேண்டிய அவசியந்தான் உண்டா? இல்லவே இல்லை! அடுத்த நிமிஷத்தில் அவன் கடலில் பாய்ந்து இறங்கினான். அலைகளைத் தள்ளிக்கொண்டு அதிவேகமாகச் சென்றான். நல்லவேளையாகக் கடலோரத்தில் அங்கே தண்ணீர் அதிகம் இல்லை. ஆகையால் அதி சீக்கிரத்தில் வெகு தூரம் போய் விட்டான். படகின் அருகிலும் சென்று விட்டான். தண்ணீரின் ஆழம் திடீரென்று அதிகமாகி விட்டது. தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டது. ''ஐயோ! நான் முழுகிச் சாகப் போகிறேன்! என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று கத்தினான். படகில் யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. பிறகு சிலர் பேசும் குரல்கள் கேட்டன. படகு நின்றது. படகுக்காரன் குனிந்து கைகொடுத்தான். வந்தியத்தேவன் படகில் ஏறி உட்கார்ந்தான். படகு மேலே சென்றது.

படகில் இருந்தவர்களை வந்தியத்தேவன் ஆராய்ந்து பார்த்தான். ஒருவன் தமிழ்நாட்டானே அல்ல. அரபு நாட்டான் போல் காணப்பட்டான். அவன் எப்படி இங்கு வந்தான் என்ற வியப்புடன் மற்ற இருவரையும் பார்த்தான். அவர்கள் முகத்தில் பாதியை மறைத்து முண்டாசு கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் தமிழ் நாட்டவர்கள் என்று

தெரிந்தது. அது மட்டுமன்று. பார்த்த முகங்களாகவும் காணப்பட்டன. எங்கே, எங்கே பார்த்தோம் இவர்களை? – ஆ! நினைவு வருகிறது! பார்த்திபேந்திர பல்லவனுடன் தம்பளையிலிருந்து திரும்பி வந்தவர்கள் அல்லவா இவர்கள்? ஆழ்வார்க்கடியான் இவர்களைத்தானே இளவரசரைக் கொல்ல வந்தவர்கள் என்று சொன்னான்? ஓகோ! இவர்களில் ஒருவனை வேறோர் இடத்தில்கூடப் பார்த்திருக்கிறோமே? மந்திரவாதி ரவிதாஸன் அல்லவா இவன்? ஆந்தை கத்துவதுபோல் கத்திவிட்டுப் பழுவூர் ராணியைப் பார்க்க வந்தவன் அல்லவா இவன்? சரி, சரி! இளவரசர் கப்பலில் இருப்பது தெரிந்துதான் இவர்கள் அதில் ஏறிக் கொள்ளப் போகிறார்கள்! ஆகா! இளவரசர் போகும் வழியில் இது ஓர் அபாயமா? நாம் அவசரமாய் ஓடி வந்து இந்தப் படகைப் பிடித்து ஏறியது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று...?

படகு போய்க் கொண்டிருந்தது; மரக்கலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

படகில் இருந்தவர்கள் மௌனம் சாதித்தார்கள். வந்தியத்தேவனால் மௌனத்தைப் பொறுக்க முடியவில்லை. பேச்சுக் கொடுத்துப் பார்க்க விரும்பினான்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"தெரியவில்லையா? அதோ நிற்கும் கப்பலுக்குப் போகிறோம்!" என்றான் மந்திரவாதி. பாதி மூடியிருந்த வாயினால் அவன் பேசிய குரல் பேயின் குரலைப் போலிருந்தது.

"கப்பல் எங்கே போகிறது?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அது கப்பலுக்குப் போன பிறகுதான் தெரிய வேண்டும்" என்றான் ரவிதாஸன்.

மறுபடியும் படகில் மௌனம் குடிகொண்டது. வெளியில் கடலின் ஓங்கார நாதம் சூழ்ந்தது.

இப்போது மந்திரவாதி ரவிதாஸன் மௌனத்தைக் கலைத்தான். "நீ எங்கே அப்பா, போகிறாய்?" என்று கேட்டான்.

"நானும் கப்பலுக்குத்தான் போகிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"கப்பலுக்குப் போய், பிறகு எங்கே போவாய்?"

"அது கப்பலில் ஏறிய பிறகுதான் தெரிய வேண்டும்!" என்று பாடத்தைத் திருப்பிப் படித்தான் வந்தியத்தேவன்.

படகு கப்பல் அருகில் சென்றது. மேலேயிருந்து ஓர் ஏணி கீழே இறங்கியது. அதில் ஒவ்வொருவராக ஏறிச் சென்றார்கள். ஏணி மேலே போவதற்குள் வந்தியத்தேவன் அதில் தொத்திக்கொண்டான். கப்பலின் மேல்தளத்தில் ஏதோ பேச்சு நடந்தது. அவனுக்குப் புரியாத பாஷையாகத் தொனித்தது. வந்தியத்தேவன் இன்னும் துரிதமாக ஏணியின் மீது ஏறிக் கப்பலின் தளத்தில் குதித்தான். குதித்த உடனே, "எங்கே இளவரசர்?" என்று இரைந்துகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.


சுற்றிலும் அவன் பார்த்த காட்சி அவனுடைய இரும்பு நெஞ்சத்தையும் சிறிது கலக்கிவிட்டது. அவனைச் சுற்றிலும் பயங்கரரூபமுள்ள அரபு நாட்டு மனிதர்கள் நின்றார்கள். ஒவ்வொருவனும் ஒரு ராட்சதனைப் போல் தோன்றினான். எல்லாரும் அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவனுடைய கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.


"ஏதோ பெரிய தவறு செய்து விட்டோம்" என்ற உணர்ச்சி வந்தியத்தேவன் உள்ளத்தில் உதித்தது. இது சோழ நாட்டுக் கப்பல் அல்ல; இருக்க முடியாது. இதில் உள்ளவர்கள் தமிழ் மாலுமிகள் அல்ல. பெரிய பெரிய குதிரைகளை விற்பதற்காகக் கொண்டு வரும் அரபு நாட்டு மனிதர்கள்.

இந்தக் கப்பலில் இளவரசர் இருப்பது இயலாத காரியம். அவசரப்பட்டு

வந்து ஏறி விட்டோம். தப்பிச் செல்வது எப்படி? கப்பல் ஓரத்தில் நின்று குனிந்து பார்த்தான். படகு போய்க்கொண்டிருந்தது. "படகுக்காரா! நிறுத்து!" என்று கூவிக்கொண்டு கடலில் குதிக்கப் போனான். அச்சமயம் ஒரு வஜ்ரத்தை நிகர்த்த கை பின்னாலிருந்து அவனுடைய குரல்வளையைப் பிடித்தது. ஓர் இழுப்பு; ஒரு தள்ளு. வந்தியத்தேவன் கப்பல் தளத்தின் மத்தியில் வந்து விழுந்தான். அவனுக்கு உக்கிர ஆவேசம் வந்துவிட்டது. குதித்து எழுந்து அவனைத் தள்ளியவனது முக வாய்க் கட்டையில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அந்த ஆறு அடி உயரமுள்ள அராபியன் தனக்குப் பின்னால் நின்றவனையும் தள்ளிக்கொண்டு படார் என்று விழுந்தான்.

வந்தியத்தேவனுக்குப் பின்னால் பயங்கரமான உறுமல் சத்தம் கேட்டது. நல்ல சமயத்தில் திரும்பிப் பார்த்தான். இல்லா விட்டால் அவன் முதுகில் கத்தி பாய்ந்திருக்கும். திரும்பிய வேகத்தோடு கத்தியைத் தட்டி விட்டான். அது





'டணார்' என்ற சத்தத்துடன் கப்பலில் விழுந்து, அங்கிருந்து தெறித்துப் பாய்ந்து, கடலில் விழுந்து மறைந்தது.

மறுகணம் வந்தியத்தேவனை நாலா புறத்திலிருந்தும் பலர் வந்து பிடித்தார்கள். பிடித்தவர்கள் புரியாத பாஷையில் ஏதேதோ பேசிக்கொண்டார்கள். அவர்களுடைய தலைவன் அதிகாரக் குரலில் கட்டளையிட்டான். உடனே மணிக்கயிறு கொண்டு வந்து வந்தியத்தேவனுடைய கால்களையும் கைகளையும் கட்டினார்கள். கைகளை உடம்போடு சேர்த்துப் பிணைத்தார்கள். பின்னர் நாலு பேராக அவனைத் தூக்கிக்கொண்டு கீழ்த்தளத்துக்குப் போனார்கள். போகும்போதெல்லாம் உதைத்துத் திமிறி விடுவித்துக் கொள்ள வந்தியத்தேவன் முயன்றான். அந்த முயற்சி பலிக்கவில்லை. கப்பலின் அடித்தளத்தில் கொண்டு போய் அங்கே அடுக்கியிருந்த மரக்கட்டைகளின் மீது அவனைப் படார் என்று போட்டார்கள். அந்தக் கட்டைகளில் ஒன்றோடு சேர்த்துக் கட்டி விட்டு மேலே சென்றார்கள்.

கப்பல் அப்படியும் இப்படியும் அசைந்து ஆடிற்று. கப்பல் தன் பிரயாணத்தைத் தொடங்கி விட்டது என்று வந்தியத்தேவன் அறிந்தான். கப்பல் ஆடிய போது மரக்கட்டைகள் அவன் மீது உருண்டு விழுந்தன. அவற்றை விலக்கிக் கொள்ள முடியாமல் அவனுடைய கைகள் கட்டப்பட்டிருந்தன.

"இந்த முறை மட்டும் தப்பிப் பிழைத்தால் இனி அவசரப்பட்டு எந்தக் காரியமும் செய்வதில்லை. ஆழ்வார்க்கடியானைப் போல் ஆழ்ந்து யோசித்த பிறகே செய்ய வேண்டும்'' என்று வந்தியத்தேவன் மனத்தில் எண்ணிக்கொண்டான்.

அச்சமயம் பேய் சிரிப்பது போன்ற சிரிப்புச் சத்தம் அருகில் கேட்டது. வந்தியத்தேவன் மிகச் சிரமத்துடன் சற்று முகத்தைத் திருப்பிப் பார்த்தான். அங்கே மந்திரவாதி ரவிதாஸன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இதுவரை



மந்திரவாதியின் முகத்தில் பாதியை மறைத்துக் கொண்டிருந்த துணி இப்போது நீக்கப்பட்டிருந்தது.

"அப்பனே! அந்தச் சோழர் குலத்துப் புலியைத் தேடிக்கொண்டு வந்தேன். புலி அகப்படவில்லை. ஆனால் வாணர் குலத்து நரியாகிய நீ அகப்பட்டுக் கொண்டாய்! அந்த வரைக்கும் அதிர்ஷ்டந்தான்!" என்றான்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளில் வந்தியத்தேவன் படகில் ஏறிச் சென்ற வரையில்தான் கரையில் இருந்தவர்கள் பார்த்தார்கள். மரக்கலத்திற்குள்ளே நடந்தது இன்னவென்பது படகோட்டிச் சென்றவனுக்கே தெரியாது. அவன் உடனே திரும்பிக் கரைக்கு வந்து சேர்ந்தான்.

சேநாதிபதி முதலியவர்கள் படகில் ஏறிக்கொண்டார்கள். இனி அந்த மரக்கலத்தைத் தொடர்ந்து போய்ப் பிடிக்க முடியாது என்ற தீர்மானத்துக்கு அவர்கள் வந்திருந்தார்கள். ஆகையால், தொண்டைமானாற்றின் சங்கமத்துக்குப் போய்ப் பார்க்க அவர்கள் எண்ணினார்கள். இன்னொரு கப்பல் அங்கே இருக்கலாம். அதில் ஒருவேளை இன்னும் இளவரசர் இருக்கலாம். எப்படியும் ஏதாவது செய்தியாவது கிடைக்கும் அல்லவா?

படகுக்காரனைக் கேட்டுப் பார்த்தார்கள். அவனிடமிருந்து ஒரு விவரமும் தெரியவில்லை. "படகில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். அதிகாலையில் யாரோ வந்து தட்டி எழுப்பினார்கள். கப்பலில் கொண்டு விட்டால் நிறையப் பணம் தருவதாகச் சொன்னார்கள். நீங்கள் விழித்தெழுவதற்குள் திரும்பி வந்து விடலாம் என்று போனேன். வேறொன்றும் தெரியாது" என்றான்.

மேலே கண்ட வரலாறுகளில் ஆழ்வார்க்கடியான், தான் அறிந்த வரையில் ஒன்று விடாமல் இளவரசரிடம் கூறினான்.

பின்னர், "இளவரசே! வந்தியத்தேவன் கடலில் குதித்துப் பாய்ந்து சென்றபோது அவனைத் தொடர்ந்து நானும் போகலாமா என்று முதலில் நினைத்தேன். ஆனால் எனக்குக் கடல் என்றால் எப்போதுமே சிறிது தயக்கம் உண்டு. நன்றாக எனக்கு நீந்தத் தெரியாது. அத்துடன், அதோ போகிறதே, அந்தக் கப்பலைப் பற்றியும் எனக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. அதில் தாங்கள் ஏறிப் போவது சாத்தியமில்லை என்று தோன்றியது. இன்னும், அந்தக் கப்பல் சோழ நாட்டுக் கப்பலாயிருக்க முடியுமா என்ற ஐயமும் உண்டாயிற்று. இதைப் பற்றிச் சேநாதிபதியிடமும் கூறினேன். இருவரும் இங்கே வந்து பார்த்து முடிவு செய்வது என்று தீர்மானித்துக் கொண்டு வந்தோம். தங்களைப் பார்த்த பிறகுதான் எங்கள் மனம் நிம்மதி அடைந்தது!" என்றான்.

ஆழ்வார்க்கடியான் கூறியதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்த அருள்மொழி வர்மர், "ஆனால் என் மனத்தில் நிம்மதி இல்லை. திருமலை! வந்தியத்தேவன் அந்தக் கப்பலில் போகிறான். அவனைப் பழுவேட்டரையர்கள் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ளி விடுவார்கள்!" என்றார்.

அப்போது சேநாதிபதி, "இளவரசே! அந்தக் கொடியவர்களின் அதிகாரத்தை எதற்காகப் பொறுத்திருக்க வேண்டும்? தாங்கள் மட்டும் சம்மதம் கொடுங்கள். அடுத்த பௌர்ணமிக்குள் பழுவேட்டரையர்களின் அதிகாரத்தைத் தீர்த்துக் கட்டி அந்தப் பாதாளச் சிறையில் அவர்களையே அடைத்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்றார்.

"ஐயா! என் தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக நான் அணுவளவும் நடந்து கொள்வேன் என்று தாங்கள் கனவிலும் எதிர்பார்க்க வேண்டாம்!" என்றார் இளவரசர்.

இந்தச் சமயத்தில் குதிரை ஒன்று வேகமாக வரும் சத்தம் கேட்டு எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்திலேயே அந்தக் குதிரை நின்றது. முகக்கயிறு, உட்கார ஆசனம் ஒன்றுமில்லாமல் அந்தக் குதிரை மேல் ஏறி வந்தவன் ஒரு ஸ்திரி என்று அறிந்ததும் அனைவரும் வியப்படைந்தார்கள்.

(தொடரும்)

கல்கி கலெக்ஷன்

என் ஆலயப்

இந்தத் தலைப்பைக் குறித்து நீங்கள் என்ன நினைத்தாலும் நினைத்துக் கொண்டு போங்கள். ஆனால் நான் ஹரிஜனங்களுக்குப் பின் வாங்குவதில்லையென்று தீர்மானித்து விட்டேன்.* கோவிலுக்கு அவர்கள் போனால் மட்டும் படாடோபமாய் "ஹரிஜன ஆலயப் பிரவேசம்" என்று பெயர் கொடுக்கிறது; நானும் நீங்களும் போனால், "கோவிலுக்குப் போனான்" என்று அலட்சியமாய்ச் சொல்கிறது! இந்த அநீதிக்கு நான் சம்மதிக்க முடியாது. தனித் தமிழில், ''என் கோவில் நுழைவு'' என்று சொன்னாலும் நன்றாயில்லை. "ஆலயப் பிரவேசம்" என்றால்தான் ''பட்டணப் பிரவேசம்", "பிராயோபவேசம்" என்பவற்றைப் போல் கம்பீரமாக இருக்கிறது. ஆகையினால் "என் ஆலயப் பிரவேசம்" என்று போட்டுக் கொண்டேன்.

குற்றால நாதர் ஆலயத்தைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள மூன்று பிரசித்தமான ஆலயங்களுக்குள் நான் இந்தத் தடவை பிரவேசம் செய்தேன். முதலாவது, ஸ்ரீரங்கம் ரங்கநாதரின் ஆலயம்; இரண்டாவது, மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில்; மூன்றாவது, கும்பகோணம் கும்பேசுவர ஸ்வாமி கோவில்.

ஸ்ரீரங்கத்தில் மிளகாய்ப்பொடி உற்சவம் நடப்பதற்கு முன்னாலேயே நான் போய் விட்டேன். ஆனாலும், கோவிலுக்குள் பிரவேசிக்கும்போதே அங்கு ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பது தெரிய வந்தது. முக்கியமாக, அது என் மூக்குக்குத் தெரிந்தது. "இதென்ன கூத்தாயிருக்கிறது? இது ஸ்ரீரங்கம் கோவில்தானா? வேறு ஏதாவது கோவிலா? ஸ்ரீரங்கம் கோவிலாயிருந்தால், கோவில் தூண்களிலிருந்து ஒரு திவ்ய பரிமள வாசனை வந்து கொண்டிருக்குமே, அதைக் காணோமே?" என்று திகைத்துப் போனேன். நூறு நூறு வருஷமாக ஸ்ரீரங்கநாதரின் பக்தர்கள் பொங்கல், புளியோதரை முதலிய பிரஸாதங்களைச் சாப்பிட்டு விட்டு, தங்களுடைய திருக்கரங்களை அந்தத் திருத்தூண்களில் துடைத்து விட்டுப் போயிருந்ததன் பயனாக, அந்தத் தூண்களிலிருந்து அப்படிப்பட்ட பரிமள சுகந்தம் வருவது வழக்கம். இப்போது அந்த வாசனையைக் காணோம். தூண்களைப் பார்த்தாலோ, எல்லாம் சுத்தமாயிருந்தன. திருநெய்ப் பிசுக்கு, பிரஸாத சேஷம், சுண்ணாம்புக்காரை ஒன்றுமேயில்லை. தூண்களில் செதுக்கப்பட்டிருந்த சிற்ப வேலைகள் எல்லாம் நன்றாய்த் தெரிந்தன.

ஸ்ரீரங்கம் கோவிலில் இது ஒரு பெரிய புரட்சியாகவே எனக்குத் தோன்றிற்று. இந்தப் புரட்சிக்குக் காரணமானவர் மாஜி புரட்சிக்காரரான டாக்டர் ராஜன்தான் என்பதையும் தெரிந்து கொண்டேன். சுகாதார மந்திரியையே கோவில்களுக்கும் மந்திரியாகப் போட்டது எவ்வளவு பொருத்தமானது என்றும் அப்போது எனக்குத் தெரிந்தது.

டாக்டர் ராஜன் இம்மாதிரி கோவில் தூண்களையும், தரையையும் சுத்தப்படுத்தியதோடு நிற்பாரா, அல்லது, கோவில் அர்ச்சகர்களையும் பிடித்துக் குளிப்பாட்டி சலவைத் துணி உடுத்தித்தான் விடுவாரா என்று நான் யோசித்துக் கொண்டு நிற்கையில், ஒரு அய்யங்கார் ஸ்வாமிகள் வந்தார். கோவிலைச் சுற்றிக் காட்டுவதாயும், பிறகு பெருமானையும் தாயாரையும் எனக்காக சேவை சாதிக்கச் சொல்வதாயும் தெரிவித்தார். கோவிலை நான் ஏற்கெனவே பல முறை பார்த்திருந்த போதிலும், அவருடைய ஒத்தாசையை நிராகரிக்க மனமின்றி அவருடன் வருவதற்கு ஒத்துக் கொண்டேன். அய்யங்கார் ஸ்வாமிகள் கோவில் முழுதையும், – ஸ்ரீரங்கத்து உலக்கை பிடிக்கிற இடம் உள்பட– நன்றாக எனக்குக் காட்டினார். ஒவ்வொரு இடத்தையும், ஒவ்வொரு சந்நிதியையும் பற்றி விவரமாகச் சொல்லிக் கொண்டு வந்தார். பெருமான் சந்நிதியையும், தாயார் சந்நிதியையும் சேவிக்கப் பண்ணினார்; பிரஸாதமும் வாங்கிக் கொடுத்தார். இடையிடையே, தாம் வட நாடெல்லாம் சுற்றிப் பார்த்

* இன்று 'தலித்' என்கிறார்கள். அன்று அண்ணல் காந்தி சூட்டிய 'ஹரிஜன்' என்ற பெயர்தான் பிரபலமாயிருந்தது.

திருப்பதாகவும், சென்னையில் பல பெரிய மனுஷர்களைத் தமக்குத் தெரியுமென்றும் கூறி வந்தார்.

"இது தான் திருக்கிணறு. இதில் திருத் தீர்த்தம் இருக்கிறது. இந்தத் தீர்த்தத்தைக் கொண்டுதான் பெருமாளுக்குத் திரு ஆராதனை செய்வது வழக்கம்- உங்களுக்கு மயிலாப்பூரில் திருநாராயணய்யங்கார் ஸ்வாமிகளைத் தெரியுமோ? எனக்கு நன்றாய்த் தெரியும். அடியேனைப் பார்த் தால் விட மாட்டார். பத்து நாளானாலும் போகக் கூடாதென்பார்- இது தான் பொன்னரங்கம் என்று சொல்கிறது. நன்



பிரவேசம்!

றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். அருமை யான சேவை. வட தேசத்தில் காசி, மதுரை, துவாரகை எங்கேயும் இப்பேர்ப்பட்ட சேவை கிடையாது. இதுதான் சொர்க்க வாசல்..." என்று இவ்வாறு சொல்லிக் கொண்டு வந்தார். நானும் கேட்டுக் கொண்டு வந்தேன்.

எல்லாம் முடிந்து விடை பெற்றுக் கொள்ளும் சமயம் வந்தபோது, அவர் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, "பாருங்கள்! இப்பேர்ப்பட்ட அருமையான கோவிலை நமது பெரியவர்கள் கட்டி வைத்திருக் கிறார்கள். இப்போது காங்கிரஸ் மந்திரிகள் வந்து எல்லாவற்றையும் பாழாக்கப் பார்க் கிறார்கள்! நம் ஊர் அய்யங்கார் மந்திரி யாக வந்திருக்கிறார் என்று பெருமைப் பட்டுக் கொண்டிருந்தோம். அவரே இப் போது இப்படிப்பட்ட அநியாயம் பண்ணு கிறார்..." என்றார்.

"எந்த ஐயங்காரைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அவர்தான், டாக்டர் ராஜன்..."

"டாக்டர் ராஜன் அய்யங்காரா, என்ன?"

"ஆமாம்; அசல் வடகலை அய்யங்கார்."

"ஓஹோ! அதனால்தான் அப்படிச் செய்கிறார்! ஸ்ரீரங்கநாத ஸ்வாமி தென் கலை அய்யங்கார்தானே, அவருடைய கோவில் எப்படியாவது குட்டிச்சுவராய்ப் போகட்டுமே..."

"என்ன சொன்னீர்? ரங்கநாதர் தென் கலையென்று யார் ஐயா சொன்னது உமக்கு?" என்று அந்த அய்யங்கார் ஸ்வாமி ஓங்கினார் குரலை.

"பொறும், ஐயா, பொறும்! அப்படியா னால் ரங்கநாதர் வடகலை அய்யங்கார் தானோ?" என்றேன்.

"சந்தேகமில்லை!"

"சரி; அப்படியானால் நான் டாக்டர் ராஜனிடம் போய்ச் சொல்லி, பொங்கல் பிரஸாதத்தை இனிமேல் வடகலை அய்யங் கார்கள் மட்டுந்தான் தூணில் துடைக்க லாம் என்று உத்தரவு போடச் சொல் கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு வெளியேறினேன்.

ஸ்ரீரங்கம் கோபுர வாசலுக்குக் கொஞ்ச தூரத்தில், சங்கரர் கோவில் இருக்கிறது. அதனுடைய முன் வாசல் வளைவைப் பார்த்ததும் உள்ளே போய்ப் பார்க்க வேண்டுமென்ற ஆசை யாருக்கும் உண்டாகும். அவ்வளவு அழகான அந்த வாசல் வளைவு, ஸ்ரீமதி அலமேலு ஜயரா மய்யரின் நன்கொடையினால் கட்டப் பெற்றது என்று தெரிந்தபிறகு, உள்ளே போகாமல் வரக்கூடாதென்று தீர்மானித்து விட்டேன்.

ஸ்ரீ சங்கரர் கோவில் வெகு அழகாயிருக்

அமரர் கல்கி

கிறது; சாந்தம் குடிகொண்டிருக்கிறது. ரிஷி ஆசிரமம் என்றே சொல்லலாம். அங்கே ஒரு முனிபுங்கவரும் இருக்கிறார்; "வாணி விலாஸினி" அச்சுக்கூடத் தலைவரான ஸ்ரீ டி.கே.பாலசுப்பிரமணிய அய்யரைத்தான் சொல்கிறேன். இந்த அழகிய ஆசிரமக் கோவில் அவருடைய முயற்சியினால்தான் கட்டப் பெற்றது. எத்தனையோ அரிய சம்ஸ்கிருத நூல்களை அச்சிட்டு வெளி யிட்டு தேசத்துக்குப் பரமோபகாரம் செய் திருக்கிறார். வேதாந்தத்தைக் கரைகண்ட இந்தப் பெரியவர், இந்த சாந்தமயமான ஆசிரமத்தில் இருந்தும், அவருக்கு மனச் சாந்தி மட்டும் ஏற்படவில்லை. காங்கிரஸ் மந்திரிகளால் கோவில் தெய்வங்களுக்கு வந்துவிட்ட ஆபத்தை எண்ணி எண்ணி தூர்வாச அவதாரம் எடுத்திருக்கிறார்! இந்த அவதாரத்தில் அவர் ஹரிஜனங் களைத் தான் எரிக்கப் போகிறாரோ, அல் லது தெய்வங்களையே எரிக்கப் போகிறாரோ, அல்லது நடுவில் வரும் என் னைப் போன்ற நிரபராதிகளைத்தான் எரிக் கப் போகிறாரோ தெரியாதாகையால், ஸ்ரீ சங்கரர் கோவிலை விட்டுக் கிளம்பும் வரையில் நெஞ்சு அடித்துக் கொண்டுதானி ருந்தது.

யுத்த சமாசாரத்துக்கு அடுத்தபடி யாகத் தற்சமயம் தமிழ்நாட்டில் எல்லாரு டைய கவனத்தையும் கவர்ந்திருப்பது ஆல யப் பிரவேச விஷயம். இரண்டு பேர் சேர்ந் தால் கோவில் திறப்பைப் பற்றிப் பேசா மலிருப்பது கிடையாது. ஆகவே, குற்றா லத்திலும் இதைப் பற்றிப் பேச்சு வராமல் இருக்குமா? பென்ஷன் சர்க்கிள் இன்ஸ் பெக்டர் ஒருவர் எங்கள் ஜாகைக்கு அடுத்த வீட்டில் இருந்தார். அவர் கும்பகோணம் தாலூகாவில் ஒரு வைதிக கிராமத்தைச் சேர்ந்தவர். அந்த கிராமத்தில் சமீபத்தில் அக்கிரகாரத்தின் வழியாக ஹரிஜனங்கள் விடப்பட்டார்கள் என்று பத்திரிகையில் வெளியாகியிருந்தது. நான் அவரை இதைப் பற்றிக் கேட்டேன். அவருடைய முயற்சி யினால்தான் மேற்படி காரியம் நடந்தது என்று தெரிய வந்தது. ஹரிஜன விடுதலை யில் அவருக்கு அவ்வளவு சிரத்தை எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி அவர் பின் வரும் சம்பவத்தைக் கூறினார்:-

"இந்தத் தென்காசி தாலூக்காவில் நான் இன்ஸ்பெக்டராயிருந்தபோது, ஒரு கேஸ் விசாரணை செய்ய வேண்டி வந்தது. அது அண்ணன்-தம்பி சண்டை, அண்ணன் நாடார்; தம்பி முஸ்லிம். தம்பி முஸ்லிம் ஆனதும் மலாய் நாட்டுக்குப் போய் விட் டான். அங்கிருந்து கொஞ்சம் பணம் சம்பாதித்துக் கொண்டு திரும்பி வந்தான். திரும்பி வந்தவன் பிதிரார்ஜித சொத்தில் பங்கு கேட்டான். இதுதான் தகராறுக்குக் காரணம். விசாரணையின்போது ஊர்ப் பெரிய மனுஷர்கள் சிலர் பக்கத்தில் இருந் தார்கள். தம்பி சாவதானமாக வந்து அவர் கள் மத்தியில் உட்கார்ந்தான். அண்ணன் மட்டும் தூரத்தில் கை கட்டி நின்று கொண்டிருந்தான். தம்பி முஸல்மானான தால் அவனுக்கு அந்த உரிமை ஏற்பட்டு விட்டது. ஆனால் ஹிந்துவாகவேயிருந்த அண்ணனோ, தூரத்தில் நிற்க வேண்டியதா யிற்று. இந்த அநியாயத்தை என்னால் சகிக்க முடியவில்லை. அண்ணனையும் வந்து அருகில் உட்காரச் சொன்னேன். அன்றைய தினமே எனக்கு இந்த விஷயத் தில் உறுதி ஏற்பட்டு விட்டது. ஒருவனை ஹிந்துமதத்தில் இருக்கிற பாவத்துக்காக நாம் அகௌரவமாக நடத்தி வந்தோமா னால், இந்த ஹிந்து சமூகம் எத்தனை நாளைக்கு உயிரோடிருக்கும்? தீண்டாமை ஒழிந்தாலொழிய நமது சமூகம் நாசமாக வேண்டியதுதான் என்று நிச்சயம் ஏற்பட் டது."

இப்படி ஸ்ரீ ராமச்சந்திரய்யர் சொன்ன போது கொஞ்ச நாளைக்கு முன்பு நான் சிவகாசிக்குப் போயிருந்தது எனக்கு ஞாபகம் வந்தது. சிவகாசி, நாடார்களுக்குத் தாய் நகரம் என்று சொல்ல வேண்டும். இங்கே, ஸ்திரீகள் வாசகசாலை விழாவுக்காக என்னையும் டி.கே.சி.யையும் அழைத்திருந் தார்கள். அழைத்தவர் ஸ்ரீமதி செண்பகத் தம்மாள். இவர் தூத்துக்குடி துரைசாமி நாடார் எம்.எல்.ஏ. அவர்களின் சகோதரி. காலேஜ் படிப்புப் படித்தவர். தற்சமயம் சிவகாசியில் பல விதத்திலும் சிறந்த சமூக ஊழியம் செய்து வருகிறார். அவர் முக்கிய மாகச் செய்து வரும் தொண்டு அந்தப் பக்கத்தில் தீவிரமாக நடந்து வரும் கிறிஸ் தவப் பிரசாரத்துக்கு எதிர்ப் பிரசாரம் செய் வதுதான். அங்கே, முக்கியமாக நாடார்

ஸ்திரீகளிடையில் கிறிஸ்தவப் பிரசாரம் அதிகமாக நடந்து வருகிறதாம். சில குடும்பங்களில் புருஷர்கள் ஹிந்துக்களாகவும், ஸ்திரீகள் கிறிஸ்தவர்களாகவும் இருப்பது உண்டாம்! ஒரு கிறிஸ்தவப் பெண் ஒரு ஹிந்துப் பெண்ணைப் பார்த்தால், "நீ இன்னும் குணப்படவில்லையா?" என்று கேட்பாளாம். கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்தவர்கள் குணப்பட்டவர்கள்; மற்றவர்கள் குணப்படாதவர்கள்!

"இந்த மாதிரியெல்லாம் மிஷனரிகள் வேலை செய்கிறார்கள். அதற்கு நாம் இடங்கொடுக்கக் கூடாது. பதிலுக்குப் பிரசாரம் செய்ய வேண்டும். ஹிந்து மதத்தின் பெருமையை எடுத்துச் சொல்ல வேண்டும்" என்று ஸ்ரீமதி செண்பகத்தம்மாளும் அவருக்கு உதவி செய்யும் சில சகோதரிகளும் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார்கள். பொதுக் கூட்டத்தில் எங்களையும் இந்த விஷயமாகப் பேச வேண்டுமென்று தான் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவமானத்தினாலும் ஆச்சரியத்தினாலும் எனக்குப் பேசுவதற்கே நா எழவில்லை. அவமானம், நமது சமூகத்தில் இப்படிப்பட்ட ஒரு கேடு இருக்கிறதே என்றுதான். ஆச்சரியமோ என்றால், இப்படி நாம் ஒதுக்கி வைத்திருக்கும் இந்தச் சகோதரர்களும் சகோதரிகளும் ஹிந்து மதத்தில் இன்னமும் பற்றுடையவர்களாயிருக்கிறார்களே என்று!

அவர்களுடைய நிலைமையில் நான் இருந்திருந்தால், கிறிஸ்தவ மதத்துக்கோ இஸ்லாம் மதத்துக்கோ அல்லது நாஸ்திக மதத்துக்கோ எப்பொழுதோ போயிருப்பேனென்று தோன்றிற்று. "நீ ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்; ஹிந்து தெய்வங்களிடம் நீ பக்தியுடனிருக்க வேண்டும்; ஹிந்து சமூகத்தில் பற்றுக் கொண்டிருக்க வேண்டும்; ஆனால் ஹிந்து கோவில்களுக்குள் மட்டும் வரக்கூடாது" என்றால் யாருக்குத்தான் ஆத்திரம் உண்டாகாமல் இருக்கும்? அந்த நிலைமையில் சிலர் வேறு மதங்களுக்குப் போய் விடுவதில் கொஞ்சமாவது வியப்புண்டா? கிடையவே கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையிலும் ஹிந்து மதத்தில் பற்றுடையவர்களாக அநேகம் பேர் இருப்பதுதான் உண்மையில் ஆச்சரியமான விஷயம்! ஹிந்து மதத்தில் பற்று என்றால், சாமான்யமான பற்றா? வேறு மதப் பிரசாரர்களுடன் எதிர்த்துப் போராடுவதற்கு வேகம் அளிக்கும் பற்று எத்தகையதாயிருக்க வேண்டும்?

தீண்டாதார் என்று சிலரைத் தள்ளி வைப்பதும், கோவிலுக்குள் வரக் கூடாதென்பதும் பெரும் அநீதி, அறிவீனம் என்பது நமக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனால், பாண்டிய நாட்டில் போய்ப் பார்க்கும்போது தான் அதனுடைய அநீதி எவ்வளவு மகத்தானது என்பது நமக்கு நன்கு தெரியவருகிறது.

கல்வியறிவிலும், நாகரிகத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள் பாண்டியநாட்டு நாடார்கள். அந்தச் சமூகத்தில் பெண் கல்வி மற்ற அநேக சமூகங்களைவிட அதிகம். தூய்மையில் மற்றவர்களுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்தவர்களில்லை.

இப்படிப்பட்ட ஒரு சமூகத்தாரைக் "கோவில்களுக்குள் வரக் கூடாது" என்று சொல்வதாயிருந்தால், நமது ஹிந்து சமூகம் செல்லரித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

மதுரைக் கோவில் திறந்தது என்ற செய்தி வந்தபோது, எனக்கு இந்தப் பெரிய சமூகத்தின் ஞாபகம் வந்தது. உண்மையில் இந்தப் பெரிய புரட்சியினால் சந்தோஷமடையக் கூடியவர்கள் இவர்கள்தான். "ஆலயப் பிரவேசத்தை ஹரிஜனங்கள் விரும்புகிறார்களா?" என்று சிலர் கூசாமல் கேட்கிறார்கள். ஏழை ஹரிஜங்களின் அறியாமையிலும் குருட்டு நம்பிக்கையிலும் நம்பிக்கை வைத்துத்தான் அவர்கள் அப்படிக் கேட்கிறார்கள்! பெரிய பெரிய கல்விமான்களும், பி.ஏ., பி.எல்.களும், வேத வேதாந்த அத்வைத விசிஷ்டாத்வைதங்களையெல்லாம் கரை கண்டவர்களும், "கேவலம் ஒரு மனுஷன்கிட்ட வருவதனால் ஸ்வாமியின் சக்தி குன்றிவிடும்" என்ற மூட நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கும் போது, ஏழை ஹரிஜங்கள் "நாம் கோவிலுக்குப் போனால் கண் அவிந்துவிடும்; அல்லது வேறு கெடுதல் சேர்ந்து விடும்" என்று பயப்படுவதில் என்ன ஆச்சரியம்!

ஆனால், நாடார் சமூகத்தைப் பொறுத்த வரையில் இத்தகைய பயம் கொஞ்சம்கூடக் கிடையாது. அவர்களுக்கு

தெய்வத்தின் எல்லையற்ற கருணையிலும் சர்வ சக்தியிலும் பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆலயத் திறப்பு அவர்கள் விஷயத்தில் பூரணமாய்ப் பயன்படும் என்றுதான் நினைத்தேன்.

குற்றாலத்திலிருந்து திரும்பி காலையில் மதுரைக் கோவிலுக்குப் போனபோது, மேற்படி நம்பிக்கை எனக்கு உறுதிப்பட்டது.

மதுரைக்கு நான் போயிருந்த அன்று ஒரு விசேஷ தினம். அன்று தான் ஸ்ரீ சுபாஷ் போஸ் மதுரைக்கு வந்திருந்தார். பெரிய பிரமாண்டமான கூட்டம். 60,70 ஆயிரம் பேர் இருக்கும். நமது மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் இரண்டு நாளைக்கு முன்பு "ஸுபாஷ் பாபுவின் வரவேற்பில் கலந்து கொள்ளக்கூடாது!" என்று பத்திரிகைகளில் எழுதியிருந்தார்கள். பத்திரிகைகளில் போட்டு விட்டால், உடனே சகல ஜனங்களும் படித்துத் தெரிந்து கொண்டு விடுவார்களென்பது அவர்களுக்கு எண்ணம். ஆனால், அன்று ஸுபாஷ் பாபுவின் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் ஐம்பது பேரில் ஒருவர்கூட தினசரிப் பத்திரிகை படிக்கிறவராயிருக்க மாட்டார். பாக்கிப் பேருக்கெல்லாம் "ஸுபாஷ்பாபு ஒரு பெரிய காங்கிரஸ் தலைவர்" என்பது தெரியுமேயொழிய, அவருக்கும் மற்றத் தலைவர்களுக்குமுள்ள அபிப்பிராய பேதத்தைப்பற்றிக் கூட அதிகம் தெரியாது.

நமது மாகாணத் தலைவர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் நமது ஜனங்களுக்கு வேறு என்ன கட்டளை வேண்டுமானாலும் இடட்டும்; கட்டளை அவர்கள் காதில் விழுந்து விட்டால், அதன்படி நடப்பார்கள். ஆனால் வட நாட்டிலிருந்து வரும் தலைவர்களைப் பார்க்க வேண்டாம், அவர்களுடைய கூட்டங்களுக்குப் போக வேண்டாம் என்று மட்டும் சொல்லாதீர்கள்; அது நமது ஜனங்களால் முடியாத காரியம். தங்கள் ஊருக்கு என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் வரும்போது நமது ஜனங்கள் ஒரு வேளை பார்க்காமலிருந்தாலும் இருப்பார்கள்; ஆனால் வட நாட்டிலிருந்து வரும் ஸுபாஷ் போஸ் போன்ற தலைவர்களைப் பார்க்காமல் அவர்களால் இருக்க முடியாது. நிற்க.

மதுரையில் அன்று சாயங்காலம் ஸுபாஷ் போஸின் கூட்டம் நடந்தபடியால், கோவிலில் ஒருவருமே இருக்க மாட்டார்கள், ஜன சூன்யமாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டு போனேன். ஆனால், உண்மையிலோ, கோவிலில் வருவாரும் போவாருமாகக் கலகலவென்றுதானிருந்தது. அம்மன் சந்நிதியிலும் ஸ்வாமி சந்நிதியிலும் ஜனங்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அர்ச்சனை, தீபாராதனை எல்லாம் நடந்து கொண்டுதானிருந்தது. ஒரு பக்தர், ஸ்வாமி சந்நிதியில் நின்று,


"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ
(ரேனும்
மங்குவாரவர் செல்வ மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகில்
அங்க மெல்லாங் குறைந்தழுகு
(தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய
(ரேனும்
கங்கைவார்சடைக் கரந்தார்க் கன்ப
(ராகில்
அவர் கண்டீர் நாம் வணக்கும்
(கடவுளாரே!"

என்னும் திவ்யமான தேவாரத்தை மனமுருகிப் பாடிக் கொண்டிருந்தார்.

ஆனால் பூஜை செய்த பட்டர் மட்டும் அவ்வளவாக எனக்குத் திருப்தியளிக்கவில்லை. பாழும் நெற்றியும் வெறுங் கழுத்துமாக அவர் காணப்பட்டார். நெற்றியில் பளிச்சென்று விபூதியும், கழுத்திலே ருத்ராட்சமும், இடுப்பில் பட்டுக்கரை வேஷ்டியும், அதில் தொங்கும் விபூதிப் பையுமாக, சிவாசாரியருக்கு இருக்க வேண்டிய சின்னங்களுடன் காட்சி அளித்திருந்தால், மனதுக்குத் திருப்தி உண்டாகியிருக்கும்.


கோவிலில் சகல வகுப்புகளையும் சேர்ந்த ஜனங்களுந்தான் காணப்பட்டனர். நாடார்கள்—ஸ்திரீகளும் புருஷர்களுமாய்—கும்பல் கும்பலாக வந்து விட்டுப் போனார்கள். புதிது புதிதாகக் கோவிலுக்கு வந்து ஸ்வாமியைத் தரிசித்ததனால் ஏற்பட்ட அதிசயமும் ஆனந்தமும் அவர்களுடைய முகங்களில் நன்றாய்ப் பிரதிபலித்தன.

(ஆனந்த விகடன், 15.10.1939)



இவர் டைப் அடிப்பார் பாடம் நடத்துவார் செஸ் ஆடுவார்... இதெல்லாம் பெரிய விஷயமா? ஆமாம்!

மேலூரிலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி வரும் பாண்டியராஜனுக்கு இரு கண்களிலும் பார்வை சுத்தமாகக் கிடையாது! பிறவியிலிருந்தே பார்வை இல்லாமல் இருந்திருந்தாலாவது பரவாயில்லை. ஏழாவது படித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று பார்வை பறிபோக, செயலிழந்து போனார் பாண்டியராஜன். 'ரெட்டினடிபிக்மண்டோஸ்' தாக்கி படிப்படியாகப் பார்வை பறிபோய்க் கொண்டிருக்க, தளராமல் அப்போதே பிரெய்ல் முறையில் படிக்கக் கற்றுக் கொண்டார். ஒரே மாதத்தில் பிரெய்ல் முழுக்கக் கற்றுக் கொண்டு தன்னம்பிக்கை மனிதராக எல்லோரையும் போல வாழத் தொடங்கி விட்டார்!



• பாண்டியராஜன்

அமெரிக்கன் கல்லூரியில் எம்.ஏ. ஆங்கிலம் படித்தபோது அந்தக் கல்லூரிக்கு எதிரிலிருந்த டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் டைப் அடிக்கவும் கற்றுக் கொண்டார். முதலில் இவரால் முடியாது என்று சொன்ன மாஸ்டர், இவரது ஆர்வத்தைக் கண்டு டைப் அடிக்க அனுமதித்தார். பார்வை இல்லாத இவர், பிறருக்கு அனுப்பும் கடிதங்களைக் கூட தம் கைப்படவே டைப் அடித்துத்தான் அனுப்புவார்!

எம்ஃபில் படித்தபோது தீஸிஸ் முழுக்க முழுக்க இவரே டைப் அடித்து சாதனை செய்திருக்கிறார்! பாண்டியராஜனுக்கு கவிதை மிகவும் பிடிக்கும். இவர் எடுத்துக் கொண்ட எம்ஃபில் ஆய்வுத் தலைப்பே கீட்ஸும் கண்ணதாசனும் என்பதுதான்!

+2 மாணவர்களுக்குப் பாடம் நடத்துவதோடு கரும்பலகையில் இலக்கணமும் எழுதி நடத்துவது இவரது 'ஸ்பெஷாலிடி'!

பாண்டியராஜன் ஒரு செஸ் பிளேயரும் கூட! பார்வையுள்ளவர்களோடும் செஸ் விளையாடி, பல வெற்றிகள் பெற்ற இவர் பிப்ரவரி 6ம் தேதி முதல் 13ம் தேதி வரை இங்கிலாந்தில் நடக்கும் சர்வதேச செஸ் போட்டியில் விளையாடப் போகிறார்!

— 'கிரண் நியூஸ்' பழ.சேதுராமன்

வீட்டுக்குள் வரும்

இன்டர் நெட் பற்றி எழுத்தாளர் சுஜாதா தமிழில் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். தலைப்பு: வீட்டுக்குள் வரும் உலகம். தமிழில் இப்படி ஒரு கலர் ஃபுல் புத்தகமா என்று வியக்க வைக்கிறது.

இந்தப் புது முயற்சிக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் என்று ஸ்டெர்லிங் கம்ப்யூட்டர்ஸ் நிறுவன சேர்மன் சிவசங்கரனைக் குறிப்பிடுகிறார் சுஜாதா. காரணம், அவர்தாம் இன்டர் நெட் பற்றி ஒரு புத்தகம் எழுதச் சொன்னாராம் சுஜாதாவிடம்.

"எளிமையாக தமிழில்-அறிவியலை எழுதுவது எனக்கு மிகவும் பிடித்த விஷயம். ஆங்கிலத்தில் இன்டர் நெட் பற்றி மிக அருமையாகப் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. அந்தத் தரத்துக்குத் தமிழில் புத்தகங்கள் வந்ததில்லை. அந்தக் குறையைப் போக்கவே இந்தப் புத்தகம். இது, இளைஞர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு மிகவும் பயன்படும். அவர்கள்தான் அடுத்த பத்தாண்டுகளில், இன்டர் நெட்டை அதிகம் பயன்படுத்தப் போகிறார்கள்" என்கிறார் சுஜாதா.

இனி புத்தகத்திலிருந்து சில பகுதிகள்:

● இன்டர் நெட் (இணையம்) என்றால் கணிப்பொறிகளின் உலகளாவிய வலை போன்ற இணைப்பு. இது யாருக்கும் சொந்தமில்லை. உலகத்துக்கே சொந்தம். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கூறிய கவிஞன் இன்டர்நெட்டை மனத்தில் கொண்டிருப்பானோ என்று தோன்றுகிறது.

● நூற்றுக் கணக்கான விளையாட்டுகள் நெட்டில் இலவசமாக உலவுகின்றன. சீட்டாட்டங்கள், சதுரங்கங்கள், சிந்தனைக்கு வேலை தரும் புதிய விளையாட்டுகள்; ஏன் ஒரு மாதிரியான கால் பந்து கூட ஆடலாம். சினிமா, டீ.வி. விமர்சனங்கள், திரைக்கதை, வசனங்கள், பிரபலங்களுடன் நெட் மூலம் அளவளாவவும் இயலும். கவிஞர்களே வாசித்துக் காட்டும் கவிதைகளைக் கேட்கலாம். புதிய புத்தகங்களை மேயலாம்.

● இன்டர் நெட்டின் தாத்தா 'ஆர்ப்பா நெட்' என்கிற இணைப்பு. அமெரிக்க அரசாங்க பாதுகாப்பு அமைச்சகம் (விமான, ராணுவ, கடற்படையின் தலைமைச் செயலகம்) 1969ல் ராணுவத்திற்குச் சொந்தமான கணிப்பொறிகளை இணைக்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன் முக்கிய அம்சம் இணைப்பின் ஏதாவது ஒரு பகுதி ராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்டாலும் மற்றொரு மார்க்கமாக அதைப் பயன்படுத்த முடியும். இதுதான் இன்டர் நெட் தத்துவத்தின் ஆரம்ப வித்து.

● இன்டர்நெட் கனெக்‌ஷனுக்கு ஒரு தொலைபேசி இணைப்பு நிச்சயம் தேவைப்படும். (கூடவே கம்ப்யூட்டரும் தேவை) வீட்டில் இருக்கும் சாதாரண டெலிபோனையே இதற்கும் பயன்படுத்தலாம். ஆனால், இன்டர் நெட் இணைந்திருக்கும்போது அதை டெலிபோனாகப் பயன்படுத்த முடியாது.

● இன்டர் நெட்டில் மிக மிக முக்கியமான மூன்றெழுத்து www என்கிற வேர்ல்டு வைடு வெப்தான். உலகளாவிய வலைப் பின்னல். சிங்கப்பூர் முரசு நிறுவனத்தைச் சேர்ந்த அரசு, இதனை 'வையக விரிவு வலை' என்று அழகாகத் தமிழ்ப் படுத்தியிருக்கிறார்.

● அமெரிக்காவில் Digicash என்னும் கம்பெனியின் ஈ-கேஷ் வசதி மிகப் பிரசித்தம். முன் கூட்டியே பணம் கட்டி, நெட்டில் வாங்குவதற்கான அனுமதி பெற்று, பொருள் வாங்க வாங்க கழித்துக் கொள்ளும் வசதி இது. இதே போல சைபர் கேஷ் என்னும் கம்பெனியும் தருகிறது. மே, 1997ல் விசா, மாஸ்டர் கார்டு போன்ற பெரிய கிரெடிட் கார்டு நிறுவனங்கள் ஒரு தர நிர்ணயம் கொண்டு வந்திருக்கிறார்கள். விரிந்த வலைப் பக்கங்கள் மூலம் வியாபாரம் செய்யும் தகுதிக்கான தர நிர்ணயம் இது. SET, (செக்யூர் எலெக்டிரானிக் டிரான்ஸாக்‌ஷன்) என்று பெயர். இவை எல்லாமே வியாபாரத்தில் பித்தலாட்டத்தைத் தவிர்த்து பத்திரமாக்குவதற்கே!

● இன்டர் நெட் மூலம் கடிதங்கள் அனுப்பி, விடை பெற்றுக் கொள்ளுவது அதன் முக்கிய பயன்களில் ஒன்று. வேகமாக, செலவில்லாமல், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், புதியவர்களுக்கும் கடிதம் அனுப்பி, பதில் பெறலாம். சாதாரண தபால் போய்ச் சேர ஒரு நாள், இரண்டு நாள் ஆகும். மின் அஞ்சல், சில செகண்டுகளில் முகவரிக்காரர் உலகில் எங்கே இருந்தாலும் போய்ச் சேர்ந்து விடும்.

● ஒரே குழுவைச் சேர்ந்



• புத்தகத்தை அறிமுகப்படுத்திய சுஜாதா

தவர்கள் ஈமெயில் மூலம் தொடர்பு கொள்ளும் வசதி இன்டர் நெட்டில் உள்ளது. உதாரணமாக தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தில் பொது நோக்குக் கொண்டவர்கள் tamil@tamil.net

உலகம்!

என்று ஒரு மெய்லிங் லிஸ்ட் வைத்திருக்கிறார்கள். தமிழில் கலைச் சொற்கள் ஏற்படுத்துவது, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், சினிமா, இலக்கியம், திருக்குறள் போன்ற பல தலைப்புகளில் தமிழிலேயே கருத்துப் பரிமாறிக் கொள்ளும் குழு இது. அது போல் சாக்லேட் விரும்பிகள், டயபடிஸ்காரர்கள், பேய்க்கதை ரசிகர்கள், சுத்த சைவ உணவுக் காரர்கள் என்று பல தனிப்பட்ட குழுக்கள் இருக்கிறார்கள்.

• இன்டர்நெட் நல்லதும் கெட்டதும் கலந்த ஒரு சாகரம். நெட்டில் குணம் அதிகம்; குற்றம் குறைவு. சிறுவர்களை நெட்டில் விட்டவுடன் நீந்த ஆரம்பித்து விடுவார்கள். அவர்களுக்கு இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் போதும் விரைவில் கற்றுக் கொண்டு, உங்களுக்குச் சொல்லித் தரும் அளவுக்கு முன்னேறி விடுவார்கள். விரைவில் பெற்றோரைப் புறக் கணித்து விடுவார்கள்.

இன்டர் நெட்டை குழந்தைகளுக்குக் காட்ட அனுமதிப்பதில் உள்ள அபாயத்தை முதலில் பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். அதில் உள்ள கெட்ட விஷயங்களை அவர்கள் பார்ப்பதைவிட, கெட்ட எண்ணம் உள்ளவர்கள் குழந்தைகள் மூலம் உங்கள் வாழ்வில் குறுக்கிடும் அபாயம்தான் அதிகம்.

இதனால் பிள்ளைகளிடம், நிஜப்பெயர்கள், முகவரிகள், டெலிபோன் நம்பர் இவைகளை நெட்டில் தரவே கூடாது என்பதை வலியுறுத்த வேண்டும். நெட்டில் நல்ல மனிதர்கள், பெரிய மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடம் மரியாதையாக இருக்க வேண்டும். கெட்ட மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

• இணையத்தில் சட்ட விரோதச் செயல்கள் என்பது அமெரிக்க ஜனாதிபதி அலுவலகத்தின் கணிப்பொறிகளில் நுழைந்து ரகசியக் கோப்புக்களை அணுகுவது போன்ற ஹாலிவுட் தனமான செயல்கள் என்று சிலர் நினைக்கக் கூடும். அது சட்ட விரோதமானதுதான். ஆனால் இணையத்தில் சில எளிய செயல்கள் கூட சட்ட விரோதமானவை. அவை, காபிரைட் விதிகளுக்கு உட்பட்ட பிரதிகளை, நெட் மூலம் மற்றவருக்கு அனுப்புவது. உதாரணமாக திருக்குறள், சங்க இலக்கியங்கள், பாரதியார் கவிதைகள் போன்றவற்றை நெட்டில் கொடுப்பதில் தப்பில்லை. ஆனால் அசோகமித்திரனின் சிறுகதையை அவர் அனுமதியில்லாமல் நெட்டில் போடக் கூடாது.

• யாருக்கு இன்டர் நெட் அதிகம் பயன்படும்? எல்லோருக்கும்! தாய், தந்தை, மகன், மகள், ஏன் பாட்டிக்கு, தாத்தாவுக்குக் கூட. நாளடைவில் உங்கள் வீட்டு நாய்க்குட்டி கூட இன்டர் நெட்டை பயன்படுத்தினால் ஆச்சரியப்படக் கூடாது.

(வீட்டுக்குள் வரும் உலகம்– இன்டர் நெட்; ஆசிரியர்: சுஜாதா. வெளியீடு: டிஷ்நெட் லிமிடெட், 19, கதீட்ரல் கார்டன் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 34. விலை ரூ. 100.)

— எஸ். சந்திரமௌலி

சிவராம் எதற்காகத் தன்னைக் காத்திருக்கச் சொன்னாரென்று மேஸ்திரிக்குப் புரியவில்லை.

இன்று சனிக்கிழமை. வேலையாட்களுக்கு வாரக்கூலி கொடுத்தாகி விட்டது. வந்து இறங்கிய சிமெண்ட் மூட்டைகளைக் கணக்கில் ஏற்றி அறையில் வைத்துப் பூட்டியாகி விட்டது.

இனி கிளம்ப வேண்டியதுதான். ஏன் இருக்கச் சொன்னார்?

"சைக்கிள்தானே?"

சிவராம் கேட்டதும் தலையசைத்தார்.

"கொஞ்ச நாளைக்கு முன்னால... நீங்க ஏதோ கோழி... முனீஸ்வரன்னு..."

"ஆமா... ஆனா...."

"பாருங்க. நான் வேண்டாம்னு சொன்னேன். இதுவரை ஒரு பிரச்னையும் இல்லே. பார்த்திங்களா... அந்தாளு அடிபட்டது... ஜஸ்ட் ஒரு ஆக்சிடெண்ட்."

மேஸ்திரி புன்சிரிப்பை வழியவிட்டார்.

"நீங்க என்னைவிட.... ரொம்ப அனுபவசாலி, நீங்களே இந்த மாதிரி பேசினதும்... எனிவே... கோழி... கிழி எதுவுமில்லாமே நல்லா நடக்குது" என்றான் மீண்டும் அழுத்தமாய்.

மேஸ்திரியால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை.

"இல்லீங்க. பெரிய அய்யா கிட்டே பர்மிஷன் வாங்கி செஞ்சுப்புட்டோம்."

"என்னது?"

சிவராம் முகத்தில் வியப்பு.

"ஆளுங்க கிட்டேயும் இப்ப பிரச்னை இல்லே.... அதனால..."

"ஓ..."

"நீங்க படிச்சவுங்க. இதுல நம்பிக்கை இருக்காது. உலக அனுபவம் வேற. படிப்பு வேற. இப்ப... நீங்க மனோதத்துவம் சொல்வீங்க. இதுவும் அது மாதிரிதான்."

"சரி. கோகுல்ல அடிபட்டது... ஏதோ கோளாறு. இப்ப நான் குடியிருக்கிற ஃப்ளாட்ல நல்லாதானே இருக்குது."

"அதுலயும் ஒரு பிரச்னை ஆயிடுச்சுங்க."

சிவராம் விரித்த வலையில் மேஸ்திரி வந்து விழுந்தார்.

"யாரோ ஒரு பொம்பளை... செத்துக் கிடந்திச்சு. பெரிய அய்யா... கொஞ்சம் செலவு பண்ணதால அனாதைப் பிணம்னு பெரிசா கேசு ஆவாம... போயிருச்சுங்க."

"அப்படியா. வேலை செஞ்ச பொம்பளையா..."

"இல்லீங்க. யாரோ ஊர் பேர் தெரியாததுங்க. சொகம் இல்லாம இருந்திச்சோ.. என்னவோ... தங்க ஒதுங்கின எடத்துல உயிர் போயிருச்சு."

"சரி. அப்புறம் பார்க்கலாம். போகலாமா?"

செய்தி நிஜம்தான். யாரந்தப் பெண்மணி?

சிவராம் யோசனையுடன் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

ஸ்வேதாவுக்கு என்ன ஆயிற்று?

"அக்கா. வாங்க உள்ளே" என்றாள் தனம்.

அரைமனதாய் வருபவள் போலப் பின்னால் வந்தாள்.

"உட்கார்."

"உட்காருங்க."

அமர்ந்தாள்.

அதற்கு மேலும் அடக்க இயலாமல் மூவரும் சிரித்து விட்டனர்.

"என்ன ஸ்வேதா. என்ன கோபம்."

"நேத்து வரை தனி. இன்னிக்கு தனம்... கேட்டால் தங்கை. நாளைக்கு?"

"ம்... அழகான.. துடிப்பான... யுவதி... எனக்கென்றே பிறந்தவள்."

"ஓஹோ."

ஸ்வேதாவின் முகம் மீண்டும் இறுகியது.

"பெயர் என்னன்னு கேளுங்க அக்கா."

"நான் எதுக்குக் கேட்கணும்."

"நானே சொல்றேன். 'ஸ்'ல ஆரம் பிக்கும் 'தா'ல முடி

யும். நடுவுல 'வே'' என்றான் சிரிக்காமல்.

''என்னால நம்ப முடியலே.''

''பிராமிஸ்.''

''நிஜம்மாவே சொல்றேன் சிவராம். எனக்கு என்னவோ பயம்மா இருக்கு...''

''ச்சீ... அசடு... நீ எனக்குத்தான் என்று நினைக்கும் போதே என் மனசில் ஆயிரம் யானை பலம் வந்து விடுகிறது. அப்புறம் என்ன பயம்?''

ஸ்வேதாவின் கண்களில் கசிவு.

தனம் சூட்டிகை.


''என்னவோ சத்தம்.... ஐஸ்கிரீம் வண்டியா.''

வாசலுக்குப் போய்விட்டாள்.

சிவராம் அருகில் நகர்ந்தான்.

''ஸ்வேதா.''

நிமிர்ந்தவளின் இமைகள் படபடத்தன.



''என்னன்னுதான் சொல்லேன்.''

''புரபசரைப் பார்த்தேன். நேத்து எங்க வீட்டுக்கு வந்திருந்தார்.''

''ஓ.''

''அப்பாகிட்டே பேசறதுக்கு முன்னால என்னைத் தனியா பார்த்தார். எனக்கு ஏதோ ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறதாம். நான் மிகவும் நம்புகிற ஒருவன் படு அயோக்கியனாம். ஏமாற்றுக்காரனாம்.''

சிவராம் பலமாகச் சிரித்தான்.

''சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்.''

''சிவா... பீ சீரியஸ்... எனக்கு அரை மணி நேரம் உபதேசம். நான் ரொம்ப சின்னவளாம். முடிவெடுக்க வேண்டியது பெரியவர்கள்தானாம்.''

சிவராம் ஸ்வேதாவைப் பார்த்தான்.

ரிஷபன்

என்னமாய் பயந்து போயிருக்கிறாள்.

''கவலைப்படாதே. அவரைப் பற்றி நமக்கென்ன. நம் காதலில் உறுதியாக இருக்கும் போது...''

''இல்லே சிவா. அப்பா அவர் பேச்சைத்தான் கேட்பார்.''

''நான் சொல்கிறேன், அவரிடம்.''

''ஊஹூம். அவரை மாற்ற முடியாது.''

''ஏனாம். புரபசர் அப்படி என்ன உசத்தி.''

''தன் அண்ணா சொல்வதைக் கேட்பாரா... அல்லது நீங்கள் சொல்வதைக் கேட்பாரா. நீங்களே சொல்லுங்கள்.''

சிவராமுக்குத் தலை சுற்றியது.

ராஜப்பாவும் குழப்பத்தில்தான் இருந்தார்.

''என்னால எப்படிச் சொல்றதுன்னு புரியலே. சிவா....''

''என்ன ஸார்.''

''என் பிள்ளைக்கு மாற்றல் உத்தரவு வந்

திருக்கிறது. பதவி உயர்வுடன் போயே தீர வேண்டுமாம்."

"அதனால் என்ன."

"நானும் கிளம்ப வேண்டியிருக்கும்."

"என்ன?"

ராஜப்பா சோகமாய்த் தலைகவிழ்ந்தார்.

"என்னால எதுவும் பேச முடியலே. நான் இங்கேயே இருக்கேன்னு சொல்ல என்னோட வயசும் அனுமதிக்கலே. உடம்பும் ஒத்துழைக்கலே. நான் காய்ந்த சருகு சிவா. எந்த நிமிஷமும் உதிர வேண்டியவன். அவன் கூடப் போவதுதான் எல்லாருக்குமே நல்லது."

சிவராம் அதற்குள் தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டான்.

"என்ன ஸார். நீங்க எடுத்ததுதான் சரியான முடிவு. ஒருத்தருக்காக இவ்வளவு பெரிய ஃப்ளாட்டை வச்சுக்கறதும் வேஸ்ட். வாடகைக்கு விடறதும் நல்லதுதான்."

குரல் என்னவோ தெம்பாக ஆரம்பித்தாலும் கடைசியில் தழுதழுத்தது.

"எனக்குத்தான் கையொடிந்த மாதிரி இருக்கும். நேற்றுத்தான் பலம் வந்த மாதிரி உணர்ந்தேன். இன்று... நீங்கள்."

"கேடி கோலப்பன் ஏன் எல்லா போலீஸ்காரர்களுக்கும் கையில மை வைக்கறான்?"

"சில பேர் சந்தடிசாக்குல ரெண்டு தடவை மாமூல் வாங்கிடறாங்களாம்!"

– பா. ஜெயக்குமார்



வார்த்தைகள் அவனுக்குள் திணறிக் கொண்டிருந்தன.

"நேற்று பலம் வருகிற மாதிரி... அப்படி என்ன நடந்தது?"

ராஜப்பா பேச்சை திசைமாற்றினார்.

சிவராமுக்கு அந்த நிலையிலும் முகம் பளிச்சிட்டது.

"ஸ்வேதாதான் ஸார். எனக்கே ஆச்சர்யம் தான். எப்படி அவ்வளவு சுலபமாய் அவள் மனசு மாறியது?"

ராஜப்பா புன்னகைத்தார்.

"எப்படி மாறினால் என்ன... உனக்கு சந்தோஷம்தானே."

மனிதர் கண் சிமிட்டியதைப் பார்த்ததும் சந்தேகம் வந்தது. இவர் ஏதாவது செய்து வைத்திருக்கிறாரா.

"நீங்கள்... அவள் மனசு மாறுகிற மாதிரி..." என்று இழுத்தான்.

"அசடு. பெண் என்ன அவ்வளவு சுலபமா. பிறர் பேச்சைக் கேட்டு... உடனே மனசு மாற... லயிப்பது பிறர் சொல்லி வராது சிவா..."

"அப்புறம்..."

"உனக்கேன் இந்த வீண் ஆராய்ச்சி. நீதான் அவளை நேசித்தாய். இன்று அவள் உன்னை நேசிக்க முற்படும்போது கேள்வி கேட்கிறாய். ஆண் மனம் ரொம்பப் பொல்லாதது சிவா. பெண் உடனே 'சரி' என்று சொன்னாலும் குழப்பும். தாமதித்துச் சொன்னாலும் சந்தேகப்படுத்தும்."

"அதற்கில்லை. சரி. நீங்களே சொன்ன மாதிரி என் ஸ்வேதா எனக்குத்தான். அது போதும்."

ராஜப்பா பெருமூச்சு விட்டார்.

"உன்னிடம்தான் முதலில் சொல்கிறேன். பிறகு திடீரென கிளம்புகிற சூழ்நிலையில் நீ எப்படியோ. நான் எப்படியோ."

"அப்படி என்ன ஸார் பொல்லாத தூரம் போய்விடப் போகிறீர்களா... நினைத்தால் கிளம்பி வர முடியாதா."

ராஜப்பா பதில் பேசவில்லை. சிரித்தார்.

லைப்ரரி பக்கம் போயிருந்தான்.

ஒன்றிரண்டு நபர்கள்தான் அமர்ந்திருந்தார்கள்.

ஆலோசனைக்காக ஒரு நோட்டு வைத்திருந்தான். மூலையாய் அமர்ந்து அதைப் பிரித்தான்.

'வாழ்க வளமுடன்' என்று ஒரு கையெழுத்து. 'ஆன்மீகப் புத்தகங்கள் வைக்கலாமே.' வேறொருவர் தனக்குப் பிடித்த

நாவல்கள் அனைத்தையும் வாங்கி வைக்க வேண்டும் என்று எழுதியிருந்தார்.

'மின்விசிறி வேண்டும்' என்று கூட ஒரு ஆலோசனை.

குறிப்பிடும்படி எதுவுமில்லாததால் மூடி வைத்து விட்டு அடுக்கியிருந்த புத்தகங்களைப் பார்த்தான். வரிசை தப்பி சில புத்தகங்கள் வெளியே துருத்திக் கொண்டிருந்தன.

ஒவ்வொன்றாய் சரி செய்து கொண்டே வரும்போது ஒரு புத்தகம் கீழே விழுந்து விட்டது.

குனிந்து எடுத்தான். புத்தகத்தின் பெயரைப் பார்க்க பக்கங்களைத் திருப்ப, ஒரு பழுப்பேறிய கவர் தென்பட்டது.

முதலில் எதுவும் வித்தியாசமாய்த் தோன்றவில்லை. பிறகு அலட்சியமாய் அதை வெளியே எடுத்தான். புத்தகத்தின் இடையே அடையாளத்திற்கு உபயோகப்படுத்தியது என்ற நினைவில் பார்க்க... கோணலான கையெழுத்தில் 'சிவராம்' என்று எழுதி இருந்ததைப் படித்தான்.

எனக்கா... கவரைப் பின்புறம் பார்க்க 'வேலு' என்று எழுதியிருந்தது.

கவருக்குள் எதுவுமேயில்லை.

புத்தகத்தில் இருக்கிறதா என்று பக்கங்களை வேகமாகத் திருப்பினான். ஊஹூம். என்ன எழுதியிருப்பான் வேலு?

வேதாசலம் அதிசயமாய் சைட்டுக்கு வந்திருந்தார். கோகுல் அபார்ட்மெண்ட்ஸ் போர்டு தூசி படிந்திருந்ததை மேஸ்திரியிடம் சுட்டிக் காட்டினார்.

"சிவா... இல்லே..."

"இருக்காருங்க. ரூம்புல இருப்பாரு."

"நான் பார்த்துக்கிறேன்."

குனிந்த நிலையில் எதையோ எழுதிக் கொண்டிருந்தான். தந்தையைப் பார்த்ததும் எழ முயன்றான்.

'இரு' என்று ஜாடை காட்டினார்.

தானும் எதிரில் அமர்ந்து கொண்டார்.

"நாளைக்கு ரூஃப் போட..."

'வேண்டாம்' என்று கையாட்டினார்.

"நான் உன்னைப் பார்க்க வந்தது வேறு விஷயத்திற்கு. நாளைக்கு என்னுடன் சாப்பிடுகிறாயா?"

"வந்து... நான்."

சிவராம் இப்போது பெரும்பாலும் தனத்துடன்தான் சாப்பிடுகிறான்.

"நாளை ஒருநாள். ஒருவேளை மட்டும்தான். மற்றபடி உன் குட்டமன் என்னால் கெடாது..." என்றார்.



"நீங்களும் அந்த டைரக்டரும் பல வருஷமா காதலிக்கிறீர்களே, உங்க ரெண்டு பேருக்கும் எப்ப மேரேஜ்?"

"எனக்கு அடுத்த வாரம்; அவருக்கு எப்ப மேரேஜ்னு அவர்கிட்டேயே கேட்டுக்கோங்க!"

– சீர்காழி ரேவதி

"சரி" என்றான் அரைமனதாய்.

"வரட்டுமா. இதை நானே சொல்ல வேண்டும் என்று.. நேரில் வந்தேன்."

எழுந்து கொண்டார்.

"என்னவோ. ஒரு அஞ்ஞானம். இதில் எனக்கு அவ்வளவாய் நம்பிக்கை இல்லைதான். உன் அம்மா இருந்தால் சும்மா விட்டிருக்க மாட்டாள்."

அம்மாவா. என்ன சொல்கிறார்?

"என்னவோ சொல்ல ஆரம்பித்தேன். சந்தோஷப்படுகிற மாதிரி ஒரு காரியம். உன்னோடு சாப்பிடலாம் என்று... ஒரு வருஷம் போனால் ஒரு வயசு கூடுகிறது. இதில் என்ன அதிசயம். இருந்தாலும் அறுபது வயசு என்பதற்கு என்னவோ ஒரு முக்கியத்துவம். வரட்டுமா."

போய்விட்டார்.

அறுபது வயதா. அப்பாவுக்கா.

சிவராம் வார்த்தைகளின் முழு அர்த்தம் புரிபட்டு எழுந்து வெளியே வந்தான் பரபரப்புடன்.


வேதாசலம் மொபட்டில் போய்க் கொண்டிருந்தார்.

(தொடரும்)

'ஸ்ரீ தேவதா உச்சாடனம்'
பூஜா உபதேசம்

குபேரனும், குபேர செல்வம் பெற லங்கேஸ்வரனான ராவணனும் செய்து கோடீஸ்வர மேன்மை பெற்ற உச்சாடனம் இது. இப்பூஜை செய்ய விதி அமைப்பு ஏற்பட்டு இப்பூஜையை தினசரி காலையில் 2 மணி நேரமும் மாலையில் 2 மணி நேரமும் செய்திடும் வாய்ப்பினை அடைந்து விட்டால் வாழ்வில் கோடீஸ்வரராக திகழ்வது உறுதி. அது மட்டுமல்ல 16 பாக்கியங்களில் எது வேண்டினும் நினைத்தவுடனேயே அடைகின்ற ஆக்கப் பூர்வமான சித்தை அடைந்தே திருவார் என்பது உறுதி. உபதேசம் பெற்ற சிலரிலேயே இப்போது அரிய மேன்மைகளை ஆண்களும் பெண்களும் அடைந்து மகிழ்ந்த வரலாறு கண்டு ஆனந்தம் அடைகின்றோம். லட்சக் கணக்கான கடன்களை அடைத்து கோடீஸ்வரராக திகழ்கின்ற நிலையினர் இளமை தாண்டிய வயதில் விவாகம் கண்ட மங்கையர், முதுமை வயதில் குழந்தை பெற்ற அதிசயம் அனைத்தும் நடந்திருக்கின்றது. பெய்யும் மழையை நிறுத்திடவும் பெய்யா மழையை வரவழைக்கவும் உத்திரவாதம் கொண்ட உச்சாடனம் இது. எனவே அறிந்தார் இல்லையேன அரிகிப் போன நிலையில் பலரின் முயற்சியில் இதனை உரியாருக்கு உபதேசம் செய்கின்றோம். இதன் வழியாக உயர்ந்தோர் பலர் உதயமாயினர். அவர்களும் சேர்ந்து இந்த அரிதான பூஜையை உபதேசிக்க ஒத்துழைக்க முன்வரவே மீண்டும் இந்த விளம்பரத்தை பிரசுரிக்கின்றோம். அட்டியின்றி அனைத்து நலங்களையும் அடைய வைக்கின்ற அதிசய உச்சாடனம் இது.

இதற்கு உரிய தகுதி-இதனை உபதேசம் பெற தகுதி உடையவராவது-புகைப் பிடியாதிருத்தல், மதுபானம் செய்யாதிருத்தல், பொடி, புகையிலை போடாதிருத்தல் மனைவி தவிர மாற்று ஸ்திரீ சங்கமமில்லாதிருத்தல் இவையனைத்தும் நிச்சயமாக இந்த உடலை கெடுக்கும் பழக்கங்கள் இருக்கக் கூடாது. தவிர தினசரி பூஜை செய்யும் பழக்கம் இருக்க வேண்டும். இவை இருப்பின் இது பூஜையை உபதேசம் பெற உரியவர்தான்- உரியவராகி உபதேசம் பெற்று விடில்-வாழ்வில் உயர்ந்து விடுவது உறுதி. வாழ்வில் நிச்சய உயர்வு உண்டு என்ற விதி அமைப்பு உடையோருக்கு தான் இந்த விளம்பரம் கண்ணில் படும். உரிய காலத்தில் மனுச் செய்து கொள்ளும் வாய்ப்பு கிட்டும். உபதேசம் பெறும் வாய்ப்பு கிட்டும். எனவே உரிய 15.3.1999 தேதி மாலைக்குள் ஜாதக நகலுடன் மனுச் செய்து கொள்ளுங்கள். இத்தேதி தவறிடில் பின் மனுச் செய்ய வேண்டாம். ஏனெனில் தெய்வ அனுமதி இல்லை என்பது பொருள். உரிய தேதிக்குள் மனுச் செய்யும் வாய்ப்பு இருப்பின் அவர் உயர்வார் என்பது உறுதி.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்,
ஸ்ரீமத் ஜெயவீர தேவா,
யோகி, ராஜயோக பயிற்சியாளர்
பிளாட் எண்: 204, அண்ணா நகர்,
மதுரை–625 020.
தொலைபேசி: 533412, 534634

தற்செயலாகச் சாலையில் அரவிந்தனைச் சந்தித்தபோது எனக்கு ஜோதி ஞாபகம்தான் உடனே வந்தது. மூன்று வருஷங்களுக்குப் பின் இவனைப் பார்க்கிறேன். கல்லூரி நாட்களில் ஜோதி இவனை எப்படி உருகி உருகிக் காதலித்திருக்கிறாள்! அரவிந்தைப் பற்றிப் பேசுகிறபோதெல்லாம் அவள் கண்களில் தெரிகிற இயல்பான பெருமிதத்தைக் கண்டு பல தடவை ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். இவன் என்னவன் என்கிற நினைப்பு ஒரு பெண்ணை இத்தனை பாதிக்குமா? அவள் கண்களில் இத்தனை ஒளி ஏறுமா?

ஒருமுறை அவளும் நானும் க்ளாஸிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது எதிரில் அரவிந்த் நான்கைந்து பேருடன் நடந்து வந்தான். அவன் இவளைக் கவனிக்கவில்லை. ஆனால் அவர்களைக் கடக்கையில் என்னுடன் பேசிக் கொண்டே ஜோதி அவனை ஓரக் கண்ணால் ஒரு பார்வை பார்த்தாள் பாருங்கள், நான் அசந்து போய் விட்டேன். திடீரென்று ஜோதி முழுமையான பெண்ணாகி விட்டதாய்த் தோன்றியது. அவளிடமே அதைச் சொன்னபோது மையமாய்ப் புன்னகைத்தாள்.

''காதலிக்கிற போதுதான் பெண்மையோட முழுப் பரிமாணங்களும் வெளிப்படும் போலிருக்கு ஜோதி!''

ஃபைனல் இயர் முழுக்க அவனைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தாள். ''அர்விந்த் இன்னிக்கு என்ன பண்ணினான் தெரியுமா?'' என்று அவள் ஆரம்பித்தாலே கைகூப்பிக் கெஞ்சுவேன். ''வேணாம் தாயே, என்னை விட்டுடு.''

ஆனால் அவளுக்கும் வேறு யார் இருக்கிறார்கள்? அர்விந்த் பற்றியும் அவன் மேல் அவள் கொண்டிருந்த காதல் பற்றியும் என்னைத் தவிர யாரிடமும் பேசுகிற தைரியம் அவளுக்கு வரவில்லை. அது தப்பில்லை. ஆனால் அந்தக் காதல் யாருக்கு முக்கியமாய்த் தெரிய வேண்டுமோ, அவனிடமே பேசத் தயங்கினாள். அதுதான் தவறு. எத்தனையோ முறை அவளிடம் பேசி, தைரியம் சொல்லி அனுப்பியிருக்கிறேன்.

''இன்னிக்குப் பேசிடப் போறேண்டி.''

என்று உறுதி சொல்லி விட்டு காலேஜுக்குப் போவாள். வந்ததும்

லாவண்யா

என் மடியில் படுத்து அழ ஆரம்பித்து விடுவான்.

"என்னாலே முடியலை ப்ரியா! அவன் முகத்தைப் பார்த்தாலே எனக்குப் பேச்சு வர மாட்டேங்கறது. என்னவெல்லாம் தயார் பண்ணிட்டு போறேனோ, அத்தனையும் மறந்து போயிடறது! அவன் நோ சொல்லிடு வானோங்கிற பயம் கூட எனக்கு இல்லை. நான் அதுக்கும் தயாரா இருக்கேன். ஆனா அப்படி ஒண்ணு நடந்துட்டா, அதுக்கப்புறம் அவன் முகத்தைப் பார்த்துப் பேசற– எதுவுமே ஆகாத மாதிரி பழகற தைரியம் எனக்குக் கிடையாது ப்ரியா!

நான் போய் அரவிந்திடம் பேசுவதாய்ச் சொன்னதையும் ஜோதி பிடிவாதமாய் மறுத்து விட்டாள்.

"நீயும் பேச மாட்டே! என்னையும் பேச விட மாட்டே! அப்புறம் என்னதான் பண் ணச் சொல்றே? ஒண்ணு, அவன்கிட்டே போய், "மடையா நான் உன்னை லவ் பண் றேண்டா"ன்னு சொல்லு! இல்லை, அவனை மறந்துட்டு சும்மா இரு. இப்படியும் இல்லாம, அப்படியும் இல்லாம ஏன் இப்படி என் உயிரை வாங்குறே?"

கடைசி தேர்வு முடிந்து ஊருக்குப் போவதற்கு முந்தின தினம் அன்று, அரவிந்தி டம் நிச்சயம் சொல்லி விடுவதாய் என்னிடம் சத்தியம் செய்து விட்டுப் போனாள். மாலை அவள் ஹாஸ்டலுக்குத் திரும்ப வெகு நேரம் ஆனது. நான் முடிவே செய்து விட்டேன். ரூம் வாசலிலேயே காத்திருந்து அவள் தலை தெரிந் ததும் ஓடிப் போய் அவளை கேட்டிலேயே பிடித்தேன். "என்னடி? என்ன ஆச்சு? சொல் லிட்டியா?"

"ப்ச்," உதட்டைப் பிதுக்கிவிட்டு படிகளில் மெதுவாய் ஏறி ரூமுக்குப் போய் படுத்து விட் டாள். "என்ன நடந்தது சொல்லு! ஏன் அவன்கிட்டே பேசலை?"

"பேசலைன்னா விடேன். ஏன் இப்படி என்னைப் போட்டுப் படுத்தறே?"

"அப்படித்தான் படுத்துவேன்! சொல்லு, ஏன் பேசலை? எனக்கு ஒரு நியாயமான காரணமாவது நீ சொல்லியாகணும்! இல் லைன்னா உன்னை இன்னிக்கு விடப் போற தில்லை."

சற்று நேரம் மௌனம் சாதித்து விட்டு, பின் அடிபட்ட பார்வையுடன் என்னைப் பார்த்து, "என்னாலே முடியலைடி ப்ரியா" என்றாள்.

மறுநாள் காலை ஜோதியின் அப்பா வந்திருந்தார். அவர்களுடன் பஸ் ஸ்டாண்ட் போயிருந்தேன். என் கைகளைப் பிடித்தபடி சோகம் நிஜமாய்த் தெரிகிற குரலில், "உன்னை விட்டுட்டு எப்படி இருக்கப் போறேன் ப்ரியா?" என்றாள். எனக்கு அவளிடம் நிறைய பேச வேண்டும் போலிருந்தது.

"ஜோதி, உன்னை கெஞ்சிக் கேட்கிறேன். இனிமேலாவது கொஞ்சம் புத்திசாலித்தனமா ஒரு முடிவெடு. ஒண்ணு, நீ அரவிந்த்கிட்டே உன் காதலை எப்படியாவது சொல்லணும். இல்லை, அவனை மறந்துட்டு நீ பழைய ஜோதியா ஆகணும். அவனை மறக்கிறது உன் னாலே முடியாது. எனக்கே தெரியும். அத னாலே நான் சொல்றதைக் கேளு. இனியும் ஊமைக் காதல் பண்ணாதே. அரவிந்துக்கு ஒரு லெட்டர் எழுது. அட்லீஸ்ட் லெட்டர்ல யாவது உன் காதலை தைரியமா சொல்ல முயற்சி பண்ணு ப்ளீஸ்" என்றேன்.

வெறுமையாய்ச் சிரித்தாள். "ஸாரி ப்ரியா. இது உனக்கே தெரியாது. இந்த ஒரு வருஷத் திலே மட்டும் அவனுக்கு ஏழு லெட்டர் எழுதிட்டேன். என்ன பிரயோஜனம்? ஒன் ணைக் கூட அவன்கிட்டே தருகிற தைரியம் எனக்கு வரலை. நேத்து ராத்திரிதான் ஏழையும் எரிச்சேன் ப்ரியா."

அதிர்ந்து போய் நின்றேன். காதல் இத் தனை கொடுமை செய்யுமா?

அதன் பிறகு வாரம் ஒரு கடிதமாவது போட்டுக் கொண்டோம். அவளுடன் நேரில் பேசுவது போல் இருக்காவிட்டாலும் கடிதம் எழுதுவது ஒருவிதத்தில் நிம்மதி கொடுத்தது. என் ஜோதி ரொம்ப தூரம் போய் விட வில்லை. பக்கத்தில்தான் இருக்கிறாள் என்பது போலான ஒரு நினைப்பைக் கடிதங்கள் கொடுத்தன.

அவளின் கடிதங்கள் ஆங்காங்கே காய்ந்து போன கண்ணீர்த் தீவுகளுடன் வந்தன. நான் அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியிருந் தது.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கடிதங்கள்

"இந்த சுண்டல்காரன் உன்னிடம் ரொம்பத்தான் அசடு வழியறான் உமா! அவன்கிட்டே நீ அதிகமா பேச்சு வெச்சுக் காதே!"

"உனக்கு எந்த சந்தேகமும் வேண் டாம், சுரேஷ்! அவன் ஏற்கெனவே என்னால காதலிக்கப்பட்டு கைவிடப் பட்டவன்தான்!"

– பாஸு



குறைந்து போயின. கடைசியாய் அவளுக்குக் கடிதம் எழுதி அல்லது அவளிடமிருந்து கடிதம் பெற்று இரண்டு வருடங்களாவது இருக்கும்.

இந்த இரண்டு வருடங்களாக அவள் எங்கே இருக்கிறாள், என்ன ஆனாளென்று கூடத் தெரியாது இருந்திருக்கிறேன். இத்தனை பழகின என் தோழியை எனக்கு ஞாபகப் படுத்த அவளின் இந்தப் பழைய காதலன் தேவைப்பட்டிருக்கிறான். சிரிப்புதான் வருகிறது.

“ஏய், என்ன சிரிக்கிறே? பாஸந்தி என்ன அத்தனை மோசமாவா இருக்கு?'' அரவிந்தின் கேள்வியில் மூன்று வருடங்கள் இறங்கி வந்தேன். ஒரு ஹோட்டலில் அமர்ந்திருந்தோம்.

''ஒண்ணுமில்லை அரவிந்த். ஏதேதோ பழைய ஞாபகம். டைம் மெஷின்ல ஒரு ரவுண்டே போயிட்டு வந்துட்டேன்.''

சிரித்தபடி காப்பியை ஆற்றின அரவிந்த் சற்று நேரம் பொறுத்து திடீரென்று,

"ஜோதியைப் பார்த்தியா ப்ரியா?'' என்றான்.

அவனை ஓங்கி அறைகிற ஆசை வந்தது. ஏனென்று தெரியவில்லை. தோள்களைக் குலுக்கி, ''இல்லை அரவிந்த். கடைசியா அவளை காண்டாக்ட் பண்ணி ரெண்டு வருஷம் ஆச்சு.''

ஒரு சின்ன இடைவெளி விட்டு, ''ஏன் குறிப்பா அவளைப் பற்றிக் கேட்கிறே?'' என்றேன் சந்தேகமாய்.

அரவிந்தன் கொஞ்ச நேரம் காப்பிக் கோப்பையையே பார்த்துக் கொண்டிருந்தான். பின் எதிர்பாராத ஒரு விநாடியில் நிமிர்ந்து என் கண்களை நேருக்கு நேராய்ப் பார்த்து, "ப்ரியா.. ரொம்ப நாளாவே இதை யார்கிட்டயாவது சொல்லணும்னு நினைச்சேன். இப்போ உன்கிட்டே சொல்றேன். "அப்போதிலிருந்தே நான் ஜோதியை ரொம்ப காதலிச்சேன் ப்ரியா. இப்பவும் அவளை மனசாரக் காதலிக்கிறேன். ரொம்ப உண்மையா அவளை நேசிக்கிறேன் ப்ரியா'' என்றான்.

கடவுளே நான் நினைத்து பயந்தது நடந்து விட்டது!

''கடைசி வரை என் காதலை அவகிட்டே சொல்ற துணிச்சல் எனக்கு வரலை ப்ரியா. என் ஆசைகளையெல்லாம் எனக்குள்ளேயே வெச்சுப் பூட்டிகிட்டு வாழ்ந்தேன். எவ்வளவோ தடவை அவளுக்கு லெட்டராவது எழுதணும்னு நினைச்சு எழுத ஆரம்பிச்சு நிறைய கிழிச்சுப் போட்டிருக்கேன். அதிலும் எனக்குத் தோல்விதான். இன்னிக்கு வரைக்கும் அவளை நினைச்சு என்னையே கொன்னுகிட்டிருக்கேன் ப்ரியா."

"பாவி" என்றேன் அழுத்தமாய்.

வழியெல்லாம் அவனைத் திட்டிக் கொண்டே வந்தேன். ஜோதியும் அவனைக் காதலித்தாள். அவளும் இவன் போலே சொல்லத் தயங்கி மௌனமாயிருந்தவள்தான் என்கிற செய்தி தந்த அதிர்ச்சியிலிருந்து அவன் இன்னும் மீளவே இல்லை.

"ஏன் அரவிந்த், யோசிச்சுப் பாரு. உனக்கே வெட்கமா இல்லையா? அவதான் பொண்ணு, தயங்கியிருக்கான்னா நீயாவது தைரியமா பேசியிருக்க வேண்டாமா?"

ஜோதி வீட்டு நம்பர் எப்போதோ என் டிஜிட்டல் டைரியில் போட்டு வைத்தது இருக்கிறது. தேடி எடுத்து போன் செய்தேன்.

''நீ இங்கேயே இரு அரவிந்த். நான் முதல்லே அவகிட்டே பேசறேன். அப்புறம் உன்னைக் கூப்பிடறேன். டென்ஷனாகாம அமைதியா பேசு. ஓகேயா?''

பூத்தின் உள்ளே நுழைந்து நம்பர் சுழற்றினேன்.

"ஹலோ ஜோதி இருக்காளா?"

"இல்லையேம்மா. நீங்க யாரு பேசறது?"

''நான் அவ ஃப்ரெண்ட் ப்ரியா மெட்ராஸ்லிருந்து பேசறேன்.''

"நேத்திக்கு வரை இங்கேதாம்மா இருந்தா. இன்னிக்குத்தான் அவ ஆத்துக்காரர் வந்து அழைச்சுண்டு போயிருக்கார்."

பணம் கொடுக்கிறபோது கண்ணாடி வழியே வெளியில் டென்ஷனாய் நகம்கடித்துக் கொண்டிருந்த அரவிந்தைப் பார்த்தேன். ஒரே நாளில் எனக்கு ஏன் அடுக்கடுக்காய் இத்தனை சோதனைகள்? இந்த விஷயத்தை நான் எப்படி இவனிடம் சொல்வது? சொன்னால் இவன் தாங்குவானா? ஆனாலும் சொல்லி விட்டேன்.

அவன் அசைவுகள் எல்லாம் ஒரு விநாடி



"என் பேரனுக்கு மெக்கானிக் புத்தி ஜாஸ்தி. 'அடிக்கடி முதுகு சொறிய கூப்பிடாதே தாத்தா'ன்னு ஒரு மிஷின் செய்து கொடுத்துட்டான்!"

– கிறிஸ்டி

நின்றதாய் உணர்ந்தேன். என்னை ஒரு நம்ப முடியாத பார்வை பார்த்தான்.

அடுத்து அவன் செய்ததுதான் எதிர்பாரா தது. கைகளால் முகத்தில் அறைந்தபடி அழ ஆரம்பித்தான்.

அன்று இரவு விளக்குகளை அணைத்து விட்டு இருட்டில் படுத்தபடி ரொம்ப நேரம் யோசித்துக் கொண்டிருந்தேன். ஜோதியின் சிரித்த முகம் நினைவில் வந்து போனது. எத்தனை மகிழ்ச்சியான, துள்ளலான பெண்! அவளுக்கு இது நடந்திருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை. ஒருமுறை, ஒரே ஒருமுறை மனம் விட்டுப் பேசியிருந்தால் அவள் வாழ்க்கை எத்தனை சந்தோஷமாய்த் தொடர்ந்திருக்கும்!

இன்னொருபுறம் அரவிந்த் ஞாபகமும் வந்தது. பிடிவாதமாய் முகத்திலறைந்து கொண்டு அவன் அழுத காட்சி இன்னும் மனத்தில் நிற்கிறது. "நான்தான் காரணம், நானேதான் காரணம்"- இன்னும் அவன் காதுக்குள் சொல்வது போலிருக்கிறது.

யோசிக்கிறபோது, காதலின் மேல் நம் பிக்கை இருக்கிற, அதை உன்னதமாய் மதிக் கிற யாரும் 'நான் காதலிக்கிறேன்' என்று சொல்வது கேவலமில்லை என்று உணர்ந்த எவரும் தன் காதலை வெளிப்படுத்தத் தயங்கு வதில்லை என்று தோன்றியது.

ஒரு முடிவோடு நான் தூங்கினபோது மணி நிச்சயம் இரண்டுக்கு மேலாகியிருந்தது.

மறுநாள் காலை ஆபீஸில் நுழையுமுன் நான் தெளிவாய் இருந்தேன். இன்றைக்கு என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித் திருந்தேன். என் டேபிளில் உட்காரும் போது ஒருமுறை சுற்றிப் பார்த்தேன். உலகமே புத் துணர்வோடு இயங்குவதாய்த் தோன்றியது. ஃப்ளவர்வாஸிலிருந்த ரோஜாவை எடுத்து ஒரு முத்தம் கொடுத்து விட்டு திரும்ப வைத்தேன். இரண்டு நாள் லீவில், வீட்டில் செய்து வைத்த டிசைன்களை எடுத்து டேபிள் ஓரமாய் வைத் தேன். இதையெல்லாம் இன்றைக்குள் ஒழுங்கு செய்து. நாளைக்கு பாலாவிடம் காட்டி அனுமதி வாங்கி விட்டால் என் முதல் விளம்பர ஷூட்டிங் ஆரம்பிக்க வேண்டியது தான். நினைக்கவே சிலிர்த்தது. நானே எழுதி, இயக்கப் போகிற முதல் விளம்பரப் படம். மேலிடத்தில் இந்த முழு ப்ராஜக்டையும் என்னிடத்தில் கொடுக்க ரொம்பவும் தயங்கி னார்கள். மூன்று வருட அனுபவம் போதா தாம். மண்ணாங்கட்டி! நான் ராஜினாமா செய்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது பாலாதன் தலையிட்டு எனக்காகப் பேசி எம்டியை சமாதானம் செய்து இதை வாங்கித் தந்தான். தனக்கு கீழ்ப்பதவியில் இருக்கிறவர்களின் திறமை களையும், உணர்வுகளையும் மதிக்கத் தெரிந்த பாலா போன்ற டைரக்டருக்குக் கீழ் வேலை செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

ஒரு நிமிடம் கண் மூடிப் பிரார்த்தித்து விட்டு இன்றைய தினத்தின் முதல் வேலை யாய் போனை எடுத்தேன்.

"ஹலோ, பாலாவா?"

"யா, ப்ரியாதானே!"

"யெஸ் குட்மார்னிங்."

"மார்னிங், சொல்லு என்ன விஷயம்?"

"உன்கிட்ட கொஞ்சம் பர்ஸனலா பேச ணும் பாலா! ஒரு ஒன் ஹவர் என்னோட வெளியே வர முடியுமா? ப்ளீஸ்."

அவன் தந்த சில விநாடி அமைதியில் படபடக்கிற நெஞ்சோடு காத்திருந்தேன்.

"இப்ப ஒண்ணும் முக்கியமான வேலை இல்லைதான். ஆனா ஒரு அர்ஜன்ட் போன் காலுக்காகக் காத்திட்டிருக்கேன். ஒரு அரை மணி நேரம் கழிச்சுப் போலாமே. can you wait?" என்றான்.


ஜோதியின் அந்தக் கடைசி நாள் முகம் நினைவில் விரிந்தது.

"முடியாது. இப்பவே பேசியாகணும்!" என்றேன் தீர்மானமாக. ⭘

இருபதிலும் அறுபதிலும் இளமை உணர்வோடு வாழ...

கிரௌன் காயகல்பம்

* கல்ப மூலிகைகளை சரியான விகிதத்தில் தங்கம், வெள்ளி, இரும்பு, தந்தாகம் முதலிய பஸ்பங்களுடன் தேனில் கலந்து தயாரிக்கப்படுகிறது.
* இரத்தத்தை சுத்தம் செய்து, இரத்த ஓட்டத்தை அதிகரித்து நரம்புகளுக்கும், தசைகளுக்கும் ஒப்பற்ற சக்தியூட்டி உடல் வலிமையையும் வீரியத்தையும் அளிக்கிறது.
* நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் உழைப்பிற்கு தேவையான சக்தியும், அலுப்பை போக்கி புத்துணர்ச்சியும் அளிக்கிறது.



தங்க பஸ்பம் அடங்கியது
பத்தியம் ஏதுமில்லை

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கிறது

♛ கிரௌன்

காயகல்பம்

ஒவ்வொரு ஸ்பூனிலும் ஒப்பற்ற சக்தி!

வனப்பூட்டும் இளமை, வியப்பூட்டும் வீரியம், உடலுக்கு உறுதி!

ஞாபக மறதியா?

இதோ... உங்கள் பிரச்சினைக்கு தீர்வு!

♛ கிரௌன்

வல்லாரை (பிரம்மி)



* சமீபத்திய விஞ்ஞான ஆராய்ச்சிகளில் பிரம்மி-வல்லாரையில் உள்ள நினைவாற்றலை அதிகப்படுத்தும் செயல்திறன் மிக்க அணுக்கள் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.
* பண்டைய சித்தர் முதல் நவீன விஞ்ஞானிகள் வரையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
* குறைந்த செலவில் நிறைந்த தரம்.


உங்களது மூளையின் அபார செயல்திறனுக்கு

கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்


78, அஷ்டபுஜம் ரோடு, சூளை, சென்னை 600 112.
போன்: 8520155, 5321414, 5321515

HEIGHT:

HOW INCREASES FURTHER ? WITH HERBO-HEIGHT-THERAPY upto 35 Years



Such Claim ! Never Heard ! Never Seen ! Doctors Amazed ! Scientists Amazed ! You would also be Amazed ! On Time-Tested Herbo-Height-Therapy — a Claim for further Height-Growth upto 35 years. A talk with Dr. O. P. Bagga, developer of this therapy :



■ **Describe the role of Herbo-Height-Therapy for further and future Height-Growth facing its practical challenges.**

□ Herbo-Height-Therapy has opened a new vista in the history of medical science against the existing negative norms of modern science for further and future height-growth anytime upto the age of 35 years, after marriage, after child-birth, faster than the normal growth ratio under ayurvedic system of medicine.

□ HHT is now running in fourth decade with several thousand beneficiaries to its credit in India and Abroad. A landmark record in the history of future height-growth.

□ This claim has not proved false in Judicial examination and other Practical Demonstration Tests upto 35 years.

□ Go by reading : get by reading on scale of satisfaction.

■ **"Height is known as natural phenomena : it has no remedy". Justify your claim in this light.**

□ There is no ultimate End of any Research in this World, it is always subject to improvement. Therefore, negative approach of modern science is one-sided, incomplete and now it is out-dated also. Science has reversed it own decisions. In the past, it has declared Small Pox is incureable, T.B. is also not cureable, Breast feeding is harmful—all negatives. Later, it observed all positive.

□ Ayurveda, Allopathy, Homoeopathy are different in principles, in theory, in practice and also in merits and demerits. If one system fails to cure and cover any problem, other does miracle ! In case of further and future height growth, if allopathy fails to provide any solution, other systems are also there. HHT is the positive answer of this solution.

■ **Discuss the strategy of Height-Growth at different stages comparing with contribution of HHT.**

□ Height at birth is around 50 cms and it grows almost double in two years. These 100 cms are the basic-growth of the body. Deduct these 100 cms from the existing height, remaining centimetres are the normal growth of the body. Divide it with years of age, its ratio would be around 3-2-1 mm in a month and with HHT ratio you gain by 10-9-8-7-6-5-4-3 mm under plus and minus status of the body. Faster than the normal growth ratio.

□ This time-tested therapy helps to increase height by 20 to 40 mm (2-4 cms) in short course of 3 month, 50 to 150 mm in full course of 1 year, 5 to 10 mm in 1 month trail doses under mutual confirmation of Height before & after the course.

■ **Sometimes, Growth turns Slow-Sluggish-Stop, does not grow further, during the growth period. Why it is so ? Any helpful suggestions ?**

□ There are various norms of age limitations for height-growth, but none is perfect. As observed, Height-Growth fluctuates under plus and minus status of the body and its environment. Age is one of the factor, not total criteria.

□ Height refuses to increase further after 'Periods' in girls, after 'Beard' in boys. One brother is tall, other is short, one sister is tall, other is short. Parents are tall, children are short and its vice-versa also. Some born normal, some born abnormal.

□ Hence, none is certain about his height-growth even to the normal extent, required or to the desired extent. But under our experience, if cares are taken under pollution and stress free environment with hanging and stretching exercises, nutritious and balanced diet before the age of 9 years, height can be attained to the better-extent. HHT has also proved helpful for better growth if it is consumed at the age 7-8-9.

■ **What are the other plus and minus roles of HHT under your experience ?**

□ It has many plus except its one limitation that it can't do promise for maximum height beyond the existing capacity of the body. Even then it is not minus, but it is also normal-plus.

□ Under additional plus, it helps to tone up the functional system of the body removing its deficiency and disorders. Also remove the pimples, improve the complexion, soften the skin, sharpen the features, improve the memory. Feminine breastlines & disorders turns normal. Bulky & lean person also become normal.

■ **Explain the concept under which it works upto the age of 35 years.**

□ Ayurveda recognises the period of youth upto 40 year. Till youth is there, plus action is there, certain change in the body is possible. This is associated with systems of 'Sarvdhatu-Pushty-Parikirya' which converts our food into Ras, Rakta, Mans, Maidh, Asthi, Majha and Shukra. Asthi and Majha are our bony system and bony-system is our height. Under this concept this therapy works upto 35 years and this has proved practically on several thousand its beneficiaries.

■ **Do you need any test report for joining the course ? Required information be given with its expenditure to follow the procedure.**

□ After mutual enquiry, under our procedure, height of the candidate is confirmed under mutual satisfactions, file is prepared, required doses are given with prospectus and necessary directions. Regn. number is also alloted for future verification of the result after every short course of 3 month and after 1 month trail doses, if desired. Doses are in the shape of capsules & drops. Free from exercises, reactions, restrictions and bitter taste, to be used at home. No frequent visits.

□ Normal charges for 3 months short course are Rs. 6,000/- and for 1 month trail doses Rs. 2,000/- + Rs. 100/-Regn./Post (in India) through MO/DD in the name of **Dr. O. P. Bagga**, Bazar Lal Kuan, (Opp. Koocha Pandit) Delhi-6. **Ph. : 3262426** daily 11 to 6 except Sunday. Send self-add-stamped enveloped for more details.



படம்: ஸ்ரீஹரி

"வெச்சுக்கிட்டே இல்லேன்னு சொல்லலாமா...?"

வாண்டு சைகாலஜி

"ஏன்பா அந்தப் பையனைத் திட்டினே...? பாவம்தானே அவன்... ஒரு ரூபாய் குடுத்தா என்னவாம்... பசிக்குதுன்னுதானே கேட்கறான்..."

கையேந்துவோரிடம் மறுப்புச் சொல்லும் போது பக்கத்தில் ஒரு குழந்தை இருந்தால் இந்தக் கேள்வி எழாமலே இருக்காது.

"கையிலே சில்லறையில்லையே..." என்று சொல்லி,

"பொய் சொல்றே! உன் பர்சுல இருக்கு; எனக்குத் தெரியும்..." என்ற கண்டனத்தை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டாம்.

'ஒரு கணத்தின் காருண்யம் ஒரு சோம்பேறியை உருவாக்கி விடக் கூடாது. அதனால்தான் பணம் தர மறுத்தேன்...' – இதைக் குழந்தைக்கு விளங்க வைக்க முடியுமா...?

முடியும். ஆனால் முதலில் நாம் உறுதியாய் இருக்க வேண்டும் – யாசிப்பவரை ஊக்குவித்து நிரந்தரப் பிச்சைக்காரராக்கிவிடக் கூடாது என்கிற நல்லெண்ணம்தான் நம்மை இயக்குகிறதா? அல்லது அலட்சியம், அகம்பாவம், நிர்தாட்சண்யம், சுயநலம், சமூக அக்கறையின்மை – இவை நம்மைப் பேச வைக்கிறதா...? ஆத்ம பரிசோதனைக்குரிய விஷயம்!

நல்லெண்ணம் குறித்து உறுதியாயிருந்தால் விளக்கமான பதிலும் சாத்தியம்.

"இல்லை மீனு... இந்த மாதிரி மத்தவங்க கிட்டே பணம் கேட்டு வாங்கறது சரியில்லே... எல்லாரும் ஏதாவது வேலை செய்து தான் சம்பாதிக்கணும்..."

"அப்போ ஏன் அந்த ஆளு வேலை செய்யாம எல்லார்கிட்டேயும் பைசா கேட்டாரு...?"

"வேலை செய்யாமயே இப்படிப் பல பேர்கிட்டே கேட்டு சுலபமா பணம் வருதுன்னு பழகிப் போயிருக்கலாம். இல்லைன்னா கஷ்டப்பட்டு வேலை தேடியும் கிடைக்காம இருந்திருக்கும்."

"ஏன் கிடைக்கலை வேலை...?"

"கொஞ்சம்கூடப் படிக்கத் தெரியாம இருக்கலாம். அப்படியிருந்தா வேலை கிடைக்கறது கஷ்டமில்லையா...?"

"அவங்க அப்பா, அம்மா ஸ்கூல்ல படிக்க வைச்சிருக்க மாட்டாங்களா...?"

"எத்தனையோ பேருக்கு படிக்கவே முடியாத நிலைமையிருக்கு... ஸ்கூலுக்கு ஃபீஸ் கட்டுற அளவுக்குப் பணம் இருக்காது. வீட்டுல நிறையப் பேர் இருப்பாங்க. ரொம்ப ஏழையா இருப்பாங்க..."

"நாம் ஏழையில்லியேப்பா...?"

"இல்லை..."

"அப்படின்னா நாம ஏன் ஏழைங்களுக்குப் பணம் தந்து ஹெல்ப் பண்ணக் கூடாது...?"

"தரலாம். ஆனா அதுக்குப் பதிலா அவங்களும் நமக்கு ஹெல்ப் பண்ணலாம். அப்படி செஞ்சா இந்த மாதிரி தெருவிலே நின்னு

கெஞ்சி கேட்க வேண்டாமில்லியா... இந்த வேலையை செஞ்சதுக்காகப் பணம் கொடுங்கன்னு அவங்களும் சந்தோஷமா கேட்பாங்க, நாமும் சந்தோஷமா தரு வோம்..."

இந்த உரையாடலின் இறுதியில் வீட்டுப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்களைப் பற்றிய விளக்கங்களைக் குழந்தைகள் நிச்சயம் கேட்பார்கள். அவற்றுக்கான பதில்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். அதோடு, நமக்கு வருமானம் வருவதற்கு என்னென்ன வகையில் உழைக்கிறோம் என்பதையும் எளிமையாகப் புரிய வைக்கலாம்.

உழைப்புக்கும் ஊதியத்துக்கும் இருக்கிற தொடர்பை உணர்த்திய பிறகு,

"அம்மா என்ன வேலை பண்றாங்க...? அவங்களுக்கு நீ பைசா தருவியா...?" - இப்படியொரு அனுகுண்டு கேள்விக்கு இடமிருக்கிறது. (அதாவது அம்மா வேலைக்குச் செல்லாதவராயிருக்கும் பட்சத்தில்...)

"நம்ம எல்லாரையும் பார்த்துக்கறாங்க. அப்பா கொண்டு வர பைசாவை அம்மா பத்திரமா வைச்சிருந்து பங்கு போட்டுத் தர்றாங்க. அதிலே கொஞ்சம் பணமாவது மத்தவங்களுக்கும் உபயோகமாகிற மாதிரி பண்றாங்க..."

"நான் எந்த வேலையும் பண்ணலியே. எனக்குப் பணம் நீ தரே. ஸ்கூல் ஃபீஸ் கட்டறே. ஆனா சிக்னல்ல வந்து பைசா கேட்டாரே, அவரோட குழந்தைக்கு யாரு ஸ்கூல் ஃபீஸ் கட்டுவாங்க...?"

- இந்த எண்ண ஓட்டம் ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் கேள்வியாக வெளிப்படும்.

"அந்த ஆளை நம்ம வீட்டுலே வேலை செய்யச் சொல்லலாமே...?" என்றுகூட குழந்தை கேட்கலாம்.

நம்மிலும் எளியார் உலகில் உள்ளனர் என்பதையும், நமது கஷ்டமற்ற நிலைமைக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும், பணத்தின் அருமையையும் அதைப் பயனுள்ள வகையில் பகிர்வதன் மகிழ்ச்சியையும் உணர்த்த ஏற்ற கணம் அது.

எப்படி உணர்த்தலாம் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(அடுத்த வாரம் வரை...)

● ஷோபனா தாசன்,
நாட்டரசன்கோட்டை.

? பி.ஜே.பி. ஆட்சியில் நடக்கும் ஊழல்களை வாஜ்பாய் மறைக்கப் பார்க்கிறார் என்று சு. சுவாமி சொல்கிறாரே...?

! ஊழல்களை மறைத்தால் கூடப் பரவாயில்லையே... மறைக்கப்படவென்றே ஏற்பட்டவை அவை. மற்றவர்கள்தான் அவற்றைக் கண்டுபிடித்து வெளிக்கொணர வேண்டும். ஆனால், பகிரங்கமாக நடக்கும் மதரீதியான தாக்குதல்களையும் கொலைகளையும் கூட அல்லவா 'அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று அலட்சியப்படுத்தி மறைக்கப் பார்க்கிறார்கள்! அதுதான் கொடுமை.

● எம். ரேவதி, மன்னார்குடி.

? வாழப்பாடிக்கும் திண்டிவனத்துக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு...?

! திண்டிவனம் இருக்குமிடம் அனைவருக்கும் தெரியும். வாழப்பாடி சேலத்துக்கு அருகில் இருக்கிறது. தூரத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்களேன்.

பால் தாக்கரே எந்த விதமான அரசியல்வாதி..?



• காவியின் நிறம்...

● ஆ. கமல்ராஜ், தாரமங்கலம்.

? தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஒரு நபர் கட்சி என்று ஜெயலலிதா கூறியுள்ளாரே...?

! கிள்ளிவளவனை மறந்து விட்டாரா...?

● சி. தங்கராசு, திருக்கருகாவூர்.

? அமைச்சர்களைத் தேர்வு செய்யும் உரிமை பிரதமருக்கே என்று துணிச்சலாக வாஜ்பாய் அறிவித்திருப்பது எதைக் காட்டுகிறது?

! உலகறிந்த இந்த உண்மைக்கு ஓர் அறிவிப்பு வேறு தேவையா...! அதற்கு ஒரு துணிச்சலும் தேவையில்லை. ஆக, தமது பதவி பறிபோய்விடுமோ என்று அவர் தயங்கித் தடுமாறுவதைத்தான் அறிவிப்பு உணர்த்துகிறது.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? சபரிமலை மகரஜோதி விழாவில் விபத்தில் இறந்த பக்தர்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலை கி. வீரமணி தெரிவித்திருக்கிறாரே?

! ஆத்திகத்தில் இருப்பதைப் போலவே நாத்திகத்திலும் ஒரு பக்குவ நிலை இருக்கிறது. அதை நோக்கி வீரமணி போய்க் கொண்டிருக்கிறார் போல...

● பி.எம். வள்ளி, அரசரடி.

? பிராமண சங்கத்தினர் பொங்கலன்று ஒளிபரப்பான சின்னி ஜெயந்தின் 'கிண்டலோ கிண்டல்' சன் டீ.வி. நிகழ்ச்சியை எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்கிறார்களே...?

! பிராமண சங்கத்தினர் மட்டுமல்ல...



• இடைவெளி...



• ....அளவு....

பல தரப்பினரும் அந் நிகழ்ச்சி குறித்துத் தங்கள் குமுறலையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி நமக்கு எழுதியிருக்கிறார்கள். ஜாதி உணர்வினால் மட்டுமே எழுந்த எதிர்ப்பு அல்ல; ரசக்குறைவான நகைச்சுவையைக் கண்டு எழுந்த தார்மிகக் கோபம் என்று சின்னி ஜெயந்த், சன் டீ.வி. இருவருமே உணர வேண்டும்.

● சுகந்தி நாகராஜன், புத்தூர் –
மஞ்சக்கொல்லை. ❑

? ஆறு மாதத்துக்கொருமுறை அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்படுகிறது. ஆனால் சாதாரண விவசாய மற்றும் இதர தொழிலாளர்களின் ஊதியத்தில் உயர்வில்லை... இது நியாயமா?

! நியாயமில்லைதான். இந்நாட்டின் முதல்தரக் குடிமக்கள் அரசியல்வாதிகள்; இரண்டாம்தரக் குடிமக்கள் அரசு ஊழியர்கள்; மூன்றாம் தரத்தினர் பொதுத்துறை நிறுவனத்தினர்; நான்காவது தனியார் நிறுவன ஊழியர்கள்; கடைத்தரக் குடி

மக்கள்தான் unorganised sector எனப்படுவோர். அவர்கள் கஷ்டப்படுவதற்கென்றே பிறந்தவர்கள்.

● **என். ஜெயராமச்சந்திரன், ஸ்ரீசைலம்.**

? சினிமாவையும் விளையாட்டையும் அரசியலாக்கும் பால்தாக்கரே எந்தவிதமான அரசியல்வாதி...?

! அவர் ஒரு 'ஓயிட் காலர்' தாதா!

● **ப. இராம் முருகன், சிவகங்கை.**

? 'சட்டம் என்பது ஒரு விளையாட்டுத் தளம். இதில் திறமையுள்ளவர்கள்தான் ஜெயிக்க முடியும்...' என்கிறாரே பி.எச். பாண்டியன்...?

! இது டிபிகல் வழக்குரைஞர் மனோபாவம். ஆனால், பொது வாழ்க்கைக்கு வருபவர்கள் சட்டத்தைச் சாதுர்யமாய்ப் பயன்படுத்துவது பெருமையல்ல; தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதே பெருமை. அல்லாதுபோனால் சிறுமைதான்.

● **செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.**

? நீதிபதிகள் நியமனத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு வேண்டுமென்று ராமதாஸைத் தொடர்ந்து மூப்பனாரும் கூறியுள்ளாரே?

! குடியரசுத் தலைவரே கூட ஏறத்தாழ இதே கருத்தைச் சொல்லியிருக்கிறார். இது ஆபத்தான போக்கு. தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறத்தான் வேண்டும்; ஆனால் சில துறைகளிலேனும் ஒதுக்கீடு இன்றி, தகுதி அடிப்படை மட்டுமே கணக்கிடப்பட வேண்டும். அவற்றுள் நீதிபதி நியமனங்களும் ஒன்று. தகுதி அடிப்படையிலேயே, தாழ்த்தப்பட்டவர்களும் நீதிபதியாக நியமனம் பெற முடியும்.



• துணிச்சல் திலகம்!



• சிரிப்பு வரவில்லை....



• வழக்குரைஞர் சிந்தனை



• பொங்கு மாங்கடல்!

● **எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

? 'ஆர்.எஸ்.எஸ். விசில் ஊதினால் வாஜ்பாய் எழுந்து ஓடுவார்' என்கிறாரே சு.சாமி...?

! 'ஜெ' விசில் ஊதினால் சு. சுவாமி...

● **பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.**

? சபரிமலையில் விபத்து நடந்து பலர் இறந்ததற்கு தெய்வ குற்றமே காரணம் என்று அய்யப்ப சேவா சங்கத் தலைவர் கூறுகிறாரே?

! சபரிமலை யாத்திரை செல்வோர் மிகவும் கடுமையான விரதம் காக்க வேண்டும் என்று விதித்ததன் மூலமே அந்த இடத்தில் கூட்டம் அதிகம் சேருவதைக் கட்டுப்படுத்தினார்கள். ஆனால், இன்று அந்த விதிகளை சீரியஸாக எடுத்துக் கொள்ளாதவர்களும் போய்க் குவிகிறார்கள். நெரிசல் அதிகமாவதால் விபத்துக்கான வாய்ப்புகளும் அதிகம். ஆக 'தெய்வ குற்றம்' என்பது அமானுஷ்ய விஷயமல்ல... தெரிந்தே செய்யும் தவறுதான்!

● **கே. ஏ. துரைசாமி, சென்னை - 17.**

? 19.1.99 தினமணியில் அடக்கமான நோன்பு என்ற தலையங்கத்தைப் படித்தாரா தராசு?

! படித்தேன். முஸ்லிம் சகோதரர்கள் அழைப்பதும், அரசியல் நோக்கில் அரசியல் தலைவர்கள் கலந்து கொள்வதும் வழக்கமாகி விட்டது. இறையுணர்வு கடந்த இதர கருத்துகளுக்கு அந்தருணத்தில் இடமளிக்காமலிருப்பதுதான் பண்பாடு.

● **சசிகலா தேவி, விருதுநகர்.**

? நித்யஸ்ரீயின் குரல் வளம் எப்படி? ரசித்திருக்கிறீர்களா...?

! பொங்குமாங்கடல் என்ற ஒரு உதாரணத்தைத்தான் சொல்லலாம் - பாறையிலும் மோதும், இண்டு இடுக்குகளிலும் புகுந்து புறப்படும்; அது நுழைய முடியாத இடமே கிடையாது. நித்யஸ்ரீயின் அறிவும் மனமும் கடிவாளமிட்டால் அது மேலும் பல அற்புதங்களை நிகழ்த்தும்.

❑ **ரூ. 50 பரிசு பெறுபவர் :**
சுகந்தி நாகராஜன்,
2/57 அ. வேளார் தெரு,
புத்தூர் - மஞ்சக்கொல்லை
நாகப்பட்டினம் - 611 106.

''சிறந்த கன்னட நாடகாசிரியர் என்று பாராட்டப்படுவதில் எனக்குத் திருப்தியில்லை. சிறந்த உலக நாடகாசிரியர்களுள் ஒருவனாக நான் ஆகவேண்டும்''



பீடம் ஏறிய நாடகக் கலைஞர்!

முக்கிய ரோலில் வந்த 'சம்ஸ்காரா'வாகட்டும், வில்லனாக வந்த 'ரட்சகன்' மற்றும் 'காதலனா'கட்டும், நடிப்பு என்பது கிரீஷ் கர்னாடின் ஒரு முகம்தான்.

'டர்னிங் பாயிண்ட்' என்ற அறிவியல் தொடரை தொலைக்காட்சியில் அவர் இயல்பாகத் தொகுத்தபோது விஞ்ஞானத்தில் அவருக்குள்ள ஈடுபாடும் ஞானமும் தெரிந்தது.

சில ஆண்டுகளுக்கு முன் பாரம்பரியக் கலைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள வந்திருந்த கிரீஷ் கர்னாடிடம் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

''பிற்காலத்தில் பிராமணர்கள் தங்கள் குடும்பத்துப் பெண்களை பரதம் ஆட அனுப்பத் தொடங்கியபின், அதற்கு ஒரு தனி கௌரவம் கிடைத்தது உண்மைதான். ஆனாலும் பரதத்தின் வரலாற்றில் தேவதாசிகளுக்கு உள்ள முக்கியப் பங்கை யாரும் மறைத்துவிடக் கூடாது என்றவர், பண்களை இன்றுவரை முறையாக ஓதிவரும் ஓதுவார்களின் பங்களிப்பையும் நினைவூட்டினார்.

தொலைக்காட்சியில் பணியாற்றியபோது, பல கிராமியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளைத் தாம் அதிகம் ஒளிபரப்பச் செய்ததைக் குறிப்பிட்டார். ''ஆனால் 'சுத்த போர்' என்றும் 'இனியும் இப்படி

தமிழுக்கு ஏனில்லை ஞானபீடம்?

கிரிஷ் கர்னாட், ஞானபீட விருது பெறும் ஆறாவது கர்நாடக இலக்கிய கர்த்தா. இதேபோலவே வங்காள, மலையாள, இந்தி மொழி இலக்கியவாதிகள் பலர் ஞானபீடம் ஏறியிருக்கிற வேளையில், அகிலனுக்குப் பிறகு தமிழில் யாரும் இவ்விருதைப் பெறாததேன்?

இத்தனை ஆண்டுகள், ஞானபீட விருது பெறும் அளவு ஒரு தமிழ்ப் படைப்பாளி கூடவா தேறவில்லை? அல்லது ஞானபீட கமிட்டியினரால் தமிழ் புறக்கணிக்கப்படுகிறதா? சில முக்கியமான தமிழ் எழுத்தாளர்களிடம் கேட்டோம்:

அசோகமித்திரன்:

ஞானபீடக்காரர்களின் இலக்கியத் தகுதி நிர்ணயத்துக்கு ஏற்ப இன்னும் ஒரு தமிழ் எழுத்தாளர் கிடைக்கவில்லை என்றுதான் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். அடித்துப் பிடித்துப் பயமுறுத்திப் பரிசு வாங்குவதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

இந்திரா பார்த்தசாரதி:

அகில இந்திய அளவில் நாம் அறியப்படவில்லை என்பது தான் உண்மை. மற்ற மொழிகளில் அப்படி இல்லை. ஏதாவது ஒரு படைப்பு ஒரு மொழியில் வெளியானால், அது உடனே இந்திக்கு மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்து விடும். ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது பெரும் பலன் தராது. இந்தியில் மொழி பெயர்த்தால்தான் வடநாட்டாரின் கவனத்துக்கு வரும்.

அதைவிட, படைப்புகளைப் பற்றிய விமர்சனப் புத்தகங்கள் நிறைய வெளிவரவேண்டும். எம்.டி.வாசுதேவன் நாயரின் எழுத்துகள் பற்றி, பத்து புத்தகங்களாவது வெளியாகியிருக்கின்றன. தமிழல் அப்படி உண்டா?

அதைவிட முக்கியமானது, பிற மாநிலங்களில் இலக்கியத் துறையில் இல்லாதோர்கூட தம் மொழியில் வெளியாகியுள்ள சிறந்த படைப்புகள் பற்றிப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். தமிழ் நாட்டில் பிரபலமாகியுள்ள இலக்கியமல்லாத பிற துறையினருக்கு நவீனத் தமிழ் பற்றி ஒன்றுமே தெரியாது.

இதுபோன்ற விஷயங்களில், யார் முன் நின்று பேசுகிறார்கள் என்பதும் முக்கியம். எல்லா துறை முன்னணியினரும் இலக்கியத்துக்கு உதவ வேண்டும். இதெல்லாம்

ஒளிபரப்பினால் தொலைக்காட்சி நிலையத்தையே எரித்து விடுவோம்' என்றும் கண்டனக் கடிதங்கள் குவிந்தன'' என்றார் வேதனையுடன். ''ஒரிஜினல் கிராமியக் கலைஞர்களுக்கு இன்று எங்கும் அவமதிப்புதான்'' என்றார் மெய்யான வருத்தம் பொங்க.

இவையல்லாத, 'நாடக ஆசிரியர்' என்ற பிரிவுக்காக ஞானபீடப் பரிசு அவரை நாடி வந்துள்ளது. குறிப்பிட்ட ஒரு நாடகத்திற்கு என்றில்லாமல், அவரது மொத்தப் பங்களிப்புக்காக இந்த கௌரவம்!

கர்நாடகத்தில் சீரியஸ் நாடகங்களுக்கு ஆதரவு குறைவது பற்றிய ஆதங்கம் நிறைய உண்டு இவருக்கு. இவரது 'யயாதி' என்ற நாடகம் தயார் நிலையை எட்டிய பிறகும், மேடையேறப் பல வருடங்களானது. ஆனால் இவரது 'துக்ளக்' வெகு வேகமாக மேடையேறி வெற்றிக் கொடியை நாட்டியது. கர்னாடின் ஆங்கில நாடகமான 'திப்பு சுல்தான்' பி.பி.ஸி.யில் ஒலிபரப்பானது.

செய்யாமல், ஞானபீடப் பரிசு தமிழுக்கு ஏன் தரப்படவில்லை என்று கேட்பதில் நியாயமில்லை. குறை நம்மிடம்தான் இருக்கிறது.

பிரபஞ்சன்:

ஞானபீடப் பரிசு நமக்குக் கிடைக்காததில் தமிழுக்குதான் அவமானமே தவிர, ஞானபீடப் பரிசு பெறும் தகுதிபடைத்த தமிழ் எழுத்தாளர்களுக்கல்ல! எனது பார்வையில், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, அசோகமித்திரன் ஆகியோர், என்றைக்கோ ஞானபீடப் பரிசு பெறும் தகுதியை எய்தி விட்டார்கள். ஆனாலும் ஏன் இன்னும் அவர்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை என்று யோசிக்கும் போது பல காரணங்கள் தோன்றுகின்றன.

முதலாவது, பிற மொழி போல், தமிழுக்கு எடுத்துச் சொல்லி, செயல்படுத்தும் 'லாபி'யில்லை. மலையாளத்தை எடுத்துக் கொண்டால், உள்ளூரில் ஆயிரம் சச்சரவுகள் இருந்தாலும், டெல்லியில் போய்ப் பேசும்போது, பரிசு என்று வரும் போது எம்.டி.யையோ, அரவிந்தனையோ தான் உயர்த்திப் பிடிப்பார்கள். தமிழ் நாட்டில் இதைச் செய்ய மாட்டார்கள். 'தனக்குக் கிடைக்கவில்லையென்றாலும் பரவாயில்லை; அடுத்தவனுக்குக் கிடைத்து விடக் கூடாது' என்பதில் தமிழர்கள் கவனமாக இருப்பார்கள்.

சாகித்திய அகாதெமியும் இப்படித்தான். சுந்தரராமசாமியின் ஒரு புளியமரத்தின் கதையோ, செல்லப்பாவின் வாடி வாசலோ, ஜீவனாம்சமோ, லா.சராவின் அபிதாவோ, எம்.வி.வெங்கட்ராமின் நித்யகன்னியோ வெளி வந்த ஆண்டுகளில் இவர்களல்லாமல் வேறு யார் இப் பரிசுகளை வாங்கியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இந்தப் படைப்புகளைவிட, பரிசு பெற்றவர்களின் படைப்புகள் எப்படிப்பட்டது என்று பார்க்க வேண்டும். தமிழ் எழுத்தாளர்களுக்கென்று ஒரு வலுவான அமைப்பு இல்லை என்பதே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம். அப்படி ஓர் அமைப்பை ஏற்படுத்த இப்போது முனைந்திருக்கிறோம். இந்த அமைப்பு, வருடா வருடம் சாகித்திய அகாதெமி, பாரதீய பாஷா பரிஷத், ஞானபீடப் பரிசுகளுக்குச் சரியான நபர்களை சிபாரிசு செய்ய வேண்டும். தமிழ் மொழி கவனிக்கப்படுவதற்கு, இது ஒரு உபாயமாக இருக்கலாம். ○



• அசோகமித்திரன்



• இந்திரா பார்த்தசாரதி



• பிரபஞ்சன்

பேட்டி: **துளசி**

அதற்குப் பிறகு அதுவே கன்னடத்தில் மேடை வடிவமும் பெற்றது. இப்போது தூர்தர்ஷனுக்காக 'கனூரு ஹெக்கததி' என்ற நாடகத்தை இயக்கி வருகிறார்.

"சிறந்த கன்னட நாடகாசிரியர் என்று பாராட்டப்படுவதில் எனக்குத் திருப்தியில்லை. சிறந்த உலக நாடகாசிரியர்களுள் ஒருவனாக நான் ஆகவேண்டும்" என்று கூறும் கிரிஷ் கர்னாடின் வாழ்நாள் கனவு, அவரது தாயாரின் வாழ்வை மையமாக வைத்து ஒரு நாடகம் எழுதுவது!

"சிறு வயதிலேயே விதவையானவர் என் தாய். ஆனால் அக்கால வழக்கப்படி வீட்டோடு முடங்கிவிடாமல், நர்ஸாகப் பணியாற்றினார். தன்னுடன் பணிபுரிந்த ஒரு டாக்டரை மறுமணமும் செய்து கொண்டு அக்காலத்தில் பெரும் புரட்சி செய்தவர். என் 'கனவு நாடகத்துக்கு' என் தாய்தான் இன்ஸ்பிரேஷன்" என்கிறார் கிரிஷ். ○

— **குல்லூ**

குட்டிக் கார் ராஜ்ஜியம்!

'கப்பல் கார்'களுக்கு இருந்த மவுசு குறைந்துபோய் 'சின்னக் கார்'களுக்கான டிமாண்ட் கூடி வருகிறது. வருங்காலத்தில் இந்த வாமன வடிவம்தான் இந்திய கார்த் தொழிலின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கி விட்டன.

ஸென், மாடிஸ், சான்ட்ரோ, இன்டிகா என்று மாதத்துக்கொன்றாக சின்னக் கார்கள் அறிமுகமாகி, இந்திய மக்களைத் திக்கு முக்காட வைப்பதன் பின்னணி இதுதான்:

பல லட்சங்கள் கொடுத்து ஒரு காரை வாங்கும் பணநிலையோ, மன நிலையோ இப்போது இல்லை. எனவே இரண்டிலிருந்து மூன்று லட்சத்துக்குள் வாங்கி விடக் கூடிய குட்டிக் கார்களின் பக்கம் பார்வை திரும்பியிருக்கிறது.

கார் தயாரிப்பு நிறுவனங்களில் பல தவணை முறைத் திட்டங்களுக்கும் ஏற்பாடு செய்கின்றன. "மாசம் நாலாயிரம்தானே, நான் சம்பாதிக்கலேன்னு நினைச்சுக் கிட்டு என் சம்பளத்தை அப்படியே தவணைக்குக் கட்டிடலாம்" என்று கூறும் இல்லத்தரசிகளின் எண்ணிக்கையும் அதிகமாகி விட்டதாம்.

முன்பெல்லாம் ஒரு காரை வாங்கினால் அதைப் பன்னிரண்டு வருடங்களுக்காவது ஓட்டுவார்கள். ஆனால் இப்போது ஏழு வருடங்களானாலே, விற்க வேண்டிய நிலை. இல்லையென்றால் சர்வீஸிங்கிற்கும், உதிரி பாகங்களுக்கும் நிறைய அழ வேண்டியிருக்கிறது. எனவே இப்போது புதிதாக ஒரு சின்னக் காரை வாங்கத் துடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. இன்னும் "டீ.வி, ப்ரிஜ் மாதிரி, பழைய காரைக் கொடுத்துவிட்டுப் புதிய காரை எடுத்துச் செல்லுங்கள்" என்று எந்த நிறுவனமும் ஏலம் விடவில்லையென்றாலும், இதற்கென்றே உள்ள மார்க்கெட்டில் பழைய காரை ஏதோ ஒரு விலைக்குத் தள்ளி விட முடிகிறது. (அதை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து பாகங்களை விற்றுப் பணம் பண்ணிவிடுவார்கள்.)

காரின் விலை மட்டுமல்ல, எரிபொருள் சிக்கனம் - மற்றும் பார்க்கிங்குக்கு எளிதானது என்பவையும் சின்னக் கார் மீது மையல் கொள்ளக் காரணங்களாக இருக்கின்றன.

நம் நாட்டைப் பொறுத்தவரை இந்த வகையில் முன்னோடியாக இருந்து, பெரும் வெற்றி பெற்ற நிறுவனம் மாருதி உத்யோக். சஞ்ஜய் காந்திக்கு அவமதிப்பைத் தேடிக் கொடுத்த அரசியல் நிழல்களை விட்டு விட்டால், இது ஒரு தீர்க்கதரிசனமான முயற்சி. இப்போது சுமார் 85 சதவீதம் இந்தியாவிலேயே உருவாகும் பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது 'மாருதி 800' (800 சிசி என்ஜின் கொண்டது). கியர் பாக்ஸ் போன்ற ஓரிரு ஐட்டங்கள் இன்னமும் ஜப்பான் 'சுசுகி'யின் கைப்பிடியில் உள்ளன.

எந்தப் போட்டியுமில்லாமல் ராஜ பாட்டையில் சென்று கொண்டிருந்த மாருதிக்கு இப்போது கடும் போட்டி. இதை உணர்ந்துகொண்டு 'ஸென்' என்ற மாடலை, இந்திய உயரதிகாரிகளை மனத்தில் கொண்டு வெளிக் கொண்டு வந்தது மாருதி. பிறகு ஐரோப்பாவில் 'சுசுகி அல்டோ' என்ற பெயரில் விற்கப்படும் அதே காரை 'ஸென் வி.எக்ஸ்' என்ற பெயரில் இங்கு ஓடவிட்டிருக்கிறது. இதன் டீசல் வடிவமும் இப்போது தயார்.



• காந்தி

மாருதி 800ல் காணப்படாத பல சௌகரியங்களைச் சுட்டிக் காட்டித் தங்கள் அறிமுகங்களை நிலை நிறுத்திக் கொள்ளத் துடிக்கின்றன வெளிநாடுகளிலிருந்து வந்து



இங்கு தங்கள் கடையை விரித்திருக்கும் நிறுவனங்கள்.

''மாருதி கார்களில் ஏ.ஸி.யை ஆன் செய்தவுடன் வண்டியின் இன்ஜின் சக்தி குறைவதை உணர முடியும். இது எங்கள் வண்டிகளில் கிடையாது. தவிர எங்கள் காரில் பின்புற சீட்டை மடிக்க முடியும். இதனால் பின்பக்கம் ஆட்கள் இல்லாத போது நிறைய லக்கேஜ்களை வைத்துக் கொள்ள முடியும்'' என்கிறார்கள் இவர்கள்.

'ஃபியட்' கார்களைத் தயாரித்து வந்த பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனம் இப்போது 'இன்ட் ஆட்டோ' என்ற பெயரில் 'யூனோ' என்ற சின்னக் காரைத் தயாரித்திருக்கிறது. 'ஓட்டுனரின் அருகிலுள்ள கண்ணாடியை ரிமோட்டினால் இயக்க முடியும். டீசல் வடிவம்; லிட்டருக்கு 17 கிலோ மீட்டர் தரும்' என்று இதன் சிறப்புகள் தொடங்குகின்றன.

தென் கொரியா கார் நிறுவனங்களில் ஜென்மப் பகைவர்களாக விளங்கும் தேவூ மற்றும் ஹுண்டாய் நிறுவனங்கள் இங்கும் ஒரே சமயத்தில் தங்களது டினோசர் கால்களைப் பதித்திருக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் கொரியாவில் தேவூவின் 1000 சிசி காருக்குதான் மற்ற எதையும்விட அதிக டிமாண்ட். ஆனால் இந்தியாவில் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள 'மாடிஸ்' என்ற கார் மாடலின் என்ஜின் 800 சி.சி.தான். இப்போதைய நிலவரப்படி மாடிஸை விட சான்ட்ரோ ஹுண்டாயின் விற்பனை நிலவரம் சற்று முன்னணியில் இருக்கிறதாம்.

ஹுண்டாய் நிறுவனத்தின் ஏ.பி. காந்தி, தங்கள் மாடலிலுள்ள சிறப்புப் பாதுகாப்பு விஷயங்களை அடிக்கோடிட்டுக் காட்டினார். ''எதிரில் வரும் வண்டியோடு வேகமாக மோதும்போது, ஸ்டீயரிங் மார்பில் விசையுடன் மோதுவதால், காரோட்டி இறந்து போவதுண்டு. ஆனால் சான்ட்ரோவில் 'மடியக்கூடிய ஸ்டீயரிங்' பொருத்தியிருக்கிறோம். விபத்து ஏற்பட்டால் ஸ்டீயரிங் மடிந்து உட்பக்கம் சென்று விடும். இதனால் காரோட்டிக்கு ஏற்படும் பாதிப்பு பெருமளவு தடுக்கப்பட்டு விடுகிறது'' என்றார்.

தயாரிப்பாளர்கள் பலவிதங்களில் இந்திய



"ஆச்சர்யமாயிருக்கே! மாமியார், மருமகள் இருவரும் எப்படி ஒரே சமயத்துல செத்தாங்க?"

"முதல்ல மாமியார்தான் இறந்தாங்க. அந்த சந்தோஷ அதிர்ச்சில ஹார்ட் அட்டாக் வந்து மருமக அவுட்!"

– சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

வாடிக்கையாளர்களை மயக்கப் பார்க்கிறார்கள். முக்கியமாக 'இந்திய சாலைகளுக்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது' என்று அறிவித்துக் கொள்வதில். முதுகோடு வளைந்து இதம் கொடுக்கும் இருக்கைகள். 'பவர் ஸ்டீயரிங் (வண்டியைத் திருப்பும்போது ஓரளவு அழுத்தத்தைக் கொடுத்தாலே போதும். உள்ளே இருக்கும் திரவம் அதிகப்படி அழுத்தத்தை உண்டு பண்ணி காரோட்டியின் வேலையை எளிதாக்கும்), 360 டிகிரி வரை பின்புலத்தைத் தெளிவாகக் காட்டக் கூடிய கண்ணாடி, அதிர்ச்சிகளை அனாயாசமாக இழுத்துக் கொள்ளும் சஸ்பென்ஷன் – இப்படி விதவிதமாகத் தங்கள் சிறப்புகளை அள்ளி வீசுகிறார்கள்.

இந்த விஷயங்களிலெல்லாம் மாருதி அவ்வளவு ஸ்ட்ராங் இல்லைதான். என்றாலும் வேறு இரண்டு கோணங்களில் இப்போதைக்காவது அதற்கு இணை வேறு எதுவுமில்லை. மற்ற எந்த ப்ராண்டையும்விட குறைந்தது ஐம்பதாயிரம் ரூபாயாவது விலை குறைவு அது. அது மட்டுமல்ல; திருப்திகரமான, தேசம் முழுவதும் பரந்து விரிந்துள்ள மாருதியின் சர்வீஸ் ஸ்டேஷன்கள் அதற்குப் பெரும் பலம். போட்டிகளை சந்திக்கும் விதமாகத் தனது தயாரிப்புகளின் விலையைக் கணிசமாகக் குறைத்துள்ளது அது. தவிர தனது சர்வீஸிங் கட்டணத்தை 130 ரூபாயிலிருந்து எழுபது ரூபாயாகவும் இறக்கிக் கொண்டுள்ளது. மற்ற தயாரிப்புகளோடு ஒப்பிடும்போது உதிரி பாகங்களின் விலையும் கம்மிதான்.

என்றாலும் மாருதிக்குப் போட்டி வெளிநாடுகளிலிருந்து மட்டுமல்ல, உள்நாட்டிலேயே உருவாகி வருகிறது. ரதன்லால் டாட்டா தமது கனவுத் தயாரிப்பான 'இன்டிகா'வை அடுத்த மாதக் கடைசியில் வெளிக் கொண்டு வர இருக்கிறார். "இந்தியாவிலேயே முழுக்க முழுக்கத் தயாரானது" என்று இன்டிகாவை விளம்பரப்படுத்துகிறார். ஆயிரக்கணக்கானோர் புக்கிங் செய்திருக்கிறார்கள். இவர்களில் எவ்வளவு பேர் இதைத் தங்கள் சொந்த உபயோகத்துக்கு வாங்கப் போகிறார்கள். எவ்வளவு பேர் சூதாடும் நோக்கத்தில் (டிமாண்ட் இருந்தால் அதிக விலைக்கு உடனே விற்று விடலாம்) புக் செய்திருக்கிறார்கள் என்பது புரியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன மீதி நிறுவனங்கள்.

ஆனால் உள்ளூர்க் கார்களுக்குக் 'கிடைக்கலாம்' என்று எதிர்பார்க்கப்படும் சில சலுகைகள் வெளிநாட்டுப் போட்டியாளர்களை கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இன்டிகாவின் விலை அறிவிக்கப்பட்ட பிறகு, மகாராஷ்டிர அரசு பூனாவில் தயாராகும் உதிரிப் பொருள்களுக்குச் சில வரி விலக்குகளை அளித்திருக்கிறது. இதில் பெரும்பயன் பெறப்போவது டாட்டாவின் 'டெல்கோ'தான். தவிர, வெளிநாட்டு கார்களின் பாகங்களுக்கு ஏற்கெனவே உள்ள இறக்குமதி வரி தவிர, சுங்க வரியும் அவற்றின் மீது விதிக்கப்படும் என்ற வதந்தி வேறு நிலவ, "இதுதான் தாராளமயமாக்கலா?" என்ற கசப்புணர்வும் தோன்றியிருக்கிறது, இங்கு வேர்விட நினைத்துள்ள வெளிநாட்டு கார் நிறுவனத்தாரிடையே.

"இந்திய சாலைகளை மனத்தில் கொண்டு தயாரிக்கப்படுவதாக" சொல்லிக் கொள்ளும் இந்தக் கார்கள் எக்கச்சக்கமாக வாங்கப்பட்டால், சாலை நெரிசல் என்னவாகும் என்ற நினைவுதான் பயமேற்படுத்துகிறது.

— ஜி.எஸ்.எஸ்.

அப்புறம் என்ன ஆச்சு?

அடுத்த வாரம் இடம் பெறும்.

இடம் பெறப்போவது: 'வாரியாரின் முருகர் விக்கிரகம்'

குறையொன்றுமில்லை

2

முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்





மஹரிஷிகள் வகுத்து கானம் பண்ணிய நாமங்களே சஹஸ்ரநாமங்கள் என்றேன். அதை விட்டு விட்டு வேறு இடத்துக்குப் போனால் பிரயோஜனம் உண்டா..?

ஒருத்தன் ரிஷிகேசத்தில் கங்கா நதி தீரத்திலே நின்றுகொண்டிருக்கிறான். ரொம்ப தாகம் அவனுக்கு. கங்கை பிரவாகமாக ஓடுகிறது.. எடுத்து தீர்த்தத்தைப் பருக வேண்டாமா..? அவ்வளவு தாகமுடையவன் கங்கைக்குப் பக்கத்திலேயே கிணறு வெட்ட ஆரம்பித்து விட்டான்.

"என்ன பண்ணுகிறாய்?" என்றார்கள்.

"கிணறு வெட்டுகிறேன்.."

"எதற்கு..?"

"தாகம்.. தீர்த்தத்துக்கு.."

இதோதான் கங்கை ஓடுகிறதே.. அதைத் திரும்பிப் பார்க்காமல் கிணறு வெட்டுவதா..?"

சஹஸ்ரநாமத்தை விட்டு விட்டு வேறு எதையோ பண்ணுகிறேன் என்றால் அது கங்கைக் கரையிலே கிணறு வெட்டுகிற மாதிரிதான்.

இந்த சஹஸ்ரநாமத்தின் ஆயிரம் திருநாமங்களும் வேதாக்ஷரங்கள் எப்படிக் கோர்வையாக இருக்கிறதோ, அப்படியே கோர்வையாக ஒன்றுக்கொன்று இசைந்து வருகின்றன.

வேதத்திலே கிரமப்பாதம் என்பார்கள் - எப்படி மனிதர்கள் நடக்கிறார்களோ, அப்படி— மனிதன் எப்படி நடக்கிறான்...? ஒரு காலைத் தூக்கி வைக்கிறான் . அப்புறம் இந்தக் காலைக் கொண்டுபோய் அதோடு சேர்க்கிறான். மறுபடியும் அடுத்த காலைத் தூக்கி வைத்துவிட்டு ஊன்றிக்கொண்டு அப்புறம் இன்னொரு காலை எடுத்துச் சேர்க்கிறான். அந்த மாதிரி பதங்கள் இசைந்து வருகின்றன.

விச்வம் என்றால் விச்வம் - விஷ்ணு: விஷ்ணு - வஷட்கார:; வஷட்கார: - பூதபவ்ய பவன் நாத: - இப்படிச் சொல்ல வேண்டும். ஒன்றுக்கொன்று சம்பந்தம் கொண்டு பூர்வாபர விருத்தம் இல்லாமல் அர்த்தம் சொல்ல வேண்டும். பூர்வாபர விருத்தம் என்றால், முன்னுக்குப் பின் முரணான அர்த்தம்.... அப்படி வரும்படி சொல்லக்கூடாது. ஆனால் சஹஸ்ரநாமத்திலே எல்லாமே தொடர்ச்சியாக வருகிறது. அதனாலே பூர்வாபர விருத்தத்துக்கே இடமில்லை இங்கே... அப்படி அந்நியோன்யமான வலைப்பின்னல் - முத்துக்கள் கோக்கப்பட்ட மாதிரி அழகாக அந்த சப்தங்கள், நாமாக்கள் அமைந்திருக்கின்றன. அதை அனுபவித்து அனுபவித்து உட்கார்ந்து ஆராய வேண்டும். எத்தனை நேரம் எடுத்துச் சொன்னாலும் அவரவர் அனுபவிக்கிறபோது ஏற்படக்கூடிய ஆனந்தத்தை எடுத்துக் காட்ட முடியாது. அந்த நாமாக்களோடு சேர்ந்து இழைகிறபோது ஏற்படக் கூடிய அர்த்தானு சந்தானம் - அதிலே கிடைக்கிற அர்த்தம் - ஒரு நாமாவோடு இன்னொரு நாமாவைச் சேர்க்கிறபோது ஏற்படக்கூடிய அர்த்த விசேஷம்... ரொம்ப உயர்வானது.

விச்வம் என்று சொல்லும்போது கிடைக்கக்கூடிய அர்த்தம்; விச்வம் விஷ்ணு: என்று சொல்கிறபோது கிடைக்கக்கூடிய அர்த்தம் இவற்றைத் தனித்தனியே அனுபவிக்கலாம்.

விச்வம் விஷ்ணு: என்ற பதத்துக்கு அர்த்தம் சொல்கிறேன்.

யஜுர் வேத தைத்ரிய சம்ஹிதையிலே முதல் மந்திரம் வருகிறது. 43 பதங்கள் இருக்கின்றன அதிலே...

அது என்ன சொல்கிறது...?

மேயப் போகிற பசுக்களெல்லாம் சாயங்காலம் சௌக்கியமாகத் திரும்பி வர வேண்டும். அவை கிரஹத்துக்கு நிறைய பாலுடன் திரும்பி வர வேண்டும்.

நல்ல பலத்தையும் புத்தியையும் தரக் கூடிய, நிறைய பால் தரக்கூடிய, நிறைய கன்றுகள் ஈன்றக் கூடிய உயர்ந்த பசுக்கள் திரும்பி சௌக்கியமாக வர வேண்டும். அதை எந்த துர்தேவதையும் அடிக்காமல் சௌக்யமாக வந்து கன்றுடன் சேர்ந்து ஆனந்தமாக இருக்க வேண்டும். அதற்கு அருள்புரிய வேண்டும் என்று ஆரம்பத்திலேயே பிரார்த்தனை வருகிறது யஜுர் வேதத்திலே.

இதனுடைய விசேஷார்த்தத்தைச் சொல்கிறபோது, பசுக்களுக்கு மட்டுமின்றி, அவற்றின் பின்னே ஓட்டிச் செல்கிற மனிதனுக்கும் க்ஷேமத்தைக் கொடு என்று வேதம் வேண்டுவதாகச் சொல்லப்படுகிறது - நாலு கால் பிராணிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடு, இரண்டு கால் பிராணிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடு என்று பிரார்த்திக்கிறது.

இரண்டு கால் பிராணி என்று வேதம் நம்மைத்தான் சொல்கிறது - மனித வர்க்கத்தைப் பிராணியாக்கிச் சொல்கிறது.

ஆதி சங்கர பகவத்பாதாள் விவேக சூடாமணியிலே, ஆரம்பத்திலேயே சொல்கிறார் - ஜன்தூனாம் நர்ஜன்ம துர்லபம்.

ஜன்துக்களிலே நரஜன்மா கிடைப்பது கஷ்டம் என்கிறார்! நம்மையும் ஜந்து கோஷ்டியிலேதான் சேர்த்திருக்கிறார்!

ஆகையினாலே, வேதம் சொல்வது இதுதான்: இரண்டு கால் பிராணிகளுக்கும் நாலு கால் பிராணிகளுக்கும் மங்களம் உண்டாகட்டும்.

பசுவை, கொல்லத்தகாதது என்றும் குறிப்பிடுகிறது வேதம். அந்த சிந்தனைகூட வரக்கூடாது; மனசால்கூட நினைக்கக்கூடாது... அப்படிப்பட்ட பசுக்களெல்லாம் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்று சொல்கிற மாதிரி, இரண்டு கால் பிராணிகளான நாமும், காலையில் எழுந்திலிருந்து விசேஷமான கர்மானுஷ்டானங்களில் ஈடுபட்டிருக்கிறோம். சாயங்காலம் கிரஹத்தை நாடி வருகிறோம். எந்த துர்தேவதைகளும் நம்மை அடிக்காமல் நாம் திரும்ப வந்து சேர வேண்டும்.

துர்தேவதைகள் என்றால் துஷ்ட சித்தங்கள் என்றுஅர்த்தம். அவற்றிடமிருந்து இந்த ஆத்மாவைக் காப்பாற்ற வேண்டும். எவன் காப்பாற்றுவான்...? அந்த பகவான்தான்!

நம்மையும் ஒரு பசுப்பிராயமாக நினைத்துக் கொண்டு, துர்தேவதைகள் அடிக்காவண்ணம்;

அருள்வாக்கு



மதம் என்பது என்ன? ஆத்மாவுக்கு வந்திருக்கிற வியாதி தீருவதற்கு வைத்தியம் செய்வதுதான் மதம். ஒரு நோயாளிக்கு இன்ன வியாதி வந்திருக்கிறது, இது இன்ன மருந்தைத் தந்தால் சொஸ்தமாகும் என்பது வைத்தியனுக்குத் தெரியும். தங்களுக்கென்று ஒரு பொருளையும் தேடிக் கொள்ளாமல், பரமத்

தியாகத்துடன் லோககேஷமத்தையே நினைத்த ரிஷிகள், தர்ம சாஸ்திரக்காரர்கள் அப்படித் தந்திருக்கிற மருந்து தான் நமது சநாதன தர்மம். மற்ற தேசங்களில் வேறு வைத்தியர்கள் வேறு மதங்களை மருந்தாகத் தந்திருக்கிறார்கள். நம் உடம்புக்கு மருந்து தருகிற டாக்டரிடம் அந்த டாக்டர் அப்படி டிரீட்மென்ட் செய்கிறார், நீங்கள் இப்படிச் செய்கிறீர்களே!' என்றால் அவர் கேட்டுக் கொண்டிருப்பாரா? வைத்திய சாஸ்திரத்தில் பல தினுசுகள் உண்டு. ஒன்றில் கடும் பத்தியம் இருக்கும்; ஒன்று லகுவாக இருக்கும். ஒன்றில் மருந்து கசக்கும்; இன்னொன்றில் தித்திக்கும். இதையெல்லாம் ஒன்றாக்க வேண்டும் என்று சொல்லாமல் அவரவரும் எந்த வைத்திய முறையை மேற்கொள்கிறார்களோ அதையே விடாமல் பின்பற்றினால், எந்த முறையிலும் சௌஸ்தம் அடையலாம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அதாவது காம க்ரோத லோப மதமாத்சர்யாதி கெட்ட குணங்கள் நம்மிடம் வராமல், சாத்விக குணத்தோடு இருந்து, நல்ல தேஜஸ் புஷ்டியுடன் கர்மானுஷ்டானங்களைப் பண்ண வேண்டும் என்று விசேஷார்த்தம்.

ராமாயணத்திலே சொல்லியிருக்கிற மாதிரி, பிராதவர் காலத்திலேயும் சாயங்காலத்திலேயும் கூடியிருந்து குளிர்ந்து பகவத் குணத்தை அனுபவிக்க வேண்டும். அதிலே முக்கியமாக ஒரு அவலம்பனம் அவசியம். அரை மணி ஓரிடத்திலே ஒருத்தர் உட்கார்ந்து பகவத் தியானம் பண்ண வேண்டுமானால் ஒரு அவலம்பனம் - எல்லோரும் உட்காருவதற்கு ஒரு பற்று - இருக்க வேண்டும். அது எது என்று கேட்டால், தீர ஆராய்ந்து பார்த்த பெரியோர்கள் சொல்கிறார்கள் - விஷ்ணு சஹஸ்ரநாமமே அப்படிப்பட்ட அவலம்பனம் என்று.

ஏனென்றால் எல்லோரும் உட்கார்ந்து பாராயணம் பண்ணுவதற்கு ஏற்றது. இடத்தை விட்டு எழுந்து போகாமல் செய்யக் கூடியது அது.

ஒவ்வொரு கிரஹம்தோறும் உட்கார்ந்து சஹஸ்ரநாம பாராயணம் பண்ணினால், எந்தெந்த கிரஹத்திலே இந்தப் பாராயணம் நடக்கிறதோ, அந்த கிரஹங்களிலெல்லாம் சர்வ திங்குகளும் நீங்கி விடும். எவ்வளவு கெடுதல்கள் இருந்தாலும், கலகங்கள் இருந்தாலும் சண்டை இருந்தாலும் அதையெல்லாம் போக்கி விடும்.

வாமன புராணத்திலே சொல்கிறபோது இது விளக்கப்படுகிறது:

நாம் விபத்து என்று நினைத்துக்கொள்வதெல்லாம் விபத்தே இல்லை... நித்தியம் நாம் ஒரு விபத்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். 'இப்படி நடந்து போய்விட்டதே - இந்த மாதிரி ஆகி விட்டதே, அந்த மாதிரி ஆகி விட்டதே...' என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். அதெல்லாம் விபத்தே அல்ல என்று சொல்லி விட்டது புராணம் இங்கே!

அதேமாதிரி, எத்தனையோ சம்பத்துகளைச் சொல்கிறோம். ஐச்வர்யத்தைச் சொல்கிறோம். இது கிடைத்து விட்டது; அது கிடைத்து விட்டது என்று சந்தோஷிக்கிறோம். இதெல்லாம் சம்பத்தும் இல்லை...

சம்பத் என்கிற சப்தத்துக்கே என்ன அர்த்தம் என்றால், மேலும் பலதை நமக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

ஆகையினாலே வந்து அடைகின்ற சாதாரண செல்வமெல்லாம் சம்பத்து அல்ல! விபத்துகளெல்லாம் விபத்தும் அல்ல.

நாம் நினைக்கிற சம்பத்தும் சம்பத் அல்ல; விபத்தும் விபத்து அல்லவென்றால்... எதுதான் விபத்து...?

விபத் விஷ்ணு நஸ்மரணம்!

விஷ்ணுவை ஸ்மரிக்காமல் இருப்பது தான் விபத்து! அவனுடைய ஸ்மரணம் இல்லாமல் நாம் இருந்தால்...? அப்படியிருப்பவருக்கு ஒரு பெயர் வைத்திருக்கிறது உபநிஷத். என்ன பெயர் அது...?

'மூச்சு விடும் பிணங்கள்' என்று பெயர்!

ஆகையினாலே விஷ்ணுவை ஸ்மரிக்காமலிருப்பதுதான் விபத்து!

அப்படியானால் சம்பத் எது...?

சம்பத் என்பது நாராயண ஸ்ம்ருதி!


அந்த எம்பெருமானை சந்த தாரையாக அறுபடாமல் நினைத்துக் கொண்டிருக்கிற செயலிருக்கிறதே... அதாவது காதிலே அவன் நாம சப்தம் விழுந்துகொண்டேயிருக்கிறது, உள்ளுக்குள்ளே பகவானை நினைத்துக் கொண்டேயிருக்கிறார். இந்த பகவத் தியானமானது அறுபடாமலிருக்க வேண்டும். அந்த மாதிரி ஒருத்தருக்கு அமைந்துவிட்டதானால், (பிரஹலாதனுக்கு அமைந்தது இந்த சம்பத்) அதுதான் நாராயண ஸ்ம்ருதி என்கிற சம்பத்.

அதனால்தான் ஆசார்ய புருஷர்களெல்லாம் கையெழுத்துப் போடுகிறபோது நாராயண ஸ்ம்ருதி என்று எழுதுகிறார்கள். தங்களை மறந்து அவன் தியானத்தில் இருக்க வேண்டும் என்பதைக் காட்ட.

நாராயணனை நினைப்பதென்றால் பல நாமாக்களைச் சொல்லி, பல பேர் ஒன்றாக உட்கார்ந்து பாராயணம் பண்ணுகிறபோது சித்தமானது சுத்தியடைகிறது. அந்த இடமே உயர்ந்த பாவன தன்மை அடைகிறது...

(தொடரும்)

ஜெயித்த கதை!



நான் ஒரு நல்ல டேபிள் டென்னிஸ் ஆட்டக்காரனாவேன் என்று பள்ளி நாட்களில் பலர் நினைத்தார்கள். கிரிக்கெட் ஆட்டக்காரனாகவும் ஆகியிருக்கக்கூடும். இரண்டிலும் எனக்கு ஆர்வமும் பயிற்சியும் இருந்தது. ஒருவேளை ஓவியனாகவும் ஆகக்கூடும் என்று கருதினார்கள். ஓவியம் வரையும் திறமையும் கொஞ்சம் இருந்தது. பயிற்சியைத் தொடர்ந்திருந்தால் அது சாத்தியம்தான். அல்லது நடிகனாகவும் ஆகியிருக்கலாம். ஒரு அமெச்சூர் நாடகக் குழுவில் சேர்ந்து சில நாடகங்கள் நடித்திருக்கிறேன். பாடவும் தெரிந்திருந்த கூடுதல் தகுதி எனக்குச் சில சினிமா வாய்ப்புகளையும் பெற்றுத் தந்தது. இயக்குநர் கே. பாலசந்தர் அப்போது தயாரித்துக் கொண்டிருந்த மழலைப் பட்டாளம் படத்தில் என்னை நடிக்கக் கூப்பிட்டார். இயக்குநர் மகேந்திரன் தமது உதிரிப் பூக்களில் நடிக்கக் கூப்பிட்டும் என்னால் அதில் நடிக்க இயலாமல் போனது பற்றி இப்போதும் கொஞ்சம் வருத்தம் உண்டு. விருதுப் படமல்லவா அது?

விளையாட்டு வீரனில்லை. ஓவியனில்லை. நடிகனில்லை. மிருதங்க வித்வானாகவாவது ஆகியிருக்கலாம். சிறு வயதிலிருந்தே லய வாத்தியத்தின்பால் ஓர் இனம் புரியாத ஈடுபாடும் ஆர்வமும் இருந்தது எனக்கு. கும்பகோணம் ராஜப்பா ஐயரிடம் முறைப்படி மிருதங்கம் பயின்றிருக்கிறேன். ஆனால் அந்தத் துறையையும் ஒதுக்கி விட்டேன்.

பத்மா சேஷாத்ரியில் படித்தவன் என்பதால் செம்மையான ஆங்கில அறிவும் வாய்த்து, சுவாரஸ்யமாகக் கட்டுரைகள் எழுதவும் முடிந்தது. பிரபல நாளிதழ்களில் கொஞ்சம் எழுதியுமிருக்கிறேன். உலக நடப்புகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் உண்டு. ஒரு சிறந்த எழுத்தாளனாகவாவது ஆகியிருக்கலாம்; அதுவுமில்லை. நான் ஒரு கர்நாடக சங்கீதப் பாடகன்தான் என்று எனக்குள் தீர்மானமான முடிவை மேற்கொள்வதற்குள் இத்தனை கலைகளை ருசி பார்த்திருக்கிறேன்.

ஆனால், எது ஒன்றையும் மேலோட்டமாகப் பயில்வது என்கிற வழக்கமே இல்லை. ஆழம் தேடிப் போகும் குணம் இயல்பாக இருந்தது. அதையும் மீறி ஓர் இசைக் கலைஞனாகத்தான் ஆகவேண்டும் என்கிற தீர்மானம் உருவானது தெய்வ சித்தம், குருவருள், என் பெற்றோரின் இனிய லட்சியம்.

சொல்கிறார் விஜய் சிவா





என் தாயும் சரி; தந்தையும் சரி – இசையில் இயல்பான நாட்டம் கொண்டவர்களாக இருந்தார்கள். பயிற்சியும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் நடைமுறை வாழ்க்கை அவர்களை அத்துறையில் முழு மூச்சாக இறங்க விடாமல் திசை மாற்றி விட்டிருக்கிறது.

திருமணமானபோது, இருவருக்குமே இசையார்வம் இருந்து, முன்னுக்கு வர இயலாமல் போன சூழ்நிலை பற்றிப் பரஸ்பரம் அறிந்து கொண்ட போது, 'நம் சந்ததிகளையாவது இசைத் துறையில் சிறந்து விளங்கச் செய்வோம்' என்று உறுதி மேற்கொண்டிருக்கிறார்கள். இசை மட்டுமல்ல – சகல கலைகளிலும் பரிச்சயமும் பயிற்சியும் அவசியம் என்று அவர்கள் கருதியதால் தான் முன் சொன்ன அத்தனை கலைகளோடும் எனக்கொரு உறவு

கிடைத்தது.

நான்கு வயதில் நான் ராகங்களைக் கண்டுபிடிப்பேன் என்று என் பெற்றோர் சொல்வார்கள். என் தாய் பாடும்போது அதை நுணுக்கமாகக் கவனித்து, இடைவெளிகளை நிரப்பும் திறன் அப்போதே எனக்கிருந்ததாகக் கூறுவார்கள்.

வீட்டில் நிறைய ரெக்கார்டுகள் இருக்கும். அத்தனையிலும் மதுரை மணி பாடிய பிளேட்டை நான் தேடி எடுத்துப் போடச் சொல்லுவேன் என்பார்கள். எல்லாம் என் பெற்றோர் சொல்லக் கேட்டவைதான்.

அந்த வயதில் நான் பாடிய சிலவற்றைப் பதிவுசெய்து வைத்திருந்தார்கள். ஆதலால் பின்னாளில் நான் அவற்றைப் போட்டுக் கேட்ட போது ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது.

நாலு வயதில் பாடத் தொடங்கி விட்டேன் என்கிற ஒரே காரணத்தால் என்னை 'மழலை மேதை' என்று சொல்வதற்கில்லை. 'மேதை' என்கிற உயர்நிலைக்கு அப்போது என் சங்கீத ஞானம் நிச்சயம் இல்லை. ஆனால் மோசம் என்றும் சொல்ல முடியாத அளவு – சராசரிக்கும் மேலாக – இருந்தது என்பதைக் கண்டுகொண்டேன்.

சராசரிக்கு மேலாக அத்தனை சிறு வயதில் பாட முடிவதென்பது இறையருள். அதை வளர்த்துக் கொள்ள வேண்டிய கடமை இருப்பதை உணர்ந்தேன். என் பெற்றோரின் கனவுமல்லவா அது?

பத்மா சேஷாத்ரி பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலம் அது. நுண்கலைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு அந்தப் பள்ளி எந்தவித உதவியும் செய்யத் தயாராயிருந்தது. திருமதி ஒய்.ஜி.பி. கலையார்வமிக்க மாணவர்களை ஊக்குவிப்பது ஒன்றே வாழ்வின் முதன்மையான லட்சியம் என்பது போல் செயல்பட்டு வந்தார்.

ஒருநாள் பள்ளி பஸ் பிரேக் டவுன் ஆகி நின்று விட, மரத்தடியில் நின்று கொண்டிருந்த நான், பொழுதைப் போக்க 'ரூப் தேரா மஸ்தானா' பாடினேன். அந்த சினிமாப் பாடலைப் பாடிய விதத்தைக் கொண்டே என் திறமையை இனங்கண்டு சிறப்பு கவனம் தருமளவுக்கு அந்தப் பள்ளி கலை வளர்த்துக் கொண்டிருந்தது.

எத்தனை கலைஞர்கள்! பாடகர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்று ஏராளமானோர் அங்கிருந்து உருவானார்கள். ஆகவே, பள்ளிச் சூழ்நிலை எனக்கு மிகுந்த உற்சாகம் அளிப்பதாயிருந்தது.

1971-ம் ஆண்டு. இந்தியா – பாகிஸ்தான் போர் மூண்ட சமயம். போர் நிதி வசூலிக்கப் பள்ளியில் ஒரு கலைவிழா ஏற்பாடு செய்திருந்தார்கள். நான் பாடினேன்.

அந்த விழாவுக்குத் தலைமைதாங்க வந்திருந்த ஒரு ராணுவ அதிகாரி என் பாட்டைக் கேட்டபின், என்னைக் கூப்பிட்டுப் பாராட்டித் தம் பக்கத்தில் உட்காரச் செய்த காட்சி இன்னமும் என் கண்களில் நிற்கிறது.

அந்தச் சம்பவம் என்னுள் வேறொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. தேசபக்தி! 'நான் ஒரு தேச பக்தன்' என்று சொல்லிக் கொள்வதில் எப்போதும் பெருமிதம் கொள்பவன். வேறெதை விடவும் தேசத்தை விரும்பும் மனத்தை அந்தச் சம்பவம் எனக்குத் தந்தது. பின்னாளில் (1991) ஒரு முழு நீள தேசியக் கச்சேரி – தேசபக்திப் பாடல்களாகவே முழுவதும் பாடி – நடத்தும் வேட்கை உருவானதற்கும் அதுவே காரணமாயிற்று.

எழுபத்தேழாம் வருடம் பிரபல சங்கீத வித்வான் டி.கே. ஜெயராமனைச் சந்தித்து என் அம்மா, நான் பாடிய ஒரு கேஸட்டைக் கொடுத்து, "நல்லா பாடறான். நீங்க இதைக் கேட்டு, அவனை சிஷ்யனா சேர்த்துக் கணும்" என்ற வேண்டுகோளை முன் வைத்து விட்டு வந்தார்.

அப்போது எனக்கு ஒன்பது வயதுதான். டி.கே. ஜெயராமனிடம் எப்படியும் சேர்த்து விட வேண்டும் என்று பெற்றோர் உறுதியாக இருந்தாலும் அவர் தரப்பிலிருந்து பதிலே இல்லை!

கொஞ்ச காலம் பொறுத்திருந்தோம். என் தந்தைக்குக் கொஞ்சம் நம்பிக்கை தளர்ந்து போய், "அவர் ரொம்பப் பெரிய வித்வான். நாம் வேற யாரிடமாவது முயற்சி பண்ணலாமே?" என்று சொன்னார்.

ஆனால் அம்மா மிக உறுதியாக இருந்தார். எப்படியும் டி.கே.ஜெயிடம் என்னைச் சேர்த்து விடுவது என்பதில் ஆழ்ந்த நம்பிக்கையும் கனவும் கொண்டிருந்தார் அவர்.

"இன்னும் ஒருதரம் கேட்டுப் பார்ப்போம்!" என்று அவர் சொல்லவே, புறப்பட்டுச் சென்றோம்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஜனவரி 26, 1977 மாலை நேரம். டி.கே. ஜெயராமன் அவர்களின் வீட்டு ஹாலில் காத்திருந்தோம். அவர் சாப்பாட்டு மேசை அருகே அமர்ந்திருந்தார். வீட்டில் 'போர் மேகம்' சூழ்ந்திருந்தது!

டிபன் சரியில்லை. முதல் தரமான கலைஞரல்லவா? உணவு முதற்கொண்டு சகலமும் அவருக்கு முதல்தரமாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் நான் சென்றிருந்த வேளை பார்த்து மாமியின் டிபனில் அவருக்கு மகா அதிருப்தி. முற்றிலும் 'மூட்' இழந்தவராகக் கடுமையாகத் திட்டிக் கொண்டிருந்தார். கோபக் குரல் உள்ளிருந்து வந்து, காத்திருந்த எங்கள் செவிகளில் மோதிக் கொண்டிருந்தது.

'சரி. அவ்வளவுதான். இன்று அவருக்கிருக்கும் மனநிலையில் நம்மை சிஷ்யனாகச் சேர்த்துக் கொள்வதெல்லாம் நடக்காத காரியம்' என்று தீர்மானமே செய்து விட்டேன்.

திரும்பத் தயாரான சமயம் - சற்றும்



"உங்க ஆபீஸ்ல லஞ்சம் படிப்படியா இறங்குதா... எப்படி?"

"லஞ்சம் வாங்கற செக்ஷனை 3-வது மாடில இருந்து 2-வது மாடிக்குக் கொண்டு வந்து, இப்ப வாடிக்கையாளர் நலன் கருதி கிரவுண்ட் ஃப்ளோருக்கே மாத்திட்டோம்!"

— சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

குறையாத அதே கோபத்துடன் எழுந்து விறுவிறுவென்று ஹாலுக்கு வந்தவர், என்னிடமோ என் பெற்றோரிடமோ ஒரு வார்த்தை பேசவில்லை. நேராக வந்து என் முன் உட்கார்ந்தவர், "கணபதி..." என்று பாட ஆரம்பித்து விட்டார். "ம். பாடு!" என்று எனக்குக் கட்டளை வந்தபோது நம்பவே முடியவில்லை.

கடவுளே! சொல்லித் தர ஒப்புக் கொண்டு விட்டாரா?

எதையும் யோசிக்க அவர் அவகாசமே தரவில்லை. அந்தப் பாட்டு முழுவதும் முடிந்த பிறகுதான் அவர் என்னை விசாரிக்கவே ஆரம்பித்தார். 'ஏதாவது பாடு' என்றார். நான் 'எவரிபோதனை' வர்ணத்தை எடுத்தேன். பிசிறில்லாமல் தொடங்கி, நிதானமாக எடுத்து, மூன்று காலத்திலும் பாடி முடித்தது தான் தாமதம்.

"இவளே! ஜெயா! சுகன்யா! எங்க போயிட்டீங்க? வாங்கோ எல்லாரும்! என்னமா பாடறான் பாருங்கோ!" என்று உற்சாகமாக வீட்டிலிருந்த அத்தனை பேரையும் உரக்க அழைத்து, ஒரு குழந்தை போலக் குதூகலித்தார்.

சற்று நேரம் முன்பு டிபன் சுவை கூடவில்லை என்பதற்காக ருத்திரதாண்டவம் ஆடியவரா இவர்? என் கண்களையே நம்ப முடியவில்லை. மேதைகள் எப்போதும் இப்படித்தான் போலும்!

நான் அவரிடம் சேருவதென்பது உறுதியாகி விட்டது. என் தந்தை என்ன செய்வது என்பது புரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்தார். பிறகுதான் தந்நிலை பெற்றவராக ஓடிப் போய் வெற்றிலை பாக்கு, பழம் வாங்கி வந்தார்.

எத்தனை பெரிய மேதை! அவரிடம் சேருவதென்பது சுலபமான விஷயமா? நான் பாடிக் காட்டிய ஒரு வர்ணம் எனக்கு அந்த வாய்ப்பைப் பெற்றுத் தந்ததென்றால், அதனை எனக்கு முன்னதாகப் பயிற்றுவித்த என் அம்மாவை எண்ணிப் பார்த்தேன்.

சொல்லிக் கொடுப்பதைக் கூர்ந்து கவனிப்பதுதான் வெற்றியின் முதல் படி என்பது என் எண்ணம்.

"நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். இந்த நிமிஷத்துலேருந்து இவன் என் சிஷ்யன். இவனை ஒரு வித்வானா ஆக்க வேண்டியது என் பொறுப்பு!" என்று என் தந்தையிடம் சொன்னார் டி.கே.ஜெ. அந்தக் கணம்தான் என் இலக்கு எதுவென்பதை எனக்குச் சுட்டிக்காட்டியது. இசையில் மட்டுமே தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்தேன்.

பதினான்கு வருடங்கள். அவரிடம் நான் சிஷ்யனாக இருந்து பயின்ற ஆண்டுகளில் ஏராளமானவர்கள் வந்து பயின்று சென்றார்கள். ஒவ்வொருவருக்கும் அவர் ஒரு 'போதனாமுறை' வைத்திருப்பார்.

புதிதாக ஒரு பெண் வந்து பாடிக் கொண்டிருப்பாள். ரொம்ப சாதாரணமான சங்கீதமாகத்தான் காதில் ஒலிக்கும். ஆறு மாதம் கழித்துத் தற்செயலாக அதே பெண் பாடுவதைக் கேட்க, எனக்குத் தூக்கி வாரிப் போடும். ஒரு முழுமையான வித்வானுக்குரிய சகல லட்சணங்களுடன் அப்போது

– அவள் பாடிக் கொண்டிருப்பாள். என்ன செய்தார்? எப்படி முடிந்தது இந்த ரச வாதம்? என்று வியக்க முடியுமே தவிர, அவரது தொழில்நுட்பம் பிடிபடாது.

வாரத்துக்கு மூன்று, நான்கு நாட்கள் வகுப்பு இருக்கும். என்னிடம் அவர் கடைபிடித்த போதனை முறை அலாதியானது. அவர் பாடுவார். பாடிக் கொண்டே இருப்பார். கவனமாகக் கேட்டு, சூட்சுமங்களைப் பிடித்துக் கொண்டு நான் பாடுவேன். அவர் கேட்பார். தவறுகளை உடனுக்குடன் சரி பண்ணி விடுவார். ஆங்காங்கே அலங்காரம் பண்ணி விடுவார். பாடும்போதே மெருகேற்றிக் காட்டுவார். துலக்கித் தோரணம் கட்டுவார்.

பொறுமை என்றால் அப்படியொரு பொறுமை. ஒரு மனிதராக அவருக்குப் பொறுமை என்பதே கிடையாது. பயங்கரமான கோபக்காரர். சிம்மம்தான்! ஆனால் குருவாக, சிஷ்யன் எதிரே அமர்ந்து விட்டால் எங்கிருந்துதான் அப்படியொரு பொறுமையும் காருண்யமும் ஓடி வந்து ஒட்டிக் கொள்ளுமோ? கடிந்து கொள்ளவே மாட்டார். தவறு செய்தாலும் திரும்பத் திரும்பச் செய்தாலும் கனிவுடன்தான் திருத்துவார். ஒரு குரு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவரைத் தவிர என்னால் வேறொரு உதாரணம் காட்ட இயலாது!

திரு. டி.கே. ஜெயராமனிடம் சேர்ந்த சில வருடங்களிலேயே பள்ளி மூலம் நான் கலந்து கொண்ட பல இசைப் போட்டிகளில் பரிசு வர ஆரம்பித்து விட்டது. பத்தாம் வகுப்பு படிக்கும் போது ஏராளமான போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு வாங்கினேன்.

நம் பாதை இதுதான் என்று இலேசாக வெளிச்சம் உருவாகி இருந்ததால் மிக கவனமாக ப்ளஸ் டூ போகும் போது அறிவியல் பிரிவைத் தவிர்த்து விட்டு, சற்றே சுலபமான 'காமர்ஸ்' குரூப்பில் சேர்ந்தேன். ப்ளஸ் டூ முடித்து, பிறகு பி.காம். முடித்த பின்தான் முழு நேர இசைக் கலைஞனாக மட்டுமே இருப்பது என்று தீர்மானித்தேன்.

அப்படித் தீர்மானித்ததற்கும் ஒரு காரணம் இருந்தது. மற்ற எந்தத் துறையைக் காட்டிலும் இசைக் கலைஞர்களுக்குக் கிடைத்த பாராட்டும் அத்துறையில் எனக்கு முன்னேறத் தெரிந்த வாய்ப்புகளும் மிக அதிகமாக இருந்தன.

எந்த ஒரு கலையானாலும் அதைப் பயின்று வெளிவருபவனின் முதல் தேவை, மக்கள் அங்கீகாரமே அல்லவா? அந்த அங்கீகாரம், இசைத் துறை பலருக்கு வழங்கியிருப்பதை கவனித்த பின்பே நான் அம்முடிவை எடுத்தேன். மிகத் தெளிவாக இருந்தேன். படித்து முடித்ததும் முழு நேர இசைக் கலைஞனாவது. உத்தியோகம் என்று ஒன்றை வைத்துக் கொண்டு, கலையைப் பொழுதுபோக்காக வைத்துக் கொள்வது ஏனோ எனக்குப் பிடிக்கவில்லை.

"என்னை ஏன் சார் அந்த வீட்டுல போய் இன்னைக்குத் திருடச் சொல்றீங்க?"

"உன்னை கையும் களவுமா பிடிக்கிறதா நான் இன்ஸ்பெக்டர்கிட்ட சவால் விட்டிருக்கேன் பக்கிரி!"

– சீர்காழி ரேவதி

இப்படிப்பட்ட தீர்மானமுடன் நான் இசைத் துறையில் இறங்க முடிவெடுத்த போது நான் அதுவரை சற்றும் யோசித்திராத ஒரு பிரச்னை பூதாகாரமாக வந்து சேர்ந்தது.

டீவி!

தொலைக்காட்சி விழுங்கி ஏப்பம் விட்ட நாடகம் உள்ளிட்ட பல நுண்கலைகள் இன்னும் எழுந்திருக்க முடியாமல் கஷ்டப்படுவதைப் பார்க்கிறோம். அன்று (80களின் தொடக்கம்) 'கலர் டீவி' புதிதாக வந்து சேர, தோதாக '82-ல் ஏஷியாட் விளையாட்டுப் போட்டிகள் அது இதென்று பல கண்கவர் நிகழ்ச்சிகள் அரங்கேற, மக்கள் டீவி போதையில் ஆழ்ந்து போயிருந்தார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் சபாக்களில் கச்சேரி ஏற்பாடு செய்யவே பயந்தார்கள். அப்படியே பிற நாட்களில் கச்சேரி இருந்தாலும் சேஷகோபாலன், சந்தானம், திருச்சூர் ராமச்சந்திரன் போன்ற பெரிய கலைஞர்களைத்தான் பாடக் கூப்பிடுவார்கள். இளம் கலைஞர்? வளரும் கலைஞர்? மூச்! ஓடியே போய் விடுவார்கள்.

அந்தக் காலகட்டத்தில் முழு நேரப் பாடகர்களாகக் களம்புகுந்து இந்தக் கஷ்டத்தை பரிபூரணமாக அனுபவித்தது சந்தானகோபாலனும், நானும். கச்சேரி என்றாலே சீனியர் வித்வான்கள்தான்! புதியவர்களைப் பாடவைப்பதெல்லாம் விஷப் பரீட்சை என்று பயந்தார்கள்.

ஒருபுறம் டீவியால் கச்சேரிகளுக்கு வரு



[illegible] குறைந்து [illegible] வர, புதுமுக பாடுவதற்கு வாய்ப்புத் தரவே ஆளில்லாத நிலை. கண்ணைக் கட்டி, காட்டில் விட்டாற்போலிருந்தது எனக்கு.

என் திறமையின் மீது நம்பிக்கை இருந்தாலும், எனக்கான கதவுகளை நானேதான் எப்படியாவது முட்டி மோதித் திறந்தாக வேண்டும் என்கிற நிலை. யோசித்தேன்.

என்னைப் போலவே எத்தனை இளைஞர்கள் இப்படி வாய்ப்பில்லாமல் கஷ்டப்படுவார்கள்! அத்தனை பேரையும் ஒருங்கிணைத்து முயற்சி செய்தால் என்ன என்று தோன்றியது.

கல்லூரித் தோழர்களாக அமைந்த பல கலைஞர்களுடன் பேசிப் பார்த்ததில் இந்த யோசனைக்கு நல்ல வரவேற்பு இருந்தது தெரியவந்தது.

1985, ஆகஸ்ட் *5*-ம் தேதி YACM (Youth Association for Classical Music). பிறந்தது.

தற்செயலான ஒரு கற்பனையில் உதித்த எண்ணம், ஓர் அமைப்பாக உருவான போது, இசையுலகில் அது பெரும் புரட்சி ஏற்படுத்தும் என்று எண்ணிக் கூடப் பார்க்கவில்லை! எத்தனை இளைஞர்கள்! இளம் பெண்கள்! அத்தனை பேரும் திறமைசாலிகள்! வந்து குவிந்தார்கள் YACMல். எங்களுக்கான வாய்ப்புகளை நாங்களே உருவாக்கிக் கொண்டோம். இசையுலகில் இளையதலைமுறையினருக்கென்று ஒரு சிறப்பிடமும் அங்கீகாரமும் ரசிகர் வட்டமும் உருவாக அந்த அமைப்பே காரணமாயிற்று. கச்சேரிகள் நடத்தப் பணமின்றித் தவிக்கிறார்களா? வணிக நிறுவனங்கள் - விளையாட்டு நிகழ்ச்சிகளைப் போல இதனையும் ஸ்பான்ஸர் பண்ணலாமே என்று நினைத்தோம்.

முதன் முதலில் ஸ்பான்ஸர்ஷிப் என்கிற கான்ஸெப்டை இசையுலகுக்கு அறிமுகப்படுத்தியதே YACMதான்!

வாழ்க்கையில் எண்ணற்ற வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. நாம் அதற்காகக் காத்து நிற்பதில் காலவிரயம்தான் ஏற்படும். நமக்குச் சரியான வாய்ப்பு அமையாவிட்டால், வாய்ப்புகளை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்! வெற்றியின் அடிப்படை இதுதான் என்று தோன்றுகிறது.

'இன்றைய இளையதலைமுறையினருக்குக் கர்நாடக சங்கீதத்துடன் அறிமுகமே கிடையாது. அதனால்தான் யாரும் ரசிப்பதில்லை' என்றார்கள்.

'சரி; நாம் ரசிக்கக் கற்றுத் தருவோம்' என்று 'Build a Rasika' என்றொரு திட்டத்தைத் தொடங்கினோம். பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்துவது. இரண்டு மூன்று நிகழ்ச்சிகளுக்குப் பிறகு மாணவர்களையே நிகழ்ச்சி நடத்த ஊக்குவிப்பது. இது அபரிமிதமான பலனைக் கொடுத்தது. இப்போது சீஸனில் ஏராளமான இளைஞர்கள் கச்சேரி கேட்க வருவது கண்கூடான உண்மை!

நேர்மையான, யோக்கியமான ஓர் இலக்கு. எது குறித்தும் அச்சமில்லாமல் இயங்கும் துணிச்சல். இது போதும் என்று நினைக்கிறேன். என் குரு டி.கே.ஜெ., அவரது சகோதரி பட்டம்மாள் அவர்களின் பேத்தி காயத்ரியிடம் (நித்யஸ்ரீயின் சகோதரி) ஒருதரம் என்னைப் பற்றி இப்படிச் சொன்னாராம் : "அவனுக்கென்ன? தைரியசாலி! தைரியத்தாலேயே முன்னுக்கு வந்துடுவான்!"

தைரியம்தான் எனக்குத் துணை புரிகிறது. இந்த தைரியத்தை நான் பல தேசத் தலைவர்களின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொண்டேன்.

பாடுவதற்கு இணையாக, எனக்குப் பிடித்த இன்னொரு விஷயம், சுயசரிதங்கள் படிப்பது! காந்தியின் சுயசரிதம், விவேகானந்தரின் கட்டுரைகள், பரமஹம்சரின் வாழ்க்கை இவற்றைப் படிக்கப் படிக்க, என் தன்னம்பிக்கை வளர்வதை என்னால் உணர முடிகிறது!

தேடிப் பிடித்து நல்ல நூல்களைப் படிப்பதும் கற்றுத் தரும் குருவிடம் எதிர் கேள்வி இல்லாமல் கீழ்ப்படிதலும் துணிச்சலுடன் செயலாற்றுவதும்தான் எனக்குத் தெரிந்த வெற்றிப் பாதை. வாழ்வில் வெற்றி கண்ட பலரும் இந்தப் பாதையில்தான் பயணித்திருப்பதைக் கூர்ந்து கவனித்தால் யாராலும் உணர்ந்து கொள்ள முடியும்! ●


சந்திப்பு : **ஔரங்கசீப்**
படங்கள் : **ரவிசங்கரன்**

நடக்குமென்பார்



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

வார ஆரம்பத்திலேயே சுப நிகழ்ச்சிகளில் கலந்துக்குவீங்க. புதுப்புது ஒப்பந்தங்கள் போடற சான்ஸ் இருக்கு. தொழில் பண்றவங்களுக்கு நல்ல வளர்ச்சி இருக்கும். கவர்ன்மெண்ட் சமாசாரங்கள் இருந்தா உங்களுக்குச் சாதகமான பலன்களே கிடைக்கும். நிர்வாகப் பொறுப்புல இருக்கறவங்களுக்கு இங்கிரிமெண்ட், புரமோஷன் கிடைக்கலாம். சட்டம், போலீஸ் தொடர்பான விஷயங்களில் உஷாரா இருங்க. பண விஷயத்தில பிரச்னை இருக்காது. ஆனாலும் கடுமையா உழைக்க வேண்டியிருக்கும். அலைச்சலும் அதிகமாகவே இருக்கும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

குரு, ராகு, செவ்வாய் எல்லாமே பலமா இருக்கறதால நீங்க நினைச்சதெல்லாம் அப்படியே நடக்கும். உங்களைக் கவுக்க நினைக்கறவங்களெல்லாம் காணாம போயிடுவாங்க. ரியல் எஸ்டேட் மாதிரியான விஷயங்களில் ஆதாயம் கிடைக்கும். புதுசா எதையாவது வாங்குவீங்க. இயந்திரப் பணியாளர்கள், பொறியாளர்களுக்கு முன்னேற்றமான வாரம். வெளிநாட்டுத் தொடர்பு உள்ளவங்களுக்கு ஆதாயம் தெரியும். பண விஷயத்தில் பிரச்னை இருக்காது. சிலருக்குப் பயணத்தால் பயன் கிடைக்கும். ஆனாலும் அப்பாவின் ஆரோக்கியத்தில் கவனமா இருங்க.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்க திறமையும், சாதுர்யமான பேச்சும் பளிச்சுனு வெளியில தெரியும். காரணம், புதன், சுக்ரன், சனி மூணு கிரகங்களும் உங்களுக்கு அப்படியொரு அனுகூல சஞ்சாரத்தில் இருக்கு போங்க. கலைத் துறையில் உள்ளவங்களுக்குச் செழிப்பான வாரம்னே சொல்லலாம். வியாபாரிகளோடு, விவசாயிகளுக்கும் வளர்ச்சி உறுதி. கமிஷன் ஏஜெண்டுகளுக்குத் தாராளமாவே வரும்படி இருக்கும். கேளிக்கை, உல்லாசம், விருந்துன்னு ஜமாய்க்கவும் செய்வீங்க. ஆனாலும் கூடப்பிறந்தவங்களால சின்னத் தொல்லையோ, விரயமோ வரலாம். ஜாக்கிரதையா இருங்க.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

எல்லாமே இனிமையா முடியற வாரம் உங்களுக்கு. பக்கத்திலிருக்கறவங்களெல்லாம் உதவிக்கரம் நீட்டுவாங்க. பணம் ஒரு பிரச்னையாவே இருக்காது. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டத்துக்கான சான்ஸும் இருக்கு. மருத்துவம், இரசாயனம், தொழிலாளர்கள், விவசாயிகள் எல்லோருக்குமே வளர்ச்சியான வாரம். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷனிலும் லாபம்தான். வேலை தேடிக்கிட்டிருக்கிறவங்களுக்கு வேலை கிடைக்கறதுக்கான வாய்ப்புகள் பிரகாசமாவே இருக்கு. பெண்களுக்கு ஏகத்துக்கு உற்சாகம் தரும் வாரம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


எதிர்ப்புகளெல்லாம் அடங்கிப் போய், வெற்றிக் கனி பறிக்கப் போறீங்க. அரசுப் பணியாளர்களுக்கும், மத்த உத்தியோகஸ்தர்களுக்கும் புரமோஷன் சான்ஸ் இருக்கு. உங்க நிர்வாகத் திறமை பத்தி ஆபீஸே புகழ்ந்து தள்ளினாலும் ஆச்சரியப்படாதீங்க. வீடு, மனை விஷயங்களிலும் லாபம் வரும். சிலருக்குப் புது மனை புகுவிழா நடத்தற யோகமும் இருக்கு. அல்லது ஒரு ஃபிளாட் வாங்கறதுக்குப் பிள்ளையார் சுழியாவது போடுவீங்க. ஆனாலும் கொடுக்கல் வாங்கல் விஷயத்துல மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையாவே இருக்கறது தான் நல்லது.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் இருந்த சங்கடங்களெல்லாம் இந்த வாரம் ஜகா வாங்கிடும். தெரிஞ்சவங்க எல்லோருமே உதவிக்கு வருவாங்க. தொழில் துறையில் உள்ளவங்களுக்கு நல்ல அபிவிருத்தி காத்திருக்கு. வேலையில்லாதவங்களுக்கும் ஏதாவதொரு வேலை கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவியுயர்வு இருக்கு. பண விஷயத்தில் பிரச்னையே இருக்காது. கல்யாணம் மாதிரியான சுபகாரியங்கள் நடக்கறதுக்கான சந்தர்ப்பங்கள் கூடி வரும். பயணத்திலும் ஆதாயம் இருக்கு. ஆனாலும் பேச்சில் நிதானம் காட்டுங்க. கோபமே வரக்கூடாது. உஷார்!

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம்*



3-ம் பாதம் வரை)

வியாபாரிகள், கமிஷன் ஏஜெண்டுகளுக்கு நல்ல வாரம். கலைத்துறை மற்றும் ஆபீஸர் கிரேடுல இருக்கறவங்களுக்குப் புகழும் பாராட்டும் கிடைக்கும். சிலருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கவும் சான்ஸ் இருக்கு. பெண்களுக்கு புடைவை, நகைன்னு வாங்கற யோகம் இருக்கு. கூடவே வீட்டுக்குத் தேவையான பொருள்களையும் வாங்குவீங்க. அதே சமயம், அலைச்சல் அதிகமாவே இருக்கும். எதுவானாலும் பதற்றப்

நடக்கும்!

பட்டாம இருக்கணும். வர வேண்டிய பணம், சமயத்துல வந்து சேராமலும் போகலாம்; அதனால சிக்கனம் அவசியம்.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*



வெற்றிப் பாதை தெரியற வாரம் உங்களுக்கு. வேலையில்லாதவர்களுக்கும் ஒரு வழி புலப்படும் வாரம். பலருக்குப் பதவியுயர்வு உறுதி. பண விஷயத்தில் அபிவிருத்தி தெரியும். ஸ்பெகுலேஷனிலும் லாபம் உண்டு. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டமும் அடிக்கலாம். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான அஸ்திவாரம் போடுவீங்க. சிலர் வீட்டில் குழந்தை பிறக்கும். புதன் கொஞ்சம் மக்கர் பண்றதால வியாபாரிங்க அகலக்கால் வெக்காம இருக்கறது ரொம்ப நல்லது.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*



துணிச்சலும் தன்னம்பிக்கையும் குற்றாலமாப் பிரவகிக்கிற வாரம். அப்புறம் வெற்றிக்கு என்ன பஞ்சம்? சிலருக்கு எதிர்பாராத வெற்றிகள் கூட தேடி வந்து சேரும். பணம் தாராளமாகவே புழங்கும். உல்லாசமும் கேளிக்கையுமா ஜமாய்ப்பீங்க. ஆனாலும் குடும்பத்தில் சில பிரச்னைகள் உருவாகவே செய்யும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. வீண் வம்புக்கெல்லாம் போகவே போகாதீங்க.




விருச்சிக ராசிக்காரரான, பா.ஜ.க பிரமுகர் டாக்டர் மைத்ரேயனுக்கு திடீர் அதிர்ஷ்டம் ஏதோ அடிக்கப் போவுதாம்!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*


நீங்க உங்க பராக்கிரமத்தைக் காட்டப் போற வாரம். எஞ்ஜினியர்கள், இயந்திரப் பணியாளர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரும். கலைத்துறையினருக்குப் புகழும் பாராட்டும் உறுதி. வெளிநாட்டுலேர்ந்து உற்சாகமான சேதி வரும். நண்பர்கள் உதவுவாங்க. போட்டி, பந்தயத்திலெல்லாம் ஓரளவுக்கே ஆதாயம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் எச்சரிக்கையா இல்லாட்டி, ஆபீஸர்கிட்ட டோஸ் வாங்க வேண்டியிருக்கும். தாயின் உடல் நலனில் கவனம். அதனால செலவு வரவும் சான்ஸ் இருக்கு.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*



கிரக சஞ்சாரம் சாதகமா இருக்கறதால உங்க காரியங்களெல்லாம் சுலபமா நிறைவேறும். உங்க சாமர்த்தியம் காரணமா ஓரிரு பெரிய திட்டங்களே நிறைவேறும். பணப் பிரச்னை இருக்காது. ஸ்பெகுலேஷனும் ஆதாயமாவே இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கறதுக்கான சான்ஸ் பிரகாசமாவே இருக்கு. புதுப் புதுப் பொருள்கள் வாங்கற யோகம் இருக்கு. வியாபாரிகள் மாத்திரம் அகலக் கால் வைக்கக் கூடாது. தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் அவசியம்.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*



நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கறவங்களோட நிர்வாகத் திறமை பளிச்சினு வெளிப்படும். வியாபாரத்தில் பளிச்சினு ஒரு அபிவிருத்தி தெரியும். சட்டம், காவல் துறையினருக்கு எச்சரிக்கை அவசியம். மருத்துவர்களுக்கு எல்லா ஆபரேஷனும் வெற்றிகரமாவே முடியும். கூடப்பிறந்தவங்களால சில பிரச்னைகள் வரலாம். அதனால மனஸ்தாபமும் வரலாம். நிதானம் காட்டுங்க. பயணத்திலும் எச்சரிக்கையா இருங்க.

பாரிஸ்-பை-நைட்

உலகின் ஃபேஷன் சென்டருக்குள் போர்த்திய புடைவையுடன் பிரவேசிப்பது வேடிக்கையாயிருந்தது. பாரீஸ் – ஃப்ரான்சின் ஒய்யாரத் தலைநகர். அரசு பீடம். 'ஸோன்' நதி பாயும் மதுரமான மாநகர். 'பாரிஸி' என்ற பழங்குடி மக்களின் இருப்பிடமாக இருந்ததால் 'பாரிஸ்' என்ற காரணப் பெயர்!

பாரிஸிகள் 'ஸோன்' நதியை வழிபட்டனர். சில ரோமானியர்கள் இதன் வடகரையை இருப்பிடமாக்கிக் கொண்டனர். அப்பகுதியில் நிறைய பல்கலைக்கழகங்களும், வலதுபுறத்தில் 'கமர்ஷியல் சென்டர்'களும் உருவாகின. இன்று பாரிஸில் இருபது தொகுதிகளுள்ளன. முதலாவதில் 'டவுன் ஹால்' உள்ளது; பிறிதொன்று முழுவதும் டிஸ்கோ சென்டர்கள்; மற்றொன்றில் அலுவலகங்கள்; ஏனைய ஒன்றில் யுனிவர்ஸிடிகள்... இப்படியே ஒவ்வொன்றும் ஒரு பிரத்யேக வகை. நமது இலக்கு தெரிந்திருந்தால், செல்ல வேண்டிய இடத்தை நிர்ணயிப்பது சுலபம்.

அபார்ட்மெண்டுகளின் விலை வானளாவியதால், சொந்த வீட்டில் பெரும்பாலும் பணக்காரர்களே வசிக்கின்றனர். மற்றவர்கள் அலுவலக நிமித்தமாக வந்து செல்பவர்கள். ஒரு சாதாரண 'லொகாலிடி'யில் மிகச் சாதாரண டபுள் பெட்ரூம் ஃப்ளாட்டுக்கு, மாத வாடகை 36,000 ரூபாயாம்!

நகரத்துக்குச் சொந்தமானது ஒரு மிலியன் கார்கள்தான். ஆனால் தினமும் இன்னொரு ஒன்றரை மிலியன் வெளியூர்களிலிருந்து இங்கே வந்து போகிறது. பொல்யூஷன் மிக அதிகம் என்று மக்களை கார் உபயோகிக்காமலிருக்க அரசு யோசனை சொல்கிறது.

நகரில் நுழையும்போதே கண்ணில் பட்டது 'சுதந்தர தேவி சிலை' – அமெரிக்கர்களின் அன்புப் பரிசாம். அங்கு உள்ளது போலவே கொஞ்சம் சிறிய வடிவில் இருக்கிறது. பின்னணியில் பாரிசின் தனிப் பெருமையான 'ஈஃபிள் டவர்' பளிச்சிட்டது!

அடுத்து, பஸ் அந்தச் சாபக்கேடான சப்வேயின் உள்ளே நுழைந்தபோது, எல்லோரும் 'ச்சொ....ச்சொ... ஓ நோ..' என்றெல்லாம் அரற்றத் துவங்கினர். அடடா... டயானா-டோடி ஜோடிக்கு முடிவு கட்டிய டன்னலல்லவா? இப்போது அங்கு 'பாப்பராஸி'யின் கவடேயில்லாமல், வாகனங்கள் நிதானமாகச் சென்று கொண்டிருந்தன. விபத்தில் இறந்த இடத்திற்கு மேலாக 'டயானா ஷ்ரைன்' ஒன்று உருவாகியுள்ளது. அங்கே அணையா விளக்குடன், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தும் கூட்டம்! அந்த இடம் கிட்டத்தட்ட ஒரு 'டூரிஸ்ட் ஸ்பாட்' போல மாறி விட்டது;



• ஈஃபிள் டவர்





• இரவில் பாரிஸ்

வருவோர் போவோரெல்லாம் ஒரு நிமிடம் நின்று கண்ணீர் + மலர் அஞ்சலி செய்கின்றனர்.

டன்னலைக் கடந்ததும் தரிசனம் தருவது தங்கக் குதிரையின் மீது வீற்றிருக்கும் "ஜோன் ஆஃப் ஆர்க்!" பாரிஸிலுள்ள முப்பது சொச்ச பாலங்களில் மிகப் பழமையானதற்கு 'நியூ பிரிட்ஜ்' என்ற சம்பந்தமில்லாத பெயர்!

நாங்கள் தங்க வேண்டிய ஹோட்டல் 'ஃப்ரான்க் டூரை' வந்தடைந்த போது மாலை நான்கு மணி. பல மாடிகள் கொண்ட பிரம்மாண்ட ஹோட்டல்.

இன்றிரவு "பாரிஸ்-பை-நைட்; 'பிரமாதமாக காபரே ஷோ!" என்று மரியா அறிவித்த மாத்திரத்தில், பல முகங்கள் பிரகாசமாயின!

டூரில் 'ஆப்ஷனலாக' இருந்த சில விஷயங்களில் இதுவும் ஒன்று. அதாவது ஷேண்டுமென்றால் போகலாம்; (தனி சார்ஜ்); இல்லாவிட்டால் 'நோ' சொல்லி விடலாம். ஒரு ஈ காக்காய் மறுக்க வேண்டுமே? எல்லோரும் "யா"தான்!

கல்கத்தாக்காரி, அன்று காலை நைஸில் வாங்கியிருந்த ஜிலுஜிலு டாப்ஸை போட்டுக் கொண்டு பளபளப்பாயிருந்தாள். 'நாம காபரே பார்க்கத்தானே போறோம்?' என்று அவள் கணவன் பெங்காலியில் கவலைப்பட்டதும், 'நீங்க எதுக்குப் புது 'ஸ்விஸ்' பனியனைப் போட்டுக்கணும்?' என்று அவள் பதிலடி கொடுத்ததும் எங்களுக்குத் தெளிவாகவே புரிந்தது; (இதற்கெல்லாம் மொழி தெரிந்திருக்க வேண்டுமா என்ன?)

அமெரிக்கக் கிழவர் படு'ட்ரிம்மாக' ட்ரெஸ் பண்ணிக் கொண்டிருந்தார். 'பாட்டியும் கூட வர்றாப்புலயா?' என்று ஸ்பானிஷ் இளைஞர் கிண்டலடித்தான்.

'மனைவியை அழைத்துக் கொண்டு காபரே பார்க்க வரும் பைத்தியங்கள் நாங்களாகத்தானிருக்கும்' என்று ஒவ்வொரு இந்தியக் கணவரும் முணுமுணுக்கையில், புனாவிலிருந்து வந்திருந்த டாக்டர் ஜோடி, தங்கள் இளம் பாலகன்... அல்ல... இந்த மாதிரி விஷயங்களில் பாலறாவாயன்... பத்தோ பதினொன்றோ வயதான தங்கள் மகனையும் கூடவே அழைத்து வந்து, இவர்கள் முகத்தில் கரியைப் பூசினார்களே, அதை என்னவென்று சொல்ல?

"என்ன... இவனுமா?" என்று கேட்காதவர்கள் இல்லை! 'அவனுக்கிதெல்லாம் சகஜம்' என்று அவன் தாய் சர்வ சாதாரணமாக பதிலளித்தபோது, நாங்கள் பாரிஸுக்கு வந்தும் இந்தியத்தனமாக நெளிந்து கொண்டிருக்கையில், இவர்கள் இந்தியாவிலேயே பாரிஸ் ஸ்டைலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே என்ற அதிர்ச்சியில், 'நீ எங்கியோ போயிட்டம்மா' பார்வையை மட்டும் பதிலாக அளித்தோம்.

பிகாலே, மவுன்ட்மாரே போன்ற இடங்களெல்லாம் மும்பை போல இரவெல்

ஜெயஸ்ரீ ராஜ்

லாம் விழித்திருக்குமாம். இரவில் பாரீஸ் ஜகஜ்ஜோதியாய் மின்னியது.

வழியெல்லாம், எதிர்பார்த்தபடியே நிறைய இளம் ஜோடிகள். பல இளைஞர்கள், தங்கள் கேர்ல் ஃப்ரெண்ட் என்ன ஷாம்பூவை உபயோகிக்கிறார்கள் என்ற ஆராய்ச்சியில் உலகை மறந்து ஈடுபட்டிருந்தார்கள். ஒருவன் ஒவ்வொரு முடியாக எடுத்து மோந்து கொண்டிருந்தான். (நிறைய ஷாம்பூக்களின் கலவை போலும்!)

'லீடோ' ஷோதான் காபரேக்களின் சக்கரவர்த்தி! நாங்கள் சென்றதற்கு 'ராஜா' ஸ்டேட்டஸ் கொடுக்கலாம். நம்மூர் சர்க்கஸ் டெண்ட்டுக்குள் நுழைவது போன்ற உணர்வு; கான்வாஸில், 'ஸ்டார் பர்ஃபார்மர்ஸ்' பற்றிய விளம்பரங்கள். வாயிலிலேயே வரவேற்புக் குழு. உள்ளே அழைத்துச் சென்று, வரிசையாகப் போடப்பட்டிருந்த மேஜை நாற்காலிகளில் அமர்த்தியது. ஏற்கெனவே பிறிதொரு சுற்றுலாக் குழு, முன் வரிசைகளை எல்லாம் பிடித்துக் கொண்டிருந்ததில் எங்களுக்கு உள்ளூர எரிச்சல். 'அடிச்சுக்கோ பிடிச்சுக்கோ' ஸ்டைலில் சிலர் மீதமிருந்த முக்கிய இடங்களை ஆக்ரமிக்க, இந்தியர்கள் தயங்கித் தத்தளிக்க, மரியா, உயர்வாயிருந்த ஒரு வி.ஐ.பி. பிளாட்ஃபாரமில் ஸ்பெஷல் இருக்கைகளைத் தருவித்து எங்களை அமர்த்தினாள்.

முதலில் எல்லோருக்கும் ஷாம்பெய்ன் வழங்கப்பட்டது; ஒரு கோரஸ் பாடலுடன் நிகழ்ச்சி துவங்கியது. அடுத்து, ட்ரபீஸ் ஆர்டிஸ்டுகள் போல் ஆண்களும் பெண்களுமாக அந்தரத்தில் ஊசலாடி, தாவி, குட்டிக்கரணம் அடித்து விளையாடினார்கள். சர்க்கஸுக்கும் இதற்கும் ஒரே வித்தியாசம், இவர்கள் போட்டிருந்த உடைகள் உடலோடு ஒட்டிய 'ட்ரான்ஸ்பரண்ட்' ஆடைகள்!

இதன் பிறகு ஆரம்பித்தது உண்மையான காபரே. உடல் முழுதும் ஆடையுடன் வந்து, ஒவ்வொன்றாகக் கழற்றி வீசினார்கள். (நல்லவேளை... முழு நிர்வாணமில்லை.)

ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தீம்! சிண்ட்ரல்லா, ஸ்நோவைட் கதைகளைக் கூட விட்டு வைக்கவில்லை. 'பார்பி' பொம்மைகள் போல் அணிவகுத்து நின்றது அழகாக இருந்தது. நடனமாடிய அத்தனை பெண்களும் ஒரே அளவுகளில் - உயரம், எடை, சுற்றளவு உள்பட இருந்தது ஆச்சர்ய அழகுதான்! 'கலை'க் கண்களுடன் பார்த்தால், இறைவனின் அற்புத சிருஷ்டிகளை ஆராதிக்கவே தோன்றும்.

'ஒரு மாதிரி'யாக இரண்டு மணி நேரத்தை ஓட்டிய பின், 'ஒரு சாண் வயிற்றுக்கென்று இவ்வளவு அவலமா' என நினைத்தவாறு வெளியேறுகையில், அவர்கள், "எப்படி இருந்தது?" என விசாரித்ததற்கு, "ரொம்ப நன்றாயிருந்தது" எனச் சொல்லி வைத்தோம். ஆளுக்கொரு ஆடியோ காசட் வேறு கொடுத்தார்கள் - அந்தந்த நாட்டு மொழியில் நன்றி தெரிவித்தார்கள்! இந்தியர்களுக்கு தன்யவாத்!

திரும்பிய பின், ஹோட்டல் ரூமில் டீ.வி.யை ஆன் செய்தால்... 'வெல்கம்' என்ற அறிவிப்புடன் எங்கள் பெயர்கள்! தொடர்ந்து, ஒரு அதிபயங்கர நீலப்பட ட்ரெயிலர் அரை நிமிடத்துக்கு ஓடியது - 'இதுபோல பார்க்க வேண்டுமென்றால்... இத்தனை ஃப்ரான்குகள் மானேஜரிடம் டெபாஸிட் செய்யவும்' என்ற அறிக்கை. ஒரு பயங்கரத்திலிருந்து மீளுமுன்பே மற்றொன்றா? டீ.வி.யை மூடி விட்டு கண்ணயர்ந்தோம்! கனவில் காபரே பெண்களோ, ஆண்களோ எட்டியே பார்க்கவில்லை!

(தொடரும்)



"நேற்று என்னோட ஓடி வருவதாக சொல்லிட்டு ஏன் உமா நீ வரவேயில்லை?"

"நேற்றைக்குன்னு பார்த்து என் அம்மா என் உள்ளங்காலில் மருதாணி இட்டு விட்டாங்க! அது அழிஞ்சுடக் கூடாதேன்னு தான் வரலை."

— பாஸு

சுமி சூப்பர் மார்க்கெட்

போட்டோ கவிதைகள்!



அப்பா! ஒரு வாரம் நான் ஊர்ல இல்லைன்னா நாட்டுல என்னெல்லாம் நடந்துடுது? கிரிக்கெட் மேட்ச்களே பரம் ஒரு பக்கம். குங்குமப் பொட்டு விவகாரம் ஒரு பக்கம். சின்னி ஜெயந்த் பிரச்னை ஒரு பக்கம்... முதல் ரெண்டு சமாசாரங்களை விட, சின்னி ஜெயந்தோட சன் டீ.வி மிமிக்ரி சமாசாரம் பொதுமக்களை ரொம்ப பாதிச்சிருக்கிறதா தெரியுது.

காமெடி இன்னிக்கு எத்தனை கேவலமா போயிட்டிருக்குங்கறதுக்கு தனியா உதாரணம் ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. டபுள் மீனிங் வசனங்கள் மலையேறி, பச்சையை, பச்சையாவே காட்டற ட்ரெண்ட் வந்தாச்சு.

சின்னி ஜெயந்த் மாதிரியான பாபுலர் ஃபிகர்களுக்குக் குறைஞ்சபட்ச சமூக அக்கறை கட்டாயம் வேணும். அதுவும், லட்சம் பேர் பார்க்கற டீ.வில ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இழிவு படுத்தற மாதிரி நிகழ்ச்சி நடத்தறது சகிக்க முடியாத விஷயம். செய்யறதை செஞ்சிட்டு, மன்னிப்புக் கேட்டு நழுவிடப் பார்க்கறது புத்திசாலித்தனமில்லை. நானே பல நிகழ்ச்சிகள்ல இவர் வாரியாரைக் கிண்டல் பண்றதைப் பார்த்து வருத்தப்பட்டிருக்கேன். அடுத்தவங்களை ஹிம்சை பண்ணித்தான் ஹ்யூமர் கொண்டு வர முடியும்னா, அப்படியொரு ஹ்யூமர் தேவையே இல்லை. ஜெயலலிதா, சுப்ரமணியசாமி அறிக்கைகளைப் பாருங்க. எவ்ளோ அழகா, பிரமாதமான சென்ஸ் ஆஃப் ஹ்யூமர் தெரியுது! யாரையாவது 'ஹர்ட்' பண்ணுமா அதெல்லாம்? சின்னி ஜெயந்த், இவங்ககிட்டேருந்தெல்லாம் 'ஹ்யூமர் டெக்னாலஜி' கத்துக்கலாம்.

* * *

'விரையும் பேருந்தில்
விடாது குழந்தையழ,
முந்தியோடு
கூச்சத்தையும்
விலக்கும் தாயன்பு.'

– யுகபாரதியோட இந்தக் கவிதை சமீபத்தில் நான் ரொம்ப ரசிச்ச ஒரு 'விஷுவல்' ஐட்டம். ரொம்பச் சின்னச் சின்ன சொற்கோர்வைகள் உதவியோட அழகழகான உலகங்களைக் கண் முன்னால நிறுத்தற சாமர்த்தியம் சமீபகாலத்துக் கவிஞர்கள்ல, இவர் கிட்ட பிரமாதமா இருக்கு.

'... அவன் பேர்
பைத்தியமென்பர் எல்லோரும்.
சாக்கடையில் காலலம்பி
சாலையோரக்
குப்பைகளிடையே
தானுமொரு காகிதமாய்
தூங்கிச் சுருள்வான்...'

– இதைப் படிக்கும் போதே மனசுல அந்தக் காட்சி எப்படி ஒரு போட்டோ மாதிரி விழுது பாருங்க.

யுகபாரதியோட 'மனப்பத்தாயம்' தொகுதி, (ஷ்யாம்லால் பதிப்பகம், 23, பாப்பாத்தி அம்மாள் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 24) ரொம்ப முக்கியமானதா எனக்குத் தெரியுது. சிறு பத்திரிகைகள்ல இப்ப வர்ற யதார்த்தக் கவிதைகளை நாலு வரி கூட அலுப்பில்லாம படிக்க முடியறதில்லை. டீடெயில்ஸ் தரேன் பேர்வழின்னு நின்னான், நடந்தான், உக்கார்ந்தான், மார்க்கெட் போறான்னு பயங்கர ஜவ்வடிக்கறாங்க.

For a change, கவிதைல அழகழகா ஆர்ட் ஃபிலிம் காட்டறார் இந்த இளைஞர்.

* * *

ரெண்டு வாரம் லெட்டர்ஸ் ஒண்ணும் படிக்கவே முடியலை. ஹைதராபாத் போயிட்டு வந்த கையோட அவசர அவசரமா புரட்டினதுல நம்ம மன்றத்தோட சீனியர் உறுப்பினர் சிட்லபாக்கம் ஷண்முகசுந்தரம் என் மேல கடும் கோபமா இருக்கறது தெரிஞ்சது. வாசகர்களுக்கு (ஐ மீன், அவங்க எழுதற விஷயங்களுக்கு) முன்ன மாதிரி நான் நிறைய இடம் ஒதுக்கறதில்லைன்றது அவர் குற்றச்சாட்டு. இப்படி ஒரு அபாண்டம் சொல்லலாமான்னு சக உறுப்பினர்கள் அடுத்த வாரம் வரிஞ்சு கட்டிட்டு எழுதப் போறாங்க(ன்னு நினைக்கறேன்.)

நான் ஹைதராபாத் வரப் போறேன்னு தெரிஞ்சதும் நம்ம மகளிரணிப் பிரமுகர் லாவண்யா மூட்டை முடிச்சோட இங்க அம்மா வீட்டுக்குக் கிளம்பி வந்துட்டாங்க. ஏதுடா, தி க்ரேட் சுமி வராளே, நம்ம ஊருக்கு– ஒரு வரவேற்பு விழா நடத்துவோம்ங்கற எண்ணம் கொஞ்சமானா வேணாம்? இந்த அழகுல, 'என்னை மேடம்னு கூப்பிடாத சுமி, வயசு ஜாஸ்தியா தெரியுது'ன்னு கொஞ்சலா லெட்டர் வேற! வர்ற கோபத்துல... ஓகே! இனி மேடம்னு கூப்பிடலை. 'மாமி'ன்னு கூப்பிடறேன். ஓகேவா லாவண்யா மாமி?

— சுமி



• சடகோபன் ரமேஷ்

அசத்திய அக்ரம்!

பால் தாக்கரே முகத்தை எங்கு கொண்டு வைத்துக் கொள்ளப் போகிறார்?

சென்னை டெஸ்ட் ஆரம்பிப்பதற்கு முன் பயிற்சியின் போது பாக். அணி கேப்டன் அக்ரம் தன் சட்டையில் நமது தேசியக் கொடியைக் குத்திக் கொண்டு வந்தது பேரதிசயம். 'எனிப் படி?' என்று கேட்டபோது அவர் சொன்ன பதில்: "கிரிக்கெட்டால் மட்டுமே இரு நாடுகளுக்கிடையிலான பகையுணர்ச்சியைப் போக்கடிக்க முடியும். அதனால்தான்!" – இந்த மனப்பக்குவம் நம் அரசியல்வாதிகளுக்கு அடுத்த நூற்றாண்டிலாவது வரவேண்டும்.

● சிதம்பரம் ஸ்டேடியம் நிரம்பி வழிந்தது. ஏகப்பட்ட செக்யூரிடி; கட்டுப்பாடுகள். கறுப்பு நிறச் சட்டை அணிந்து வந்த (தற்செயலாகத்தான்) சுமார் நூறு பேர் வலுக்கட்டாயமாகச் சட்டையைக் கழற்றச் செய்யப்பட்டனர். ஸ்டேடியத்தில் ஆங்காங்கே சட்டையில்லாத ரசிகர்களைக் காண முடிந்தது!

● "எங்கள் நாட்டில் நவாஸ் ஷெரீபுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு, இங்கே எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது!" என்று வியந்தார்கள் பாக். வீரர்கள்.

● 'பாஸ்' இல்லாமல் அரங்கில் ஒரு கொசு வால் கூட நுழைய முடியவில்லை. அத்தனை கெடுபிடி. தமது மகள் திருமணத்தை முடித்து விட்டு, ஓடி வந்த தநா. கிரிக்கெட் சங்கப் பொருளாளர் பிரபாகர்ராவ், அவசரத்தில் பாஸை மறந்துவிட, அவருக்கும் 'நோ' சொல்லி விட்டார்கள்! கபில் தேவ் கூட 10 நிமிடம் வெளியே நிற்கும்படியாகி விட்டது.

● "ஸ்ரீநாத்துக்கு உடம்புக்கு என்ன?"– பலர் தமக்குள் கேட்டுக் கொண்ட கேள்வி இது. மனிதர் அடிக்கடி ஏதோ டாப்லெட் விழுங்கிக் கொண்டே இருந்தார்.

● பல ஆண்டுகளுக்குப்பின் (ஸ்ரீகாந்துக்குப் பின்) இந்தியாவின் துவக்க ஆட்டக்காரராகக் களமிறங்கிய முதல் தமிழக வீரர் சடகோபன் ரமேஷ்தான் ரசிகர்களின் மொத்த கவனத்தையும் கவர்ந்தவர். முதல் நாள் ஃபீல்டிங்கில் பிரமாதப்படுத்திய சூட்டோடு, ஓபனிங் இறங்கி, விறுவிறுவென்று முப்பது ரன்களும் சேர்த்துவிட்ட இந்த 22 வயது இளைஞர், குரு நானக் கல்லூரி மாணவர். குடும்பமே கிரிக்கெட் குடும்பம். மூன்று வருடங்கள் முன்பு இவர் ரஞ்சிப் பந்தயங்களில் அறிமுகமான போதே தேர்வுக்குழுவின் கடைக்கண் பார்வையில் பட்டவர். இப்போதுதான் நேரம் கூடியிருக்கிறது. ஸ்ரீநாத்தும் திராவிடும்தான் இவர் அணியில் நுழையக் கடுமையாக சிபாரிசு செய்தவர்கள் என்பது போனஸ் செய்தி.

● பாக். வீரர்களுக்கு ஒரே ஒரு பிரச்னை: ஹோட்டல் அறையை விட்டு வெளியே போக முடியவில்லை. எப்படியோ டபாய்த்து, சையத் அன்வர் மட்டும் போதிய பாதுகாப்புடன் அண்ணாசாலை மருந்துக்குப் போய் வந்து விட்டார்.


● மேட்ச் பார்க்க வந்த பிரபலங்களில் முக்கியமானவர்கள் சிவாஜி, பிரபு, அன்பரசு, கார்த்திக்.

● ஆரம்பத்தில் பயந்தாலும் தநா. கிரிக்கெட் சங்கத்துக்கு இந்த மேட்ச் கொழுத்த லாபம் தந்திருக்கிறது. (12 கோடி லாபமாம்.)

— சிம்மம்

படம் : உமாமணி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063.
TEL & FAX : 2376129
Cell Phone : 98410 50464

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	60,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

Registered with the Registrar of Newspaper of India under No. 10411/57 * Registered No. TN / MS (S) M4092-99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 161 * Registered as a Newspaper in Srilanka

